www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
Jude
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර්
ஜன.24—30,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 293

## மாகாணசபைத் தேர்தல் களம்

## வெற்றி யார் கையில்



## சென்ற ஆண்டின் நாசகார மனிதர்



## ஒரு நடிகையின் வாக்குமூலம்

## போட்டி யார்?

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நாசகார மனிதர் '98

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

சென்ற ஆண்டின்
நாசகார மனிதராக
பில் கிளின்ரனை
'முரசு'
அகௌரவிக்கிறது!

'அணு ஆயுத தடை'
'உலக சமாதானம்'
என்று உதட்டளவில்
உரத்து முழங்கியபடி
அணு ஆயுதம் குவிப்பதும்
அமெரிக்காதான்!
உலக சமாதானத்துக்கு
சவாலாக இருப்பதும்
அமெரிக்காதான்!

அமெரிக்காவின்
வல்லாதிக்கத்திற்கு முன்னால்
ஏனைய நாடுகள்
வாய் மூடி மௌனித்திருப்பதே
அமெரிக்காவுக்குப் பிடித்த
சமாதானம்!

அமெரிக்காவின்
மேலாதிக்கத்துக்கு
சவாலாக மாறக்கூடிய
நாடுகளை எல்லாம்
நிராயுதபாணியாக்குவதற்கே
அணு ஆயுதத் தடை பற்றி
அமெரிக்கா அலறுகிறது!

சென்ற ஆண்டில்
இந்தியா
அணுக்குண்டு செய்ததும்
அமெரிக்கா வெகுண்டது!
பில் கிளின்ரன்
சமாதானத்தின் பிதாவாக
நாடகமாடினார்!

அமெரிக்கா அவ்வாறு
கண்டித்தது ஏன்?
அணுக்குண்டு கூடாது
என்பதால் அல்ல;
தனக்கு சவால்கள்
தோன்றக் கூடாது
என்பதற்காகத்தான்!

உலகுக்குப் போதிக்க
முன்பாக
அமெரிக்கா தன்னை
மாற்றிக் கொள்ளட்டும்!

தன் வசமுள்ள
அணுக்குண்டுகளையும்
நியூத்திரோன் குண்டுகளையும்
பகிரங்கமாக
சர்வநாசப்படுத்தட்டும்!

உச்சி முதல்
உள்ளங்கால் வரை
அழிவாயுதங்களையே
தரித்து நிற்கும்
ஒரு வல்லரசுக்கு
உலகுக்குப் போதிக்கும்
தகுதி கிடையாது!

ஈராக்கின்
அணு ஆயுதங்களையிட்டு
அமெரிக்கா கவலைப்படுவது
ஏன்? எதற்கு?

அரபு உலகத்தை
ஒன்றுபடுத்தும் சக்தியாக
ஈராக்கும், சதாமும்
மாறிவிட்டால்
மத்திய கிழக்கில்
தன் செல்வாக்கு
சிதைவுண்டுபோகும்
என்று அஞ்சுகிறது
அமெரிக்கா!

அரபு உலகின்
ஒற்றுமைக்கு
வேட்டு வைக்கத்தான்
சவுதியைத் தளமாகப் பாவித்து
ஈராக்கைத் தாக்குகிறது!

ஐ.நா.சபையின்
கண்ணியத்தைக் காப்பது
என்பதெல்லாம் வேஷம்!

ஐ.நா.சபை கூறியும்
செவியில் வாங்காமல்
ஈராக் வான்வெளியில்
அமெரிக்க விமானங்கள்
தொடர்ந்து ஊடுருவுகின்றன!

உலகின் கண்டனங்களை
அமெரிக்காவும்
பில் கிளின்ரனும்
புறங்கையால்
அலட்சியம் செய்துள்ளனர்!

மொத்தத்தில்–
நாடுகளை மிரட்டுதல்
சிண்டு முடிதல்,
தன்னிச்சையான தடைகளை
விதித்தல்,
குடிமக்கள்மீது
கொலைகாரத் தாக்குதல் நடத்துதல்
போன்ற நாசவேலைகள்
அமெரிக்காவுக்கு அத்துப்படி!

அமெரிக்காவின்
வல்லாதிக்கக் கொள்கையின்
இன்றையப் பிரதிநிதியான
பில் கிளின்ரன்.
நாசகார மனிதராக
அகௌரவிப்பதற்கு
முற்றிலும் பொருத்தமானவரே!

மோனிகா விவகாரத்தில்
கிளின்ரனை
புரட்டி எடுக்கும்
அமெரிக்க ஜனநாயகம்.
ஈராக் மக்களைக்
கொன்று குவித்த
விமானத்தாக்குதல் பற்றி
மூச்சுக் காட்டவில்லை!

ஆகவே. பில் கிளின்ரன்
மட்டும்தான் மோசம்–
அமெரிக்கா சுத்தம்
என்று அர்த்தமல்ல!

உலகைக் கட்டியாளும்
அமெரிக்காவின் இலட்சியத்தை
அந்த நாட்டு ஜனாதிபதிகள்
முன்னெடுக்கின்றனர்!

எனவே–கிளின்ரன்மீதான
எமது கண்டனம்
அமெரிக்கா மீதான
கண்டனமே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆறுதல் தரும் ஆறுமுகம்

தன்னை வேண்டித் துதிக்கும் பக்தர்களின் பிரார்த்தனைகளை நிறைவேற்றி அவர்களுக்கு ஆறுதலையும், மன அமைதியையும் தருபவர் ஆறுமுகக் கடவுள். 'ஷண்முகர்' என்பதைத்தான் அழகு தமிழில் ஆறுமுகர் என்று சொல்கின்றோம். 'ஷண' என்றால் ஆறு. ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்கள் அருளியுள்ள ஆறுவகை வழிபாட்டிற்கு 'ஷண்மத வழிபாடு' என்று பெயர்.

ஆகாயத்திலே ஆறு நட்சத்திரங்கள் கூட்டாகவிருக்கும் இந்த ஆறு நட்சத்திரங்கள்தான் (நட்சத்திரங்களின் அதி தேவதை) கார்த்திகைப் பெண்களாக ஆறுமுகனுக்கு பணிவிடை செய்தமையையும் புராண வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

திதியிலே ஆறாவதாக வருவது ஷஷ்டி. ஷஷ்டிக்கு முருகப் பெருமானால் அதிகப் பெருமை. ஷஷ்டியிலே விரதமிருந்து கந்தர் ஷஷ்டி கவசத்தைப் பாராயணம் செய்யும் அடியார்கள் பலவித துன்பங்களினின்றும் விடுபட்டுள்ளதை அனுபவ வாயிலாக அறிந்தவர்கள் கூறக்கேட்கின்றோம்.

'குன்று தோறாடும் குமரன்' என்று முருகன் பெயர் பெற்றிருப்பதை சிறப்புடன் விற்றிருக்கும் எத்தனையோ முருக தலங்கள் மூலம் நாம் அறியக் காண்கின்றோம். அதிலும் ஆறுபடைவீடென்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஆறுபடை சேத்திரங்களின் மகிமைகளை அறியாதோர் இக்கலியுகத்தில் (புராண வாயிலாக முருக பக்தர்கள்) இல்லை என்றே சொல்லலாம்.

'சரவண பவ' என்னும் ஆறெழுத்துத்தான் குமரக்கடவுளின் 'சடாட்சர' மந்திரமாகும். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸரியம் எனும் ஆறு பகைகளை, ஆறெழுத்து மந்திரத்தை ஓதி ஆறுமுகக் கடவுளின் அருளால் வென்று, வாழ்க்கையிலே உயர்ந்த வாழ்க்கையாக, உன்னத வாழ்க்கையாக வாழ்வதற்கு வழி வகுத்துக் கொள்வோம். எல்லாவற்றிலும் ஆறாக உள்ள முருகன் நம்மனதிலுள்ள ஆறாத குறைகளை எல்லாம் நீக்கி இன்ப ஆறாக பெருக்கெடுத்துப் ஓடவைப்பார். நம்புங்கள் முருகன் நல்லவன்.

தொகுப்பு:- அ.அரசரெத்தினம், சேனையூர்.06, மூதூர்.

## ஆன்மீகம்



## குர்ஆன் ஓதுவதற்குரிய மாதம்

எந்த மனிதர்கள் உலக விஷயங்களின் ஈடுபாடுகளில் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கின்றனரோ அவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. பதினொரு மாதங்களை வீணாக்கிய பின் இந்த ஒரு மாதத்தை சரியான முறையில் நாம் பயன்படுத்திக் கொள்ள முயல வேண்டும். தொழில் துறையில் அலுவலகங்களில் வேலையிலுள்ளவர்கள் சுபஹு நேரத்திலிருந்து காலை ஏழு மணி வரையிலாவது புனித ரமழான் மாதத்தில் குர்ஆன் ஷரீபை ஓதுவதில் நேரத்தைச் செலவிடுவதில் சிரமம் எதுவும் ஏற்படப்போவதில்லை.

விவசாயம் செய்பவர்கள் வேலை நேரங்களை மாற்றிக்கொள்வதால் அதற்குப் பரிகாரமாக மற்றொரு நேரம் கிடைக்காது என்ற சூழ்நிலை அவர்களுக்கு இல்லை. வயலில் உட்கார்ந்து கொண்டே குர்ஆனை ஓத முடியாது என்ற சூழ்நிலையும் அவர்களுக்கு இல்லை. (விவசாயிகள் முயன்றால் இவ்விரு நிலைகளில் ஏதேனுமொரு முறையில் குர் ஆனை ஓதுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் இதில் ஏதும் சிரமம் கிடையாது. புனிதமான இம்மாதத்தில் கடையின் நேரத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம். அல்லது கடையிலிருந்து கொண்டே வியாபாரத்துடன் குர் ஆனை ஓதிக்கொண்டிருக்கலாம். இப்படியான முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் புனித ரமழான் மாதத்தைக் கண்ணியப்படுத்திய நல்லவர்களின் கூட்டத்தில் சேர்ந்து கொள்வோமாக.

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.290



**பரிசுக்குரிய கவிதை**

### எல்லையற்ற மகிழ்ச்சி

மாண்டுவிட்டார்
தந்தையென்று
மாய்ந்திருந்த வேளையிலே
மீண்டு விட்ட தந்தை கண்டு
மிதக்கின்றார் மகிழ்ச்சியிலே...!

ஜி.சுபாங்கன்- பிரதான வீதி,
வெல்லாவெளி (கி.மா)

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### அகமாற்றம்

ஆசைக்கொரு பெண்;
அன்புக்கொரு ஆண்!
அகம் இனித்தது அன்று!
ஆசை போய்-அரும்புகளும்
போனபின்
அகம் கசக்கிறது இன்று!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### வந்துவிட்டார்!

'செம்மணியில் புதைத்தனரோ?
வெலிக்கடையில் அடைத்தனரோ?'
என்று கலங்கி நாங்கள் கண்ணீர்விட..
காணாமற் போயிருந்த
கண்கண்ட எங்கள் தெய்வம்
கப்பலிலே வந்துவிட்டாரின்று!

அ.சந்தியாகோ- அசோகா வித்தியாலயம், கண்டி.

### ம(றை)றந்த சோகங்கள்

செம்மணிப் புதைகுழியும்
ஷெல்லடியில் மரணங்களும்
வன்னி முகாம்களிலே
வாடும் மழலைகளும்
எண்ணி எண்ணி நான்
ஏங்கி அழுததெல்லாம்
கண்மணியே உன் சிரிப்பில்
காணாமல் போனதடி!.

சி.மு.சுந்தரேசன்-மஸ்கெலியா.

### விடுதலை

கொடுமை பொறுத்து கூடு உடைந்து
புறப்பட்டு வந்த புத்திசாலியை-
பிடுங்கி எடுப்பது பிள்ளைகள். மனைவி
சொர்க்கம் காண்கிறார் சுமைதாங்கி.

திருமதி செ.பிரேமசியாமளா-கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13.

### சொர்க்கம்

இந்த
உலகத்தின்
இணையிலா
சொர்க்கம்
இதுதான்!

ரி.பன்னீர்செல்வம்-
பசறை.

### உறவுகள்

யுத்தம் தருவது
பேரழிவை!
பேரன்பு தருவது
புது உறவை!

அ. அச்சுதன்-சேனையூர்.

### சுமை

இளமையில்
உங்களைச்
சுமப்போம்...!
முதுமையில்
எங்களைச்
சுமப்பீர்களா...?

இரா.இராமகிருஷ்ணன்-
இராணிக்காடு,
பொகவந்தலாவை.

### கூ(வீ)ட்டுறவு

அணைக்கும் கரங்களுக்குள்
இணைக்கப்பட்டு
பிணக்குகளை
பின்தள்ளுவோம்!..

செ.ஞானராசா-
சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

### எப்போ?

இடும்பைகள் தீர்வதெப்போ?
ஈழத்துத் தமிழர் தங்கள்
கும்பங்கள் இதுபோல் அன்புக்
குதூகலம் காண்பதெப்போ?

செல்வி இ.தமிழரசு- ஈச்சந்தீவு,
கிண்ணியா.

## கவிதைப் போட்டி இல.293



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 30.01.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.293
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



## வாசகர் சாலை

முரசே!

கடற்பரப்பில் தன் உடன்பிறப்பைப் பறிகொடுத்த நங்கை நளாயினியின் உண்மைச் சம்பவம் மனதை உருக்குகின்றது. 'இடி அமீனின்' கொடுமைகள் பயமூட்டுகின்றன. என்றுமே ரசிகன் சூப்பர்.

செல்வி.க.சாந்தி, அன்பு வழிபுரம்,
திருகோணமலை.

'டிசம்பர் பௌர்ணமி' வாரா வாரம் எம்மை துடி துடிக்க வைக்கிறது. அந்தளவிற்கு ராஜேஸ் சார் கதையை உயிரோட்ட மாக எழுதியுள்ளார். சபாஷ் ராஜேஸ்! சபாஷ் முரசே!

கலவானையூர், எஸ்.சரவணேஸ் டெமிசி.

இனிய முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் மிகவும் அருமை. அதிலும் கடற்பரப்பில் நடந்த உண்மைச்சம்பவம் ஈழ மக்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களை பகிர்ந்து கொள்வதாக இருந்தது. இதுபோன்ற உண்மைச்சம்பவங்களைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

சுபாஷினி திலகரட்ணம், மட்டக்களப்பு.

கடற்பரப்பில் தன் உடன்பிறப்பை பறி கொடுத்ததை படித்து எனக்கே நெஞ்சைப் பிசைகிறதே. அணு அணு வாய் நேரிலே கண்டு சித்ரவதைப்பட்ட நளாயினிக்கு எப்படியிருந்திருக்கும்! வாசிக் கையில் அனுபவம் எனக்கானது போலுள்ளது. நளாயினி குடும்பத்தாருக்கு எந்தன் ஆழ்ந்த அனுதாபங்கள்.

எஸ்.மங்கையதர்ஷி, பத்தனை.

## பொதிக்கு வக்காலத்து

முரசே!

மதிமுகராசாவின் மரணச் சடங்கில் சம்பந்தன் கலந்துகொள்ளவில்லை. அவர் நாசூக்காக அரச சார்பு பிரசாரம் செய்து பொதிக்கு வக்காலத்து வாங்குகிறார். சங்கரிதான் தன் வாயால் கெட்டு வருகிறார். தவளையும் தன் வாயால் கெடும்.

வே.சந்திரதாஸ், திருகோணமலை.



## ஐ.நாவின் சார்பு

ஐக்கிய நாடுகள் சபை குறித்து அரசியல் அலசலில் கூறப்பட்ட கருத்துக்கள் நூறுவீதம் உண்மையே. நடுநிலை என்று உலகை ஏமாற்றும் கோஷம். அமெரிக்க சார்புப் போக்கே ஐ.நா. சபையில் காணப்படுகிறது. கோபி அனான் கிளின்ரனுக்கு கட்டுப்பட்டவர். வெளியே என்னதான் கூறினும் உண்மை அதுதான். முரசே! உன் ஊடாக ஐ.நா.சபை போன்றவற்றின் சுயரூபங்கள் வெளியாவதை பாராட்டுகிறோம்.

எம்.உதயகுமாரன், சுவிற்ஸர்லாந்து.

## உதட்டளவில் மத்தியஸ்தம்

இனிய முரசுக்கு:

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றி தீர்வு எட்டாக்கனி. அதனை முன்வைக்கத் தவறும் தமிழ்க் கட்சிகள் சமாதானம் பற்றி முழங்குவது மக்களை ஏமாற்றவே. வெறுமனே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பேசினால் போதாது. அதனை வலியுறுத்தி அரசுக்கு நெருக்குதல் கொடுக்க இக் கட்சிகள் முன்வரவில்லை. வெறும் உதட்டளவில்தான் மத்தியஸ்தம் பற்றிப் பேசுகின்றன. அப்படி பேசாவிட்டால் மக்களிடம் அம்பலமாகிவிடுவர். உண்மையாகவே பேசுவதாக இருந்தால், அக் கோரிக்கைக்காக முன்னின்று பாடுபடவேண்டும்.

ஆ.லிங்கேஸ்வரன், யாழ்ப்பாணம்.

## பொதியை பாராட்டவில்லை

அன்பு முரசே!

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பான 'அலசல்' நன்று. தீர்வுப் பொதியை இந்தியப் பிரதமர் போற்றாதிருப்பது குறிப்பிடும்படியான விஷயம்தான். பொதியைப் பற்றி விளக்கிக்கூட, வாஜ்பேய் கருத்து எதனையும் அம்மையாரிடம் கூறவில்லை.

சி.தர்மகுலசிங்கம், வெள்ளவத்தை.

## அமெரிக்க உளவாளிகள்

முரசே!

ஈராக்கில் ஐ.நா.சபை சார்பாக ஆய்வு நடத்தச் சென்றவர்கள் அமெரிக்க உளவாளிகள் என்று இராஜதந்திரியார் குறிப்பிட்டிருந்தார். அரசியல் அலசல் வெளியாகி சில வாரங்களின் பின்னர் சதாமும் அதே குற்றச்சாட்டைக் கூறியிருந்தார். ஈராக்கில் நடந்ததையும் உள்ளபடி கூறிவிட்டாரே இராஜதந்திரி என்ற ஆச்சரியப்பட்டோம். அமெரிக்காவின் கொட்டம் அடங்க வேண்டும். அதற்குபோட்டி முகாம் உருவாக வேண்டும்.

எ.ப்.நிலாம்தீன், கல்முனை.

முரசே!

நீ சுமந்து வந்த நங்கை நளாயினியின் உண்மைச் சம்பவம் என்னை மிகவும் கலங்கடித்துவிட்டது. நம் நாட்டின் பாழாய்ப்போன போர் யாரைத்தான் விட்டு வைத்தது? இக் கதை படித்த அனைத்து உள்ளங்களும் உருகித்தான் இருக்கும். நளாயினிக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

இ.நாதிரா பர்வின், தலவாக்கலை.

## நெஞ்சை அள்ளியவர்

வை.கோ.வின் அமெரிக்க விஜயமும், அது தொடர்பான பேட்டியும் நெஞ்சை அள்ளியது. இங்குள்ள சமரசவாத தமிழ்க் கட்சிகள் செய்யத் தவறிய பணியை வை.கோ. செய்திருக்கிறார். அவரிடமிருந்தாவது இக் கட்சிகள் பாடம் படிக்குமா?

எம்.கோகுலன், மட்டக்களப்பு.

## குண்டுமணி

முரசே! உன் கணிப்புகள் பொய்யானதில்லை. வை.கோ. இலங்கைத் தமிழருக்காக உண்மையாக குரல் கொடுக்கும் ஒருவர் என்று நக்கீரன் முன்னர் கூறியிருந்தார். முரசு அரசியல்வாதிகள் யாரையும் இலேசில் பாராட்டுவதில்லை. பாராட்டினால் அது தவறுவதில்லை என்பதற்கு வை.கோ. உதாரணம். வை.கோ. குப்பை அரசியலில் ஒரு குண்டுமணி

இ.சிவசேகர், கொழும்பு-13.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு. வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல்:– 074-513266



படிப்பகம்

www.padippakam.com

# முன்னாள் முதல்வரின் இரகசிய விஜயம்!

## அரசுடன் இணைந்து பணியாற்றத் திட்டம்!

## வருகை மறைக்கப்பட்ட மர்மம் என்ன?

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதல்வரும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவருமான வரதராஜப்பெருமாள் கொழும்பு திரும்பியுள்ளார்.

கடந்த எட்டு வருடங்களாக இந்திய விசேஷ கமாண்டோக்களின் பாதுகாப்பில் ராஜஸ்தான் மாநிலத்தில் குடும்பத்தின ருடன் தங்கியிருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை வழிநடத்த பெருமாள் இலங்கை திரும்ப வேண்டும் என்று அவரது கட்சியினர் வலியுறுத்தி வந்தனர்.

பொதுஜன முன்னணியின் பட்டியலில் எம்.பி.பதவி ஒன்று காலியாக இருப்பதால், வரதராஜப் பெருமாள் அதனைக் கேட்டுப் பெறலாம் என்று கட்சியினர் பலர் அவருக்கு நிர்ப்பந்தம் கொடுத்தனர்.

எம்.பி. பதவி கிடைக்குமானால் அமைச்சராகும் வாய்ப்பும் உண்டு. இவற்றைப் பயன்படுத்தி அடுத்த தேர்தலுக்குக் கட்சியை தயார்படுத்தலாம் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப், கருதுகிறது.

அதனால்தான் எம்.பி. வெற்றிடம் நிரப்பப்பட முன்னரே நாடு திரும்பியிருக்கிறார். கடந்த எட்டு ஆண்டுகளாக நாடு திரும்பாத வரதராஜப்பெருமாள் தற்போது அவசரமாக நாடு திரும்பியது அதனால்தான் என்று கூறப்படுகிறது.

### எங்கிருந்து வந்தார்?

ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியா சென்றிருந்தபோது அவரை பெருமாள் சந்திக்க முயன்றிருக்கிறார். அங்கு சந்திக்க ஜனாதிபதி விரும்பவில்லை. "கொழும்புக்கு வாருங்கள்; விரிவாகப் பேசலாம்!" என்று அழைப்பு விடுத்தார் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதனையடுத்து நாடு திரும்புவதற்கான ஒழுங்குகள் நடந்தன. இந்தியாவிலிருந்து வேறு ஒரு நாட்டுக்குச் சென்று, அங்கிருந்தே இலங்கை வந்துள்ளார் பெருமாள்.

ராஜிவ் கொலை தொடர்பான ஜெயின் கமிஷன் முன்பாக, 'வரதராஜப் பெருமாள் இந்தியாவில் இல்லை' என்று இந்திய அரசு கூறியிருந்தது. எனவே இந்தியாவிலிருந்து வரதராஜப் பெருமாள் இலங்கை வந்தால், இந்திய அரசு ஜெயின் கமிஷனை ஏமாற்றி விட்டது என்று பிரச்சனை கிளம்பும். அதனால் இந்திய 'றோ' அதிகாரிகளே பெருமாளை வேறு நாடு ஒன்றுக்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்று இலங்கைக்கு அனுப்பியுள்ளனர்.

தனது பெயரில் அல்லாமல் வேறு ஒரு பெயரிலேயே அவரது கடவுச்சீட்டு இருந்துள்ளது.

### மறைந்திருக்கும் மர்மம்

பெருமாள் நாடு திரும்புவது ஈ.பி.ஆர். எல்.எஃப். செயலாளர் சுரேசுக்குத் தெரியாது. பத்திரிகையாளர்கள் தொடர்பு கொண்டு கேட்டபின்னரே அவருக்கே சந்தேகம் வந்து, தனது முக்கிய உறுப்பினர்கள் சிலரிடம் விசாரித்திருக்கிறார்.

தைப்பொங்கலுக்கு முதல் நாளன்று தான் பெருமாள் தனியாக கொழும்பு திரும்பியிருந்தார். நான்கு நாட்களின் பின்னரே சுரேசுக்கு தெரியவந்தது.

மாகாணசபை முதல்வராக இருந்த போது ஈழப்பிரகடனம் செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியவர் பெருமாள். அதனால் அவர் நாடு திரும்பிய விடயத்தை உடனடியாக ஒப்புக்கொள்ள அரசு தயங்குகிறது.

ஐ.தே.கட்சி இதனை ஒரு பிரச்சனையாக கிளப்புமா, இல்லையா என்பதை நாடிபிடித்தறிந்த பின்னரே, வரதராஜப் பெருமாள் வெளியே வரவேண்டும் என்று கூறப்பட்டிருப்பதாகத் தகவல். இதன் காரணமாகவே உடனடியாக பகிரங்கத்தில் தோன்றவில்லை.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திற்காக பெருமாள் வந்ததாகவும் ஊகங்கள் கூறப்பட்டன. அதில் உண்மையில்லை என்று தெரிகிறது. அவர் பிரசாரம் செய்வதற்கு அனுமதித்தால், ஈழப்பிரகடனம் செய்தவருடன் அரசு கைகோர்த்து வருவதாக எதிரணிகள் பிரசாரம் செய்துவிடும்.

இதற்கிடையே தனக்குத் தெரிவிக்காது பெருமாள் நாடு திரும்பியதால் அதிர்ச்சியில் இருக்கிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

வரதராஜப் பெருமாளின் வருகையை பத்திரிகைகள் முக்கியத்துவப்படுத்தியதும் அவருக்குப் பிடிக்கவில்லை. "அவர் வருவதும் போவதும் பெரிய விசயமில்லை!" என்று பி.பி.சி. பேட்டியில் சுரேஸ் கூறினார்.

தற்போது கட்சியின் முக்கிய உறுப்பினர்களைச் சந்தித்து வருகிறார் பெருமாள்.

"சீர்குலைந்து, சோர்வடைந்து கிடக்கும் கட்சியை மறுசீரமைக்கவே இங்கு வந்துள்ளேன்!" என்று தமது உறுப்பினர்களுக்கு பெருமாள் கூறியுள்ளாராம்.

### சந்திப்பு

ஜனாதிபதியை சந்திக்க பெருமாள் அனுமதி கேட்டதாகவும், மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்னர் சந்திக்கலாம் என்று கூறப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

எக்கட்டத்திலும் வரதராஜப் பெருமாளுக்கு அமைச்சர் பதவியோ, எம்.பி. பதவியோ வழங்கப்படமாட்டாது. அவ்வாறு ஒரு யோசனை அரசுக்குக் கிடையாது என்று முரசுக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. ■

# இலங்கை–அவுஸ்.கிரிக்கெட் போட்டி

## வானில் தோன்றிய விமானம்

இலங்கை கிரிக்கெட் அணியின் அவுஸ்திரேலிய விஜயத்தை பகிஷ்கரிக்குமாறு அங்குள்ள தமிழர் அமைப்பு ஒன்று கூறியிருந்தமை தெரிந்ததே. இச் செய்தி முரசில் வெளியாகியிருந்தது.

ஜனவரி 13 அன்று இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையே போட்டி நடந்துகொண்டிருந்தபோது, மைதானம் அருகே ஒரு சிறு விமானம் வட்டமிட்டது.

அந்த விமானத்தின் புகையினால் 'சிறீலங்காவில் இனப் படுகொலை' என்று ஆங்கிலத்தில் எழுதிக் காண்பிக்கப்பட்டது.

முன்னர் டயானா மரணச் சடங்கிலும் விமானம் ஒன்றின் புகையினால் 'டயானாவுக்கு அஞ்சலி' என்று ஆங்கிலத்தில் எழுதிக் காண்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சாகச விமானம் ஒன்றை அவுஸ்திரேலியாவிலுள்ள தமிழர் அமைப்பு ஒன்றே வாடகைக்கு அமர்த்தி, 'சிறீலங்காவில் இனப்படுகொலை' என்று எழுதிக் காண்பித்துள்ளது.

கிரிக்கெட்டை நேரடியாக ஒளிபரப்புச் செய்த தொலைக்காட்சிகள் இக் காட்சியைக் காண்பிக்கவில்லை. ■

# 'அபாயம் நிறைந்த நாடு!'

## இலங்கை பற்றி பிரிட்டனில் விவரிப்பு

உலகில் குழப்பம் நிறைந்த 12 நாடுகளில் சிறீலங்காவும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தொல்லைகளை எதிர்பார்க்கிறீர்களா...?" என்ற வினாவைத் தலைப்பாகக் கொண்டு பிரிட்டனில் வெளியாகும் 'மனேஜ்மென்ற் ருடே' (MANAGEMENT TODAY) சஞ்சிகையின்– 1998 ஆகஸ்ட் மாத இதழில் வெளியாகியுள்ள கட்டுரையில் சிறீலங்கா குழப்பங்களும் தொல்லைகளும் நிறைந்த நாடாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

அரசியல், பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய அனைத்திலும் சிறீலங்காவில் அபாயம் நிறைந்திருப்பதாக அக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பும் போக்குவரத்தும் மிகவும் எல்லை கடந்த அபாயகரமானவை என்று வர்ணித்துள்ள கட்டுரையில், அரசியல் நிர்வாகம் ஏறத்தாழச் சீர்குலைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து போய் விட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"உள்நாட்டு யுத்தம் மேலும் தலையெடுக்கப்போவதால் வர்த்தகத்துறை வளர்ச்சி சாதகமாகத் தோன்றவில்லை. அந்நாடுகளில் நிறுவப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் மிக விரைவில் வெளியேறி விடுவதற்கு தீவிர கவனம் செலுத்த வேண்டும்!" இவ்வாறு அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

இச்சஞ்சிகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள நாடுகள்: (ஆங்கில அகர வரிசைப்படி) ஆஃப்கானிஸ்தான், புருண்டி, கொங்கோ, எரித்ரியா, எதியோபியா, ஜோர்ஜியா, லெபனான் (அவாலி நதியின் தென்பால்), ரஷ்யா (செச்னியா), சியெரா லியோன் (ஃபிறீரவுண், கிழக்கு மாகாணம்), சொமாலியா, சிறீலங்கா மற்றும் சூடான் (தெற்கு).

'மனேஜ்மென்ற் ருடே' என்ற சஞ்சிகை 'இன்ஸ்டிட்டியூட் ஒஃப் மனேஜ்மென்ற்' என்ற பிரிட்டிஷ் நிறுவனத்தால் வெளியிடப்படுவது. பிரிட்டனிலும் பொது நலவாய அமைப்பில் இணைந்த நாடுகளிலும் இச்சஞ்சிகை மிகப் பிரபலமானது என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சாரம் வழங்க அனுமதி?

## பிரபாகரன் விடுத்த உத்தரவு!

தங்களால் துண்டிக்கப்பட்டு- மூன்று மாதம் ஆறுநாட்களின் பின்னர் மட்டக்களப்புக்கு மின்சாரம் கிடைக்க புலிகள் அனுமதி வழங்கினர்.

மின்சாரம் வழங்க அனுமதிப்பதாகவும், மின்கோபுரங்கள், கம்பங்கள், மின்மாற்றிகள் என்பனவற்றைத் திருத்துவதற்கு உத்தரவு பிறப்பிப்பதாகவும் புலிகள் உத்தியோக பூர்வமாக இலங்கை மின்சார சபைக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அந்தத் தகவல் 'மின்' வேகத்தில் மாவட்டம் முழுவதும் பரவியது. அதே கணப்பொழுதில் இலங்கை முழுவதும் வெளிநாடுகளிலும் பரவி அதன் மகிழ்ச்சி பிரதிபலித்தது.

திடீரென இந்த அறிவித்தல் வெளியானதால் ஆரம்பத்தில் நம்மமுடியாத புதிராக இருந்த போதிலும் புலிகள் தரப்பிலிருந்து அனுமதி கிடைத்திருக்கிறது என்று உத்தியோக பூர்வ தகவல் வெளியானதும் மக்களின் மனதில் கிளர்ந்தெழுந்த மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

மின்சாரம் கிடைக்கும் என்று முன்னர் பலமுறை வெளியான புரளிகளால் மக்கள் சலிப்படைந்திருந்தார்கள். ஆனால் இம்முறை வெளியான அறிவித்தலில் இன, மத, வயது வித்தியாசத்தைக் கடந்து மின்சாரம் கிடைக்கப்போகும் மன மகிழ்ச்சியில் எல்லோரும் திளைத்துப்போனார்கள்.

முதலில் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடியவர்கள் இலங்கை மின்சார சபை ஊழியர்களே. அதனாலேயே தமது வாகனங்களில் ஒலி பெருக்கிகளைக் கட்டி அந்த மகிழ்ச்சியான செய்தியை ஊர் ஊராக அறிவித்தார்கள்.

### மக்கள் அவதி

மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த கடந்த மூன்று மாதங்களும் ஆறு நாட்களுமாக மொத்தம் 96 நாட்கள் வறியவர், வசதி படைத்தோர் என்ற வித்தியாசமின்றி அனைவரும் பல வழிகளில் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அதிலும் கூடுதலாக அடிமட்ட ஏழைகளே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றுக்குத் தட்டுப்பாடும் விலையதிகரிப்பும் ஏற்பட்டன. ஆடைத் தொழிற்சாலைகள், அரிசி ஆலைகள், காகிதத் தொழிற்சாலை என்பனவற்றுடன் மேலும் பல தொழிலகங்கள் இழுத்து மூடப்பட்டதால் பல நூற்றுக்கணக்கான ஏழைகள் தொழிலை இழந்து நிர்க்கதியானார்கள்.

முதலில் மட்டக்களப்பின் ஒரு சில பகுதிகளில் மாத்திரம் தடைப்படுத்தப்பட்ட மின்சாரம் பின்னர் மாவட்டம் முழுவதும் தடையானது. அதன் சில நாட்களின் பின்னர் கல்முனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் பகுதிகளிலும் மின்மாற்றிகள் தகர்த்தெறியப்பட்டன.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின் துண்டிப்புக் காரணமாக அரசுக்கோ, சீருடையினருக்கோ எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

### பிரபா உத்தரவு

கிழக்கில் மின்சாரத்தை நிறுத்தியிருப்பது அங்குள்ள மக்களுக்கே பாதகமாகியிருப்பதாக புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கிழக்கில் உள்ள முக்கியஸ்தர்களால் தெரிவிக்கப்பட்டது. புலிகளின் அரசியல் பிரிவு ஊடாக மேற்படி முக்கியஸ்தர்கள் தமது வேண்டுகோளை தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பிரிவு பொறுப்பாளர்கள் சிலரை பிரபாகரன் வன்னிக்கு அழைத்திருந்தார். அதன் பின்னரே கிழக்கில் மின்சார விநியோகத்தைத் தடுக்கவேண்டாம் என்று பிரபாகரன் உத்தரவிட்டாராம். ■

# விளக்கம் கோருகிறார் ஆளுநர்

## திசை திருப்புகிறார் நகரசபைத் தலைவர்

திருக்கோணமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்திக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களில் உண்மையிருப்பதாக விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கையை வடக்கு-கிழக்கு முன்னாள் ஆளுனர் காமினி பொன்சேகா கிடப்பில் போட்டிருந்தார். நகரசபைத் தலைவருக்கும் முன்னாள் ஆளுநருக்கும் இடையேயான நெருக்கமே அதற்குக் காரணமாகும்.

புதிய ஆளுநர் பதவிக்கு வந்ததும் கிடப்பில் கிடந்த விசாரணைக்குழு அறிக்கை உயிர்பெற்றிருக்கிறது. நகரசபைத் தலைவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

திருமலை நகர புதிய சந்தை விவகாரத்தில் தன்னை பழிவாங்கவே ஆளுநர் விளக்கம் கோரியுள்ளதாக சூரியமூர்த்தி கூறுகிறார்.

ஆனால், புதிய சந்தை விவகாரத்திற்கும், ஊழல் விசாரணைக்கும் இடையே தொடர்பில்லை. சூரியமூர்த்தி ஊழல் செய்துள்ளதை மத்திய பொதுக் கணக்காய்வாளர்கள் கண்டுபிடித்ததை அடுத்து உழல் அம்பலமானது. இது புதிய சந்தை விவகாரத்தின், முன்னரே கண்டுபிடிக்கப்பட்ட ஊழலாகும்.

### விளக்கம் கோரல்

திருமலை விகாரை வீதியிலுள்ள நகரசபைத் தலைவரின் வீட்டை நிர்மாணிக்க பல இலட்ச ரூபாய் எப்படிக் கிடைத்தது?

* நகரசபைத் தலைவர் தனது வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்திய தொலைபேசிக் கட்டணம், மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் என்பவற்றை நகரசபைத் தலைவர் நகரசபை வரியிறுப்பாளரின் பணத்தில் செலுத்தியமை.

* நகரசபைச் செயலாளரின் விடுதியை தனது வாசஸ்தலமாக முறையற்ற விதத்தில் நகரசபைத் தலைவர் பயன்படுத்தியமை.

தனது உறவினர்களுக்கு, சட்டபூர்வ பிரமாணங்களை மீறி நகரசபையில் பதவி நியமனங்கள் வழங்கியமை.

* தந்தை செல்வா வீதியில் உள்ள சந்தைக் கட்டட நிர்மாணம், தபாற் கந்தோர் வீதியில் உள்ள நூலக நிர்மாணம் போன்றவற்றை கேள்வி கோராமல், நிதிப்பிரமாணங்களை மீறி வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே ஆளுநர் விளக்கம் கேட்டுள்ளார்.

இந்த ஊழல்கள் தொடர்பாக முரசில் ஏற்கனவே செய்தியாக வந்தபோது, முரசை வசைபாடினார் சூரியமூர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது. ■

# பதவி ஏற்றார் தலுவத்தை

## கூட்டம் நடத்தினார் அமைச்சர் ரத்வத்தை

ஆயுதப் படைகளின் ஒன்றிணைந்த நடவடிக்கை சபையை (JOB) ஜனாதிபதி சந்திரிக்கா ஏற்படுத்தினார். இராணுவத் தளபதியாகவிருந்து ஓய்வுபெற்ற ஜெனரல் ரோஹன் டி.எஸ்.தலுவத்தையை இவ்வமைப்பின் தலைவராக ஜனாதிபதியே நியமித்தார்.

ஜனவரி 6ம் திகதி காலை 8.20க்கு - சுபமுகூர்த்தத்தில் ஜெனரல் தலுவத்தை, தனது அலுவலகத்தில் பணியைத் தொடங்கியுள்ளார்.

ஜெனரல் தலுவத்தைக்கான பொறுப்புகளில்- இவர் நேரடியாக ஜனாதிபதிக்கும் தேசியப் பாதுகாப்புச் சபைக்கும் மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவர்.

ஜெனரல் தலுவத்தை பதவி ஏற்ற அடுத்த நாளே- ஜனவரி 7ம் திகதி தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஜெனரல் தலுவத்தையோ அவருடைய அதிகாரத்துக்குட்பட்ட அதிகாரிகளோ செல்லவில்லை எனத் தெரிகிறது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா என்றும் தெரியவில்லை. இருப்பினும் ஒன்றிணைந்த நடவடிக்கை சபை அதிகாரிகள் தே.பா.சபையில் சமர்ப்பிப்பதற்கான ஆவணங்களுடன் ஆயத்தமாக இருந்ததாகவும் தெரிகிறது.

ஜனவரி 11ம் திகதியன்று முப்படைத் தளபதிகளையும் கொண்டதொரு கூட்டத்தை ஜெனரல் தலுவத்தை கூட்டினார். இச்சபையின் கூட்டங்கள் எவ்வெப்போது நடத்தப்பட வேண்டும், யார் யார் பங்குபற்ற வேண்டும் என்று திட்டமிடுவதற்கான கூட்டம் இதுவாகும்.

அன்றைய தினம் மாலையில் பாதுகாப்பு அமைச்சின் மற்றொரு புறத்தில்-ஜெனரல் தலுவத்தையின் தலைமைக் காரியாலயத்திலிருந்து சில கட்டடங்கள் தள்ளி-பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பல அதிகாரிகளும் பொலிஸ் மா அதிபரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். யுத்தம் பற்றிய முக்கியமான ஆலோசனைகளுக்காகக் கூட்டப்பட்ட இக்கூட்டத்துக்கு ஜெனரல் தலுவத்தை சமூகமளிக்கவில்லை.

இந்நிலையில் ஆயுதப்படையைச் சார்ந்த உயரதிகாரிகள்- எவருடைய வழிகாட்டலைப் பின்பற்றுவது என்று தெரியாமல் இருதலைக் கொள்ளி எறும்புகளாகத் தடுமாறுகின்றனர் என்று வர்ணிக்கப்படுகிறது. இத்தகவலை 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

# பொறுப்பாளர்கள் பலி

## துணைப்படை சூடு

புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு- அம்பாறை அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் லெப்ரினன்ற் கேணல் கீதன் கடந்தவாரம் அவருக்கு ஏற்பட்ட கடுமையான காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் அழைப்பின் பேரில் இவர் சிலகாலம் வன்னியில் தங்கியிருந்தார். அவரை மீண்டும் கிழக்குக்குச் சென்று அரசியல் துறைப் பொறுபாளராகப் பணியாற்றுமாறு பிரபாகரன் பணித்ததை அடுத்து அவர் திரும்பி மட்டக்களப்புக்குச் செல்லும் வழியில் திருக்கோணமலையில் வைத்துக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. கடுமையாகப் பாதிப்புற்று உடலாற்றலை இழந்த அவர் திருமலையிலேயே காலமானதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு- அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு.துரை புலிகளின் தலைவரால் வன்னிக்கு அழைக்கப்பட்டு அங்கு சென்றுள்ளாராம்.

இதனிடையே சென்றவாரம் மட்டக்களப்பு தாண்டியடியில் பதுங்கியிருந்த துணைப்படையினரான ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவினர் சுதா என்றழைக்கப்படும் வீ.செல்வகுமார் என்பவரைச் சுட்டுக் கொன்றனர். இவர் புலிகள் இயக்கத்தின் உள்ளூர்ப் பொறுப்பாளர் என்றும் தெரியவருகிறது. மோட்டார் சைக்கிளில் வரும்போது அவர் சுடப்பட்டார்.

சடலமும் மோட்டார் சைக்கிளும் அவ்விடத்திலேயே கிடந்தன. புலிகள் பதில் தாக்குதல் நடத்தக் கூடும் என்று எவரும் சடலத்தினருகில் நெருங்கவில்லை. இறந்தவருக்கு மேஜர் பட்டம் கொடுத்துப் புலிகள் கௌரவித்துள்ளனர். ■



படிப்பகம்

www.padippakam.com

# ஒதுக்கிய நிதியை–பதுக்கியது யார்?

(திருமலை நிருபர்)

நிலாவெளி கோபாலபுரம் பாடசாலை வீதி திருத்த வேலைக்கென ஒதுக்கப்பட்ட பத்து இலட்சம் ரூபா- போலித் திருத்த வேலைகள் செய்யப்பட்டு- ஏப்பம் விடப்பட்டுள்ளதாக கோபாலபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

திருக்கோணமலை பா.உ. இரா. சம்பந்தனின் நிதியிலிருந்து- நாற்பத்தைந்து வருடம் பழமை வாய்ந்த இவ்வீதியைத் திருத்துவதற்காக- பத்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. திருத்த வேலையை மேற்கொண்டவர்கள் தில்லுமுல்லுச் செய்வதைக்கண்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இது தொடர்பான திணைக்கள அதிகாரியுடன் தொடர்புகொண்டபோது, "பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது அவர் நியமிக்கும் ஒருவரோதான் இது பற்றிப்பேச முடியும். உங்களுக்கு விளக்கம் தர முடியாது." என்ற இறுமாப்பான பதிலையே பெற்றுள்ளனர்.

இதனை அடுத்து தலைமைச் செயலாளர், கணக்காய்வுப் பணிப்பாளர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதன் பேரில் இத் தில்லுமுல்லுக் குறித்து உடனடி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கற்களை மிதிக்கும் இயந்திரத்தைக் காட்சிக்குக் கொண்டுவந்து வைத்துவிட்டு, உபயோகிக்காமலேயே திருப்பிக்கொண்டு போனமை, திருத்த வேலைக்கென இறக்கப்பட்ட கற்குவியல்களில் பெரும்பாலானவற்றை மீள எடுத்துச் சென்றமை, கற்கள் போடப்படாமல் தார் மட்டும் ஊற்றியமை,போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், வீதியில் சில இடங்களில், மழை பெய்ததைத் தொடர்ந்து புற்கள் வளர்ந்துள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

# குடிநீருக்கும் அலைகிறார்கள்!

## தொழுநோயாளர்களின் அவலநிலை!

(மட்டக்களப்பு நிருபர்)

சின்னஞ்சிறு குட்டித்தீவான மட்டக்களப்பு-மாந்தீவுக்குள் அடைத்து வைக்கப்பட்டு தமது வாழ்க்கையை, தொழுநோய் தொட்ட காலம் தொடக்கம், அங்கேயே கழித்துக் கொண்டிருக்கும் மாந்தீவு தொழுநோயாளர்கள் தங்களது அவல நிலை குறித்து வேதனை வெளியிட்டுள்ளனர்.

நடுத்தர வயதையும், வயோதிபத்தையும் அடைந்த 33 ஆண்களும் 07 பெண்களுமாக 40 பேர் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டு பெண்களும் 16 ஆண்களுமாக 18 தமிழர்களும், 05 பெண்களும் 12 ஆண்களுமாக 17 சிங்களவர்களும் 05 முஸ்லிம் ஆண்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் தொழுநோயாளர்கள் என்று புறம்பான ஓரிடத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது ஒரு புறமிருக்க, இவர்களுக்கான அடிப்படை வசதிகள் பலவும் ஓரங்கட்டப்பட்டுள்ளன என்று அந்த வைத்தியசாலை வட்டாரங்களும்,நோயாளர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின் விநியோகம் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக புலிகளால் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாந்தீவு வைத்தியசாலையும் முற்றாகவே இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

இதனால் நீர் வசதியின்றி அங்குள்ள நோயாளர்களும் வைத்தியசாலை அலுவலர்களும் மிகக் கஷ்டப்படுகிறார்கள். தமக்கு ஏற்பட்ட இந்த நோயால் தாம் சிரமப்படுகின்றபோதும், அத்தியாவசிய நீருக்குப்படும் அவஸ்தையை விவரிக்கையில் பல நோயாளர்கள் கண் கலங்கி அழுது விட்டனர்.

இருட்டில் தட்டித் தடவி நடந்து நீர் தேடியலைந்து விழுந்து காயம்பட்ட நோயாளிகளையும் காணக்கூடியதாக இருந்தது. இந்த வைத்தியசாலையின் நீர்த் தட்டுப்பாட்டை நீக்க உதவி செய்யுமாறு கோரி நீர் வழங்கல் சபைக்கும் மற்றும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் ஏற்கனவே பலவேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# கசாப்பு கடைக்கு அனுமதி

## நகரசபைத் தலைவரின் அதிருப்தி

பலநூற்றாண்டு காலச் சரித்திரப் புகழ் வாய்ந்த திருக்கோணமலை- வெள்ளை வில்வபத்திர கோணேசர் ஆலய வளவுக்கு அணித்தான நிலப்பரப்பில் கசாப்புக்கடை திறக்க நகரசபை அனுமதி வழங்கியதன் மூலம் சைவமக்களின் பாரம்பரியங்களையும் மத உணர்வுகளையும் மீறியுள்ளதாக மேற்படி ஆலய பரிபாலன சபை கௌரவ ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

"கசாப்புக் கடை அமைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதே இதுபற்றி நகரசபைத் தலைவரிடம் முறையிட்டோம். சைவமக்களின் மன உணர்வுகளைப் புண்படுத்தாதீர்கள் என்று கேட்டோம். ஆனால் பணமொன்றே குறியாகக்கொண்ட அவர் எங்கள் வேண்டுகோளை உதாசீனப்படுத்திவிட்டார். சைவசமயக் காவலராகத் தன்னை ஊர் பாராட்ட வேண்டும் என்று நினைக்கும் தலைவர் இப்படிச் செய்யலாமா?" என்று நிருபரிடம் கேட்டார் ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்த ஒருவர்.

"இவ்வாலயத்தைப் புனரமைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும் இவ்வேளையில் கசாப்புக்கடைக்கு அனுமதி அளித்தது கவலைக்குரியது." என்றும் அவர் கூறினார்.

இவ்விடயத்தில் உடனடியாக விசாரணை செய்து கசாப்புக்கடையை அப்புறப்படுத்தி சைவமக்களின் நியாயமான மத உணர்வுகளைப் பாதுகாக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு. சந்திரகுமார் திருகோணமலைத் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

# "தாமதத்திற்கு நாம் காரணமல்ல!"

வன்னிக்கு உணவு லொறி அனுப்புவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு வவுனியா அரச செயலக வட்டாரம் எவ்விதத்திலும் காரணமல்ல என்று வவுனியா அரச அதிபர் க. கணேஷ் முரசுக்குத் தெரிவித்துள்ளார்.

வவுனியா செயலக அலுவலக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் வருடம் 365 நாளும் அலுவலகத்தைத் திறந்து, இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வரும் மக்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கிவருகின்றனர்.

கடந்த மூன்று வருட காலமாக இக் கடமை எவற்றுக்கும் மேலதிக நேர ஊதியம் எதுவும் வழங்கப்படுவதில்லை என்றும் அரச அதிபர் தெரிவித்திருக்கிறார்.

# மின்சார பொறியில் யானைகள்!

மட்டக்களப்பு-புணானைப் பகுதியில் உள்ள படையினர் தெரு மருங்குகளில் மின்சாரக் கம்பிகளைத் தொடுத்து தமது முகாம்களுக்கு மின் விநியோகம் பெறுகின்றனர்.

மின்சாரக் கம்பிகள் மிகப் பணிவான உயரத்தில் கட்டப்பட்டுள்ளதால் அப்பகுதியில் உலாவும் யானைகள் மின்சாரக் கம்பிகளில் எவ்வாறோ சிக்கி மின் தாக்கத்தினால் மாண்டுபோகின்றன.

இவ்வாறு சமீப சில நாட்களில் பெரிய ஆறு யானைகள் இதே இடத்தில் செத்து மடிந்துள்ளன. கடைசியாக 1999 வருடப் பிறப்பு முதல் திகதியன்று ஒரு பெரிய யானை மின்சாரப்பொறியில் அகப்பட்டு துடி துடித்து மடிந்துபோனது. இறந்த யானைக்குப் பக்கத்தில் அதன் இணையன் மூன்று நாட்களாக நின்று கொண்டிருந்தது.

யானைகள் பலியாகும் இடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடைசியாக மின்சாரம் வந்து முடியும் இடமாகும். புலிகளால் தகர்க்கப்பட்ட மின்சாரக் கோபுரங்கள் வீழ்ந்து கிடக்கும் இடத்திற்குச் சில யார் தூரத்திலுள்ள இராணுவ முகாமுக்குப் பக்கத்திலே யானைகள் செத்து மடிகின்றன.


**ஒத்துமாறல்** யாழ் பல்கலைக் கழகத்தில் உயிரியல் பிரிவுக்கு 98/99 கல்வியாண்டில் அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர் தனது கல்வியைப் பேராதனை/கொழும்பு பல்கலைக் கழகத்தில் தொடர விரும்புகிறார். ஒத்துமாற விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

திரு. க. கஜரூபன்
80, அம்மன் கோவில் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா. T.P. 024-22744

**ஹோமியோபதி** தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
**Dr. R. தியாகராஜன்** D.H.M.S. AMRSH (Lond) நீரிழிவு, ஆஸ்துமா, ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ். தொ.பே: 585592-581986 **21.01.99-26.01.99**
இந்தியத் தொ.பே: 0091-431-432946 0091-431-432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

தரமான புதிய மோபைல் போன்கள் Mobile Phones (Celltell) விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
A.C.M. அன்வர் - 072-284706


**மலையாள மாந்திரிகம்**


மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாத செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
நயமெசியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831


# 31ம் நாள் நினைவஞ்சலி



**சிவராஜா செந்தூரன்**

மலர்வு: 22.01.1977
உதிர்வு: 20.12.1998

எங்கள் அன்புச் செந்தூரனே!
நீ மறைந்து முப்பத்தியொரு நாட்கள் சென்றுவிட்டதடா! உன் நினைவுகள் என்றும் எம் மனதை விட்டுச் செல்லவில்லை. எங்கள் உயிர் நீதானே என்றிருந்தோம். எம் கனவெல்லாம் நனவாகும் நாளைப் பார்த்திருந்தோம். எம் கனவெல்லாம் கனவாகவே போய்விட்டதடா! ஆண்டவனே! அவனை எம்மிடம் திருப்பித் தந்துவிடு. உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள்.

தகவல்: இ.சிவராசா, 109 1/5, கொலிஜ் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13


**Happy New Year '99**

பிறந்திருக்கும் இனிய புத்தாண்டில் இலங்கை வாழ் அனைத்து இன மக்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறது

கண்டி I.L.C. இன்டநேஷனல் நிறுவனம்

**இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி**

**5000 Scholarship பாடநெறி**

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க பயிற்சியை அளிக்கும் தபால் மூல ஆங்கில பாடநெறி

பாடநெறிக் கட்டணம் இலவசம்
விண்ணப்ப முடிவுத் திகதி 1999.02.15
பதிவுக் கட்டணம் மட்டும் அறிவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பபடிவத்துக்கும் சுயவிலாசம் எழுதப்பட்ட 3.50 முத்திரை ஒட்டப்பட்ட நீள கடிதவுறை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். அல்லது 08-222664, 077-802849 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**I. L. C. INTERNATIONAL**
**P.O. Box 119, Kandy.**

இப்பாடநெறிக்காக பெயர்களை பதிவு செய்து கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் The Student ஆங்கில கல்வி இதழ் 3 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.


# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

முகிழ்ப்பு: 15.08.1969



உதிர்வு: 16.01.1998

**திருமதி பரமானந்தராஜா மோகனாம்பிகை**
நொச்சிமுனை-மட்டக்களப்பு

விழிகளால் நீரெழுதி
வேதனையே வாழ்வாகி
அழியாத உன் நினைவில்
ஆண்டொன்று போனாலும்
எழிலான உன் நினைவே
என்றென்றும் வாழுமம்மா!

அன்புக் கணவர்,
பாசமழலைகள்,
அரவிந்த்-மோவினா,
உற்றார், உறவினர்

தகவல்:
த.பரமானந்தராஜா
200/22, கந்தையா ஓவசியர் ஒழுங்கை,
நொச்சிமுனை, மட்டக்களப்பு.


**AFTER O/L, A/L WHAT'S NEXT ?**

IIS நிறுவனத்தில் இணைந்து கணனியில் வல்லுநராகுங்கள். உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட விசேட குறுகிய கால பாடத்திட்டம்.

**CERTIFICATE IN COMPUTER STUDIES**

MS DOS, MS WINDOWS, MS WORD, MS EXCEL, MS POWERPOINT, PROGRAMMING TECHNIQUES, DBASE, INTERNET & E-MAIL
காலம் : 3 மாதம் கட்டணம் : 6,000/-

விசேட சலுகை
பெப்ரவரி 10, 1999 இற்கு முன்னர் இணைந்து கொள்பவர்களுக்கு 20% கட்டணக்கழிவு வழங்கப்படும்.

Batch III- Commencement : 23rd & 30th Jan.99
Batch IV- Commencement : 25th Jan. & 1st Feb.99
INDIVIDUAL & GROUP CLASSES
வெளிநாடு செல்பவர்களுக்கு விசேட வகுப்புகள்
UNLIMITED PRACTICAL HOURS

INSTITUTE OF INFORMATION SYSTEMS (PVT) LTD
IIS (AFFLIATED TO IMIS U.K.)
No 379, 1st Floor, Galle Road, Colombo-06.
Tel : 074-517390. 077-319426

**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
**வவுனியாவில் ஜனவரி 10,11,12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்**
(முன்கூட்டியே பதிவுசெய்யவும்)
(HOTEL VASANTHAM), கண்டி வீதி, வவுனியா. T.P.024-22583, 024-22366
**கொழும்பில் ஜனவரி 24 முதல் 31 வரை சந்திக்கலாம்**
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு) T.P:- 338165-338166
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388
**கல்முனையில் பெப்ரவரி 6,7ம் திகதிகளில் சந்திக்கலாம்**
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
Resident : No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.


# 1வது பிறந்தநாள் வாழ்த்து 23.01.1999




**செல்வி ரெபேக்கா இராமச்சந்திரன்**

சுவிஸில் வசிக்கும் இராமச்சந்திரன்-றஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வி ரெபேக்கா தனது முதலாவது பிறந்த தினத்தினை 23.01.1999 அன்று சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். ரெபேக்காவை அன்பு அம்மா, அப்பா, கொழும்பில் வசிக்கும் அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான், மட்டக்களப்பு லேடி மெனிங் டிறைவ் இல் வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, பெரியம்மா, மாமாமார், சித்தப்பா, சித்திமார், அண்ணாமார், இமையானன், கிழக்கில் வசிக்கும் அப்பம்மாமார், அப்பப்பாமார், மாமி, வன்னி உடையார் கட்டில் வசிக்கும் மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சுவிஸில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மாமாமார், அக்காமார், அண்ணாமார், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: தந்தை, கே. இராமச்சந்திரன், Graben str 1A, 9470 werdenberg (S.G) Switzerland.



படிப்பகம்

www.padippakam.com

# கடற்சமரில் பின்னடைந்த கடற்புலிகள்

திருமலை கடற்பரப்பில் 11.01.99 அன்றும் பலத்த கடற்சமர் ஒன்று நடந்திருக்கிறது.

திருமலை புல்மோட்டைக்கும் குச்சவெளிக்கும் இடையேயுள்ள 20 கிலோமீட்டர் கடற் பிராந்தியத்திற்குள் இச் சமர் நடந்திருக்கிறது.

07.01.99 அன்றும் இதே கடற்பிராந்தியத்தில் கடற்சண்டை ஒன்று நடந்தது.

புலிகளின் படகுகள் தொடராக சென்றதைக் கண்ட கடற்படை டோரா படகுகள் தாக்குதலை ஆரம்பித்தன.

வன்னிக்கும் திருமலைக்கும் இடையே புலிகளின் படகுகள் அடிக்கடி போக்குவரத்தில் ஈடுபடுவதை நோட்டமிட்டு, அப்பகுதியில் தாக்குதலுக்கு தயாராக கடற்படை படகுகள் ரோந்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

ஏற்கனவே இரு முறை கடற்படைத் தாக்குதல் நடைபெற்றதால், 11.01.99 அன்று கடற்புலிகளும் பதிற் தாக்குதலுக்கு தயாராகவே சென்றுள்ளனர்.

கடற்படையினர் தாக்கியதும் கடற்புலிகளும் பதில் தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். பல மணிநேரமாக சண்டை தொடர்ந்தது.

கடற்படையினரின் தாக்குதல் சண்டைப் படகுகள் பீரங்கிக் குண்டுகளைப் பொழிந்தன. கடற்புலிப் படகுகளை அழித்து விடும் முர்க்கத்தோடு கடற்படையினர் வியூகம் வகுத்தனர்.

கடற்படையினரின் தாக்குதலில் கடற்புலித் தளபதிகள் இருவர் உட்பட ஐந்து கடற்புலிகள் பலியாகினர். இதனையடுத்து கடற்புலிகள் சண்டைக் களத்தைவிட்டு அகலத் தொடங்கினர்.

இச் சமரில் கடற்படையினரே வெற்றி பெற்றனர். தமது தரப்பில் இரு டோராப் படகுகள் சேதம் அடைந்ததாகவும், எவரும் பலியாகவில்லை என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். புலிகள் தரப்பில் 30 பேர் பலியானதாக கடற்படை செய்தியில் கூறப்பட்டது.

கடற்படையினர் தரப்பில் எவரும் பலியாகவில்லை என்பது ஊர்ஜிதமான தகவல்தான். கடற்படை சண்டைப் படகுகளை கடற்புலிகளால் நெருங்கிச் செல்ல இயலவில்லை. அதனால் படகுக்குள் குறி வைத்து தாக்க முடியவில்லை.

தமது இரு கடற்தளபதிகளை இழந்தது கடற்புலிகளுக்கு பெரும் இழப்புத்தான்.

இந்த இழப்புக்கு பதிலடியாக கடற் சண்டை ஒன்றுக்கு கடற்புலிகள் திட்டமிடவே செய்வர்.

★★★

**வ**ன்னியில் 15.01.99 பொங்கல் தினத்தன்று படை நகர்வு ஒன்று மாங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

ஒட்டுசுட்டானில் படையினர் நிலை கொண்டிருப்பதால், அங்கு தமது பாதுகாப்பரண்களை புலிகள் பலப்படுத்தியுள்ளனர்.

ஒட்டுசுட்டானில் நிலை கொண்டிருந்த படையினரின் வேவு அணிகள் இரவோடு இரவாக அடுத்த கிராமமான முள்ளியவளை வரை சென்று நோட்டமிட்டு திரும்பியதை புலிகள் அறிந்தனர்.

அதனையடுத்தே ஒட்டு சுட்டான் பகுதியில் உள்ள படையினரின் நிலைகளை அண்டியதாக தமது காவலரண்களை நிறுவியுள்ளனர்.

மாங்குளம் பகுதியில் நிறுவப்பட்டது போன்ற மறிப்புச் சண்டைக்கான பலமான அரண்களே ஒட்டுசுட்டானிலும் புலிகளால் நிறுவப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பகுதியை அண்டி புலிகள் தமது புதிய நிலைகளை நிறுவியதால், மாங்குளம் பகுதியில் புலியணிகளின் பலத்தை ஆழம் பார்ப்பது போன்ற படை நகர்வே 15.01.99 இல் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் புலிகளின் பீரங்கிப் படையணிகள் முறியடிப்புத் தாக்குதலில் ஈடுபட்டன. பல மணிநேர சண்டையின் பின்னர் கள அமைதி ஏற்பட்டது.

இச்சண்டையில் தமது தரப்பில் பலியான ஒரு புலியின் பெயர் விபரம் புலிகளால் அறிவிக்கப்பட்டது.

தமது தரப்பில் மூன்றுபேர் பலியானதாகவும், புலிகள் தரப்பில் 18 பேர் பலியானதாகவும் படைத்தரப்பு வெளியிட்ட செய்தியில் புள்ளி விபரம் கூறப்பட்டது.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் நெருங்குவதால், வன்னியில் படைத்தரப்பு வாகை சூடிவருவதாக செய்திகள் வெளியாவது ஆளும் தரப்புக்கு சாதகம். எனவே அதற்கான முயற்சிகளில் ஒன்றாகவும் மாங்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட நகர்வைக் கருதலாம்.

அமைச்சர் ரத்வத்தையும் சமீபத்தில் வன்னிக்கு சென்று வந்ததாக செய்திகள் கூறின. தேர்தல் அரங்கில் பிரசார இலாபம் கருதிய நடவடிக்கை ஒன்றுக்கு வழி இருக்கிறதா என்று ஆராயப்பட்டிருக்கலாம்.

எனினும் பாரிய நகர்வில் ஈடுபடத்தக்க சூழல் அங்கில்லை. முறியடிப்பு சமருக்கு புலிகள் தயார் நிலையில் உள்ளனர். மழை வேறு விட்டு விட்டு பெய்தபடி இருக்கிறது.

தைப்பொங்கல் தினத்தன்றும் வன்னியில் மழை மறுபடி பொழிந்தது.

▫▫▫

**ப**டையினரும் வன்னியில் பதுங்கித் தாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்தவாரமும் படையினரின் பதுங்கித் தாக்கும் நடவடிக்கையில் புலி ஒருவர் பலியானார்.

புலிகளின் நடமாட்டத்தை அவதானிப்பது, தமது நிலைகளை விட்டு வெகுதூரம் விலகிப் போய் பதுங்கிக் கிடப்பது, சிறு குழுக்களாக குறிப்பிட்ட தூரம் வரை சென்று வேவு பார்ப்பது போன்றவற்றில் படையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகளும் தற்போது அலட்சியமாக நடமாட முடியாது. கள முனைகளை அண்டிய பகுதிகளில் விழிப்பு தவறினால், படையினரின் பொறிக்குள் சிக்கும் அபாயம் புலிகளுக்கும் உண்டு.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் படையினர் வரமுடியாது என்ற அலட்சியத்தோடு புலியணிகள் முன்பு நடமாடி வந்தன.

நெடுங்கேணிப் பகுதியில் விறகு ஏற்றுவதற்கு புலிகள் உழவு யந்திரத்தில் செல்வது வழக்கம். பத்துக்கு மேற்பட்டோர் அவ்வாறு சென்று வருவர்.

அதனை நன்கு அவதானித்து கிளைமோர் பொருத்தி காத்திருந்தது எதிர்த்தரப்பு.

ஆனால், அன்றைக்கு என்று புலிகள் இருவர் மட்டுமே உழவு இயந்திரத்தில் சென்றனர். ஏனையோர் பொது மக்கள். கிளைமோர் வெடித்ததில் ஐந்து பொது மக்களும், இரு புலிகளும் பலியாகினர். 21.12.98 அன்று இச்சம்பவம் நடந்தது. இதன் பின்னர் தமது நடமாட்டங்களில் புலிகள் உஷாராகியுள்ளனர்.

களமுனையை அண்டிய பாதுகாப்பு அரண்களில், சுட்டுவிடும் தூரத்தில்தான் இருதரப்பும் காவல் கடமைகளில் இருக்கிறது.

தலையை தூக்கி எதிர்ப்பக்கம் பார்க்கும் போதுகூட வெகு எச்சரிக்கை தேவைப்படுகிறது. எதிர் அரணில் சினைப்பர் துப்பாக்கியுடன் குறிபார்த்தபடி ஒருவர் இருக்கக்கூடும். தலைக் கறுப்பு தெரிந்ததும், அவர் விசையை அழுத்த, தலைக்கு ரவை பாயும்.

எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பிருக்கும் என்று தெரியாது. காட்டு யுத்தத்தில் எந்தப் பற்றைக்குள் எந்த எதிரி இருப்பான் என்பது தெரியாது.

புலிகள், படைத்தரப்பு இரண்டுக்குமே அது பொருந்தும்.

கண்களும், காதுகளும் கூர்மையாக இருக்க வேண்டும். சுடு நிலையில் துப்பாக்கி தயாராக இருக்க வேண்டும்.

'ஜயசிக்குறுய்' ஆரம்பமானபோது நெடுஞ்சாலையில் சமர் நடந்தது. ஐந்து மாதங்கள் வரை சாலைச் சமராகவே தொடர்ந்தது.

பின்னர்தான் சாலை வழியாக புலிகளின் எதிர்ப்பை முறியடிப்பது கடினம் என்று, காட்டுப் பாதைகள் ஊடாக படைத் தரப்பும் சுற்றிச் சுழன்று நகரத் தொடங்கியது.

அதன் பின்னர் ஒருவருட காலமாக காட்டுச் சண்டையே நடக்கிறது.

காட்டுச் சண்டையில் இரு தரப்பும் பதுங்கித் தாக்குதல்களில் ஈடுபட முடியும்.

★ ★ ★

**கொ**ழும்பில் 18.01.99இல் மின்மாற்றிகள் இரண்டு புலிகளால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளன. புறக்கோட்டைப் பகுதியில் இருந்த மின்மாற்றிகளே தகர்க்கப்பட்டன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு கடந்த நவம்பர் 22ம் திகதியும் கொழும்பு செட்டியார் தெருப்பகுதியில் இருந்த மின்மாற்றி தகர்க்கப்பட்டது.

அப்போதும் அது தானாக வெடித்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. அதன் அருகே காணப்பட்ட வெடி பொருட்கள் அந்த சந்தேகத்தை அடித்துவிட்டன. அதே தினம் மட்டக்களப்பிலும் மின்மாற்றி தகர்க்கப்பட்டது.

புறக்கோட்டைப்பகுதியில் வெடித்த மின்மாற்றிகளும் தாமாக வெடித்திருக்கலாமோ என்று சந்தேகம் தெரிவிக்கப் பட்டது.

இரு மின்மாற்றிகளும் ஒரே நேரத்தில்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

வெடித்து சிதறுவதற்கு வாய்ப்பில்லை.

செட்டியார் தெரு மின்மாற்றி வெடிப்பும், புறக்கோட்டை மின்மாற்றிகளது வெடிப்பும் அதிகாலை நேரத்திலேயே நடந்துள்ளது.

அநேகமாக மின்மாற்றித் தகர்ப்புகள், தொலைத் தொடர்பு நிலைய குண்டு வைப்புக்கள் அனைத்தும் அதிகாலையிலேயே நடந்துள்ளன.

18.01.99 அன்று அதிகாலையில் பனி பொழிந்தது. அந்நேரம் அதிக சூடாகி மின்மாற்றிகள் தாமாக வெடிக்க சந்தர்ப்பமும் இல்லை.

அது மட்டுமல்ல, இரு மின்மாற்றிகளும் அருகருகே இருக்கவும் இல்லை. ஒரு மின்மாற்றி புதிய சோனகத் தெரு அருகே இருந்தது. இன்னொரு மின்மாற்றியும் 4ம் குறுக்குத் தெருவில் இருந்தது. இரண்டும் ஒரே நேரத்தில் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.

ஒரே நேரத்தில் வெடிக்க வைக்கப்பட்டால்தான் தாமாக வெடிக்கவில்லை என்பது தெரியவரும் என்பதற்காகவே அவ்வாறு வெடிக்க வைத்துள்ளனர். குண்டு பொருத்தப்பட்ட அடையாளங்களும் காணப்பட்டுள்ளன.

கொழும்பில் பலத்த பாதுகாப்பு மத்தியிலும் தமது இருப்பை தடுக்க முடியாது என்பதையும், தாம் நினைத்தால் தலைநகரில் குண்டுத் தாக்குதல் நடத்த முடியும் என்பதையும் சூசகமாக தெரிவிப்பதே இவ்வாறான சிறு நடவடிக்கைகளின் நோக்கம்.

மட்டக்களப்பில் மின்மாற்றித் தகர்ப்புகளால் அரசுக்கோ, படையினருக்கோ எவ்வித பாதகமும் இல்லை என்பதால், அங்கு மின் சாரம் வழங்க புலிகள் தற்போது அனுமதித்துள்ளனர்.


எனினும், தென்னிலங்கை போன்ற பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள், தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையங்கள் தொடர்ந்தும் புலிகளது இலக்காகவே இருக்கப்போகிறது.

முன்பு என்றால் பொதுமக்கள் கூடும் இடங்களில் குண்டு வைக்கப்படும். தற்போதுகூட அவ்வாறான குண்டு வைப்புக்கள் புலிகளுக்கு கஷ்டமல்ல. புறக்கோட்டையில் மின்மாற்றிகளை தகர்க்க முடிகிறபோது, அங்கு குண்டு வைப்பது கடினமல்ல.

பொது மக்களை மட்டுமே இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்துவதில்லை என்று புலிகள் முடிவு செய்திருப்பதால், தலைநகரில் உள்ள பொருளாதர, மற்றும் அரச இலக்குகளையே தாக்க முடியும். ஆனால் அதை தொடர்ந்து செய்ய முடியாது. எனவே மின்மாற்றிகளைக் குறி வைக்கிறார்கள். சமீபத்திய மின்மாற்றித் தகர்ப்பால் சுமாராக 70 இலட்சம் ரூபாய்கள் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. செய்யப்பட்ட முயற்சி, பாவிக்கப்பட்ட வெடிமருந்துடன் ஒப்பிட்டால் விளைவு பெரிதுதான்.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் காலம் என்பதால், 'புலிகளின் நாசகார வேலை' என்று அரச தொடர்பு சாதனங்கள் உரத்துக் கூறவில்லை. அப்படிக் கூறினால் தலைநகரிலேயே புலிகள் உள்ளனர், புலிகளை முறியடித்த இலட்சனம் இதுதானா? என்று எதிரணி கூறுமல்லவோ! ■

நாரதர்



புலிகளிடம் குறும்தூர ஆயுதங்கள் போதுமானளவு உள்ளதாக கடந்த வாரம் இங்கு குறிப்பிட்டிருந்தோம் அல்லவா. சமீபத்தில் புலிகளது விசேட அணியின் அணிவகுப்பில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. அனைவரிடமும் ஆர்.பி.ஜி. ரக ரொக்கட் லோஞ்சர்கள் காணப்படுகின்றன. இவை போதுமானளவு மட்டுமல்ல, மேலதிகமாகவும் புலிகளிடம் உள்ளன. ஆர்.பி.ஜி.க்கள் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களாகவும் பயன்படுகின்றன.

## அதிரடி அய்யாத்துரை



***அரசியல்வாதிகளை*** 'வாக்குச் சீட்டு வியாபாரிகள்' என்று கேலி செய்வது வழக்கம். வடமேல் மாகாணத்தில் உண்மையான வாக்குச்சீட்டு வியாபாரமே நடக்குதாம்! மக்களுக்கு பணத்தைக் கொடுத்து புள்ளடி போடச் சொன்னால், மாறிப் போட்டுத் தள்ளினா என்ன செய்யிறது? அதனால் இப்ப வெல்லாம், சீட்டை விலை கொடுத்து வாங்கி, தங்கள் ஆட்களை அனுப்பி புள்ளடிபோட வைக்கிறதுதான் யுக்தி. இதுக்காகவே வெளிமாகாண ஆதரவாளர்களைக் கொண்டுபோய் தயாராக வைத்திருக்கினம். பார்த்தியளோ அரசியல்வாதிகள் சனத்தையும் நம்புவது கிடையாது! சீட்டு ஒன்றின் தற்போதைய விலை 200-300 வரை; மேலும் விலை உயரலாம்.

***மறுபிறவியாக*** வந்துள்ளாராம் முன்னாள் தலைவர். தருணம் பார்த்து சனத்தின் மூட நம்பிக்கையோடு நடக்குது விளையாட்டு. பச்சைக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர்தான் சூத்திரதாரியாம். சொல்லிக் கொடுத்த சில பெயர்களை கிளிப்பிள்ளை மாதிரி கூறுகிறதாம் குழந்தை. புதுசாகக் முழிக்குதாம். கேட்டால் திரு திரு வென்று குழந்தையை இந்த வயதிலேயே இப்படிப் பயன்படுத்தினா, எதிர்காலத்தில் கட்சித் தலைமையை கொடுக்க வேணுமல்லோ?

***வடக்கு-கிழக்கு*** மாகாண முன்னாள் அதிகாரக் கட்சியின் செயலாளருக்கும், முன்னாள் முதல்வருக்கும் இடையே எட்டாப் பொருத்தம். இதனை முரசு கூறினால், "பொய் பொய்" என்று அக் கட்சி கதறும். சமீபத்தில் உள்சண்டை அம்பலமாகிவிட்டது. "முன்னாள் முதல்வர் வந்துள்ளாரா?" என்று பி.பி.சி. ஆனந்தி கேட்கிறார். 'ஆம்', அல்லது 'இல்லை' என்று பதில் சொல்லாமல், செயலாளர் விழுங்கி விழுங்கி மழுப்பினார் பாருங்கோ ஒரு மழுப்பல். "அவர் வந்ததாக பத்திரிகைகள் பொய் கூறுகின்றன. அவர் வந்துள்ளாரா இல்லையா? என்பதற்கு விளக்கம் தர விரும்பவில்லை, ஆனால் அவர் வருவது போவது பெரிய விடயமல்ல!" என்றெல்லாம் சொதப்பிப்போட்டார். விஷயம் என்ன தெரியுமோ? தனக்கே தெரியாமல் முன்னாள் முதல்வர் அதிகாரத் தரப்பாருடன் நட்பு பூண்டு வந்திருக்கலாமோ? என்று செயலாளருக்கே சந்தேகம்.

***வெளிநாடு சென்ற*** ஆண்பிள்ளைகளுக்கு ஊரில் இருந்து கல்யாணத்திற்கு பெண் அனுப்புவது தெரிந்த சங்கதிதானே! இப்போது வேறு விதமாகவும் நடக்கிறது. வெளிநாடுகளில் உள்ள தங்கள் பெண் பிள்ளைகளுக்கு ஊரில் மாப்பிள்ளை பார்த்து அனுப்புகினம். "ஆண்கள் மட்டும் நாங்கள் இங்கிருக்கக்கூடியதாக ஊரில் இருந்து இறக்குமதி செய்வினம். நாங்களும் இவைக்கு நெத்தியடியாக ஊரில் இருந்து பெண்களை ஆண் மக்களை இறக்குமதி செய்வோம்!" என்று பெண்கள் கூறுகினமாம். வெளிநாட்டில் இருந்துவந்து இங்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணங்களும் கொழும்பில் நடந்து முடிந்திருக்கிறது. பழிக்குப்பழி!

***சொத்தி உபாலி*** கொலையில் சம்பந்தப்பட்ட வேன் இலக்கம் உட்பட பல தகவல்கள் கிடைத்தும், ஆட்களைப் பிடிக்கவில்லை. ஏன்? ஏன்? ஏன்? சின்ன இடத்து விவகாரம் மாதிரித் தெரியவில்லையாம். அதுதான் தயக்கமாம். தயக்கமா? கலக்கமா?

***மலையக தனித்துவக்*** கட்சி அதிகாரத்தரப்பாருக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்கிறது. "சமாதானத்தைக் கொண்டுவர இன்றைய அதிகாரத் தரப்பால்தான் முடியும்" என்றும் உத்தரவாதம்!" கொடுக்கிறார்களாம். முதலில் தேர்தல் களத்தில் சமாதானத்தை கொண்டுவந்து காட்டுங்கோ!" என்று குழப்பங்களால் பாதிக்கப்பட்ட சனம் முணு முணுக்குதாம்.

***கிழக்கில் தீகவாபி*** பிரச்சனையில் சிருடையினரும் விரட்டலுக்கு பூரண ஒத்துழைப்பு கொடுக்கினமாம். "புதையல் கிடக்கு தோண்ட வேணும், வெளியேறுங்கோ" என்று சனத்தை நோண்டுகினமாம். வாக்குப்பெற்ற பிரதிநிதிகள் எங்கே தூங்குகினமோ?

***தாங்களே*** மறுகட்சிக்காரர்களுக்கு சாத்துப்படி கொடுத்து போட்டு, தங்களுக்கு அடிவிழுந்ததாக முறைப்பாடு கொடுக்கும் விளையாட்டுகளும் தேர்தலில் நடக்குதாம்!

இந்தவாரப் பொன் மொழி. உபயம்: தோமஸ் புல்லர்.

**மனிதன்**

**"யாருடைய குறைகளை எண்ணிவிட முடியுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்!"** ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# தமிழ்க் கட்சிகளும் பிரேமதாசா அரசும்

யாழ்ப்பாணத்தில் தீவுப் பகுதிகளை வலம்புரி நடவடிக்கை மூலம் அரச துருப்புக்கள் கைப்பற்றின.

இந்த நடவடிக்கையின்போது தமிழ்க் குழுக்களின் உதவி பெறப்பட்டதாக அப்போது செய்திகள் வெளியாகின.

அரசு கேட்டிருக்குமானால் தமது உறுப்பினர்களை கொடுத்து உதவ தமிழ்க் கட்சிகள் தயாராகவே இருந்தன. எனினும் உதவி கோரப்படவில்லை.

தீவுப்பகுதியை முழுமையாக கைப்பற்றிய பின்னரே, அங்கு எந்த தமிழ்க் கட்சியை அனுப்புவது என்று பாதுகாப்பு அமைச்சு யோசித்தது.

அப்போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன உயிரோடு இருந்தார். ஈ.பி.டி.பி தீவுப்பகுதியில் தனித்து செயற்பட அனுமதிப்பது. ஏனைய இயக்கங்களை அங்கு செல்ல அனுமதிப்பதில்லை என்று ரஞ்சன் முடிவு செய்தார்.

புளொட், ரெலோ ஆகிய இயக்கங்கள் அப்போது வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதியில் படையினருடன் இணைந்து செயற்பட்டு வந்தன. அதேசமயம் அவர்களது முகாம்கள் தனியாகவே இருந்தன.

ஆனால் ஈ.பி.டி.பிக்கு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை தனது நிர்வாகத்தில் வைத்திருக்கும் அளவுக்கு வாய்ப்புத் தரப்பட்டது.

தீவுப்பகுதியில் படை முகாம்கள் இருந்தபோதும், நிர்வாகத்திலோ, ஈ.பி.டி.பியினரின் செயற்பாடுகளிலோ தலையிட மாட்டார்கள் என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் ஈ.பி.டி.பி பொறுப்பாளராகவும், இராணுவத் தளபதியாகவும் மதன் (இரா மேஸ்வரன்) செயற்பட்டார்.

தீவுப்பகுதிகளில் ஈ.பி.டி.பி. யின் செயற்பாடுகளை ஸ்திரப்படுத் துவதில் மதன் முக்கிய பங்கு வகித்தி ருந்தார். நயினாதீவில் கடற்படை யினர் ஏற்கனவே இருந்தமையால், நயினா தீவு தவிர்ந்த ஏனைய தீவுப்பகுதிகள் அனைத் தும் ஈ.பி.டி.பி.யின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

தீவுப்பகுதியை ஈ.பி.டி.பி. பொறுப்பேற்ற பின்னர், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி பிரேமதாசாவை அப்பகுதிக்கு விஜயம் செய்யுமாறு கேட்டிருந்தார்.

'அங்கு செல்வது பாதுகாப்புக்கு உகந்தது அல்ல' என்று கூறியபோதும், பிரேமதாசா கலந்து கொள்ள சம்மதித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசா, ரஞ்சன் விஜயரத்னா ஆகியோர் யாழ் தீவுப்பகுதிகளுக்கு சென்றனர். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அங்கு நடைபெற்ற கூட்டங்களில் பங்குகொண்டனர்.




## அணுகுமுறை

பிரேமதாசா, ரஞ்சன் விஜயரத்னா ஆகியோர் உயிருடன் இருந்திருந்தாலும் இனப்பிரச்சனைக்கு நீதியான தீர்வொன்றை கண்டிருக்கப்போவதில்லை.

ஆனால், இந்தியப் படைக்கு எதிராக புலிகளுடனும், பின்னர் புலிகளுக்கு எதிராக ஏனைய தமிழ் அமைப்புக்களுடனும் பிரேமதாசா அரசு கொண்ட நட்பு, எதிரிக்கு எதிரி நண்பன் என்ற தந்திரோபாயத்தின் அடிப்படையிலேயே இருந்தது.



ஆனாலும், சரியோ, தவறோ, ஒரு குறிப்பிட்ட வேலைத் திட்டத்தில் இணக்கம் கண்டு சேர்ந்து நின்றால், அந் தரப்புக்கள் இடையே பரஸ்பர மரியாதை இருக்க வேண்டும்.

இந்தியப் படை காலத்தில் பிரேமதாசா அரசு புலிகளோடு பேசியபோது அவர்களுக்குரிய மரியாதையை கொடுத்தது,

அதேபோல பின்னர் புலிகளுக்கு எதிரான ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கும் மரியாதை கிடைத்தது.

வடக்கு-கிழக்குக்கு ஜனாதிபதி பிரேமதாசா சென்றால், அங்குள்ள தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை மேடையில் அமரவைத்துக் கொள்வார்.

எப்போது வேண்டுமானாலும் தமிழ்க் கட்சிகள் பிரேமதாசாவையோ, ரஞ்சனையோ சந்திக்க முடியும்.

வடக்கு-கிழக்கு தொடர்பான அரசியல் நடவடிக்கைகள் எதுவானாலும் தமக்கு ஆதரவான கட்சிகளின் தலைவர்களை அழைத்து முதலில் கருத்துக் கேட்கும் அணுகுமுறையும் பிரேமதாசாவிடம் இருந்தது.

ஜனாதிபதி டி.வி.விஜயதுங்கா மற்றும் தற்போது ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோரின் ஆட்சிகளது அணுகுமுறைகள் நேர் மாறாக காணப்பட்டன. காணப்படுகின்றன.

தமிழ்க் கட்சிகள் கூறும் எக் கருத்தையும் ஆட்சியாளர்கள் ஏற்கமாட்டார்கள். ஆட்சியாளர்கள் கூறுவதை மட்டும் இக் கட்சிகள் ஏற்றுத் தலைமேல் கொண்டு செயற்பட வேண்டும்.

ஈ.பி.டி.பி., புளொட் ஈ.பி.ஆர். எல்.எ.ப். ஆகிய இயக்கங்கள் இன்று அரசை ஆதரிக்கின்றன. ரெலோ படையினருடன் நிற்கிறது. இவற்றின் முக்கிய தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க சென்றால்கூட, உடல் முழுவதும் தடவி சோதனையிட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால் பிரேமதாசாவை அவரது சுசரித்த இல்லத்தில் சந்தித்த தமிழ்க் கட்சித் தலைவர்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதில்லை.

டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் போன்றோரை அவர்கள் யார் என்று சோதனை போடுகிறவர்களுக்கே தெரியும். பின்னர் எதற்கு சந்தேகப்படுகிறார்கள்? இது பற்றி ஈ.பி.டி.பி. தலைவர் ஜனாதிபதியிடமே நேரில் புகார் செய்திருந்தார். "அப்படியா?" என்று ஜனாதிபதி ஆச்சரியப்பட்டாராம். ஆனால் நடைமுறையில் மாற்றமில்லை. அதேசமயம் அமைச்சர்கள் போன்றோர் சோதனையிடப்படுவதில்லை.

1991இல் ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் தமது அரச ஆதரவையோ, புலிகளுக்கு எதிராக அரசுடன் ஒத்துழைப்பதையோ மறைக்கவில்லை. பகிரங்கமாகக் கூறின.

அரசைப் போற்றுவதிலும் போட்டி போட்டன. புலிகளை கடுமையாக கண்டிப்பது யார்? புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடுவது யார்? என்று ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ ஆகிய இயக்கங்கள் மத்தியில் போட்டியே நிலவியது.

ஆனால் இப்போது எந்தவொரு தமிழ்க் கட்சியும் தாம் அரசை நம்புவதாக கூறுவதில்லை. புலிகளுக்கு எதிராக தாம் படையினருக்கு வழங்கும் உதவிகளைப் பற்றி கூறுவதற்கும் வெட்கப்படுகின்றன.

1991இல் தென்னிலங்கை உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பி, புளொட், ஆகிய கட்சிகள் ஐ.தே.கட்சியை ஆதரித் தன.

ஐ.தே.கட்சிக்கு வெற்றி தேடித் தந்த மக்களுக்கு நன்றி தெரிவித்து ஈ.பி.டி.பி, புளொட் ஆகியன நாட்டு மக்க ளுக்கு நன்றி தெரிவித்தன.

ஆனால் தற்போது எக் கட்சியும் அவ்வாறு அறிக்கை விட முடியாத நிலையில்தான் உள்ளன.

பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் அரசை தமிழ் கட்சிகள் ஆதரித்ததால் தமிழ் மக்களுக்கு நன்மை ஒன்றும் கிடைத்துவிடவில்லை. ஆனால் அக்கட்சிகளுக்கு ஓரளவு மரியாதை இருந்தது. இப்போது அரசை ஆதரிக்கும் கட்சிகளுக்கு அதுவும் கிடையாது.

தொடரின் இடையே இது போன்ற சுட்டிக் காட்டல்களும் அவசியப்படுவதால், வெகு தூரம் முன்னால் ஓடிவந்துவிட்டு, திரும்பிச்செல்ல வேண்டியிருக்கிறது. இப்போது மறுபடி பின்னால் செல்லுவோம்.

## வெளியேற்றம்

# வேண்டப்படாதவரான பிரிட்டிஷ் தூதர்

1991 மே மாதம் 11ம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. இத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியினர் வன்முறைகளில் ஈடுபட்டனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும், ஆதரவாளர்களும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக முறையிட்ட வண்ணமிருந்தனர்.

அப்போது இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதராக இங்கு கடமையாற்றியவர் டேவிட் கிளாஸ்ரன். ஒல்லியான உடல்வாகு கொண்டவர். ஊதினால் பறந்து விடுவார் போன்ற தோற்றம்.

உள்ளூராட்சித் தேர்தல் நிலவரத்தை ஆராயத் தலைப்பட்டார் கிளாஸ்ரன்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கட்சி ஆட்சியாளரே வெற்றி பெற்றனர். கள்ளவாக்கு களை அள்ளி போட்டு குறுக்கு வழியில் வெற்றி பெற்றுவிட்டனர் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம், சாட்டியது.

தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாஸ்ரனும் கருத்துக் கூறிவிட்டார். பிரேமதாசாவுக்கு சுள்ளென்று ஏறியது கோபம்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் செலவுக்கும் சில பெட்டிகள் கைமாறியதாக ஒரு தகவலும் பிரேமதாசாவுக்கு யார் மூலமோ எட்டிவிட்டது.

அமைச்சர்கள் உட்பட பலர் தடுத்தும் கேளாமல், கிளாஸ்டன்மீது தன் கோபத்தைக் காட்டினார் பிரேமதாசா.

கிளாஸ்ரன் 'வேண்டப்படாதவர்' என்று அறிவித்தது அரசாங்கம். ஒரு தூதருக்கு இது மிகப் பெரிய அவமானம். பிரிட்டனுக்கும் அடிதான்.

இதனால் பிரிட்டன் தனது அதிருப்தியை வெளிப்படையாக காட்டிக்கொண்டது. பிரிட்டிஷ் பிரதமரால், ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

"டேவிட் கிளாஸ்ரனுக்கு எதிரான நடவடிக்கை முற்றிலும் நியாயமற்றது." என்று பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்திருந்தார்.

எனினும் டேவிட் கிளாஸ்ரன் தொடர்ந்து இலங்கையில் பணியாற்ற முடியவில்லை. வெளியேறினார். நான்கு வருடங்கள் அவர் தூதராக இருந்தார்.

பிரிட்டிஷ் பொதுநலவாயநாடுகளது பாராளுமன்ற செயலாளர் திரு. லென்க் பொயிட் இலங்கைக்கு விஜயம் செய்ய இருந்தார். கிளாஸ்ரன் விடயத்தில் இலங்கை அரசின் நடவடிக்கையை கண்டிக்கும் முகமாக அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை அரசுடனான உறவு பற்றியும், இலங்கை அரசுக்கான நிதி உதவி பற்றியும் மீள்பரிசீலனை செய்யப்போவதாகவும் பிரிட்டன் மிரட்டியது.

என்றாலும் பின்னர் படிப்படியாக ஓரளவு உறவு சுமுகமானது.

அடுத்தவாரம் அதிரடியான தகவல்களோடு சந்திப்போம்.

(தொடர்ந்து வரும்)

# வைரவர் கோயிலுக்குள் தயாரான குண்டு

இது சன்சோனிக் கமிஷன் சமர்ப்பித்த இறுதி அறிக்கையில் இருந்து திரட்டப்பட்ட முக்கிய விவரங்கள். இவற்றில் சேனாதி ராஜா என்பது மாவை சேனாதிராஜாவையும் (இன்று கூட்டணித் தலைவர்களில் ஒருவர்) சத்தியசீலன் என்பது தமிழ் மாணவர் பேரவைத் தலைவராக இருந்த பொன்-சத்யசீலனையும், ஆனந்தவிநாயகம் என்பது வண்ணை ஆனந்தனையும் குறிக்கும்.

*சத்தியசீலன் தமது ஒப்புதல் வாக்குமூலத்தில் திரு.சி. குமாரசூரியன்மீது கைக்குண்டு வீசும் ஒரு சதியாலோசனை பற்றிக் குறிப்பிட்டார். 1972, பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடைபெறவிருந்த இச்செயல், அன்னார் பாராளு மன்றத்தின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பெற்றமையைப் பாராட்டி நடக்கவிருந்த வரவேற்புபசாரமொன்றிற்கு அன்னார் சமூகமளிக்கும் தருணத்திற்கெனக் குறிக்கப்பட்டு இருந்தது.*

*இவ்வாலோசனையை அவர் முன் வைத்த சேனாதிராசா என்பவரிடமிருந்து அவர் இருபத்தைந்து (ரூபா 25/-) பெற்றார். சோதிலிங்கம் எனும் ஒருவருக்கு இவ் வெண்ணத்தை அவர் தெரிவிக்கவே, குண்டுகளைத் தயாரிக்க அந்நபர் ஒருப்பட்டதோடு, அந்நோக்கத்திற்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டுப் பத்து ரூபா (ரூ.10/-) கேட்டுப் பெற்றுக்கொண்டார்.*

## கோவிலில்

*குண்டுகளைத் தயாரித்ததற்கு ஓரிடம் காணப்பெறவேண்டி இருந்தது; இதற்காக, மதியாபரணத்தின் துணைநாடி அவரது வீட்டிற்குத் தானும் சிவராஜா எனும் ஒருவரும் சென்றதாகச் சத்தியசீலன் கூறினார். பெப்ரவரி மாதம் 12ஆம் திகதியன்று காலையில் குண்டுகளைத் தயாரிப்பதற்கெனத் திட்டமிடப்பட்டது; ஏனெனில், குருநகரில் அதேநாளன்று அக்கூட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.*

*இதற்கேற்ற இடம் கொண்டலடி வைரவர் கோவில் என மதியாபரணம் யோசனை தெரிவித்ததுடன், அக்கோவில் மடைப் பள்ளியின் திறவுகோல் தம்வசமிருந்ததாகவும் அவர் உரைத்தார்.*

*சத்தியசீலனின் வாக்குமூலப்படிக்கு, கூட்ட நாளன்று காலை, அவரும், ராஜகுல சூரியரும் குவேந்திரராஜாவும், குண்டுகளைத் தயாரிக்கவிருந்த இன்னும் இருவரும் (02 பேரும்) அக்கோவிலுக்குப் போயினர்; குண்டுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் பிரம்புக்கூடையொன்றினுட் கொண்டு செல்லப்பட்டது.*

*அங்கே மதியாபரணம்,*



மாவை சேனாதிராஜா

*சிவராஜா, சோதிலிங்கம் ஆகியோரைக் கண்டதாக அவர் உரைத்தார். மடைப்பள்ளி திறந்திருந்தது; குண்டு தயாரிப்பு ஆட்கள் கூடையையுங்கொண்டு உள்ளே புகுந்தனர்; சத்தியசீலன், மதியாபரணம், சோதிலிங்கம் ஆகியோர் கோவில் நூல் நிலையத்தினுள் இருந்தனர்.*

*சிறிது நேரமாகியதும் அவ்விடத்தை நோக்கி "அவர்களைப் பிடியுங்கள், அவர்களைப் பிடியுங்கள்!" எனக் கூக்குரலிட்டவாறு ஏழு எட்டுப்பேர் அவ்விடத்திற்கு ஓடிவரவே, சோதிலிங்கம், மதியாபரணம், சத்தியசீலன் முதலானோர் ஓடித் தப்பித்துக் கொண்டனர்.*

*இச்சதியில் குவேந்திரராஜாவுக்குள்ள தொடர்பிற்குத் திரு. இராஜகுலசூரியர் சான்று பகர்ந்துள்ளார். இது சம்பந்தமாகத் திரு. இராஜகுலசூரியர் 1972, ஜூலை மாதம் 09ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் நீதவானுக்கு நல்கிய வாக்குமூலம் ஈண்டு முன்னிலைப்படுத்தப் பெற்றுள்ளது.*

*அவ்வாக்குமூலத்தின்படிக்கு, குவேந்திர ராஜா, 1972, பெப்ரவரி மாதம்12ஆம் திகதியன்று மாலை குருநகரில் நடைபெறவிருந்த ஒரு கூட்டத்தில் திரு. குமாரசூரியர்மீது குண்டுகள் வீசப்படவுள்ள உத்தேசம் பற்றி இராஜகுல சூரியரிடம் தெரிவித்தார். அவர் 12 ஆம் திகதியன்று காலை இராஜகுலசூரியரைச் சத்தியசீலனுக்கு அறிமுகஞ் செய்தும் வைத்தார்; "இப்பணியைப் பொறுப்பேற்க ஆயத்தமா" என இராஜகுல சூரியரிடம் சத்தியசீலன் வினவியபோது, அவர் அதற்கு உடன்பட்டுக்கொண்டார்.*

*1972, ஜூலை மாதம் 10ஆம் திகதியன்று யாழ்ப்பாண நீதவானுக்கு எம். மதியாபரணம் கொடுத்த வாக்குமூலம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. கே. சிவராஜாவினால் அழைத்துவரப்பெற்ற சத்தியசீலனை 1972, பெப்ரவரி மாதம் 11ஆம் திகதியன்று தாம் சந்தித்தார் என அவர் குறிப்பிட்டார். சத்தியசீலன் எதையோ ஒன்றைக் கொண்டலடி வைரவர் கோவில் மடைப்பள்ளியினுள் வைத்தற்பொருட்டு அதன் திறப்பைத் தம்மிடம் கேட்டார் எனவும், தாம் அதற்கு உடன்பட்டார் எனவும் அவர் கூறினார்.*

*முன்உடன்பாட்டின்படி 12ஆம் திகதி காலையில் அவர்கள் கோவில் நூல்நிலையத்திற் சந்தித்தனர் எனவும், சத்தியசீலனிடம் தாம் சாவியைக் கொடுத்தார் எனவும் அவர் மேலும் இயம்பினார்.*

*அதன்பின்னர், கோவிலுக்கு வெளியே சத்தியசீலன், குவேந்திரராஜா, மதியாபரணம் ஆகியோர் ஒருவரோடொருவர் கதைத்துக் கொண்டிருந்தவேளை, குருநகர்க் கூட்டத்தில் மின்சாரக்கம்பியை வெட்டிவிடும் வண்ணம் குவேந்திரராஜாவிடம் சத்தியசீலன் கூறினார்: தாம் (அதாவது சத்தியசீலன்) காரொன்றையும், கூட்டமேடைமீது குண்டுவீச ஆளொருவரையும் ஏற்பாடு செய்து உதவுவார் எனவும், கூறினார்.*

*அத்தகைய நடத்தைக்கு மதியாபரணம் எதிருரை கூறியபோதும் சத்தியசீலன் அவரை மிரட்டவே, அவர்களுடன் சேர்ந்துகொள்ள அவர் உடன்பட்டார். அவ்வாக்குமூலத்தில் எஞ்சியன பற்றி நான் குறிப்பிட வேண்டியதில்லை.*

*கைக்குண்டுகள் தயாரித்ததற்கும், 1972 பெப்ரவரி மாதம் 12ஆம் திகதியன்று குருநகரிற் கூட்டமொன்றிற்கு திரு. சி. குமாரசூரியர் சமூகமளித்தபோது, அவர்மீது அக்கைக்குண்டுகளை வீசுவதற்கும், சத்தியசீலன், இராஜகுலசூரி யர், மதியாபரணம் என்போர்க்கிடையில் ஒரு சதியாலோசனை நடைபெற்றமை தெளிவாகின்றது.*

## துக்கதினம்

*குற்றத்தை ஒப்புக்கொண்டு பெப்ரவரி 28ம் திகதியன்று சத்தியசீலன் கொடுத்த வாக்குமூலத்தின் கண் அவர் குறிப்பிட்ட இன்னுமொரு சதியாலோசனை உண்டு.*

*முறிகண்டியில் நிறுவப்பட்டுள்ள உயர் அழுத்த மின்கோபுரங்களுக்குப் பழுது விளைவித்தலே அதன் நோக்கமாக இருந்தது. அவர், 1972, மே மாதம் 20ஆம் திகதியன்று நீராவியடியிலுள்ள மணியம் வீட்டிற்குச் சென்றிருந்தார் என உரைத்தார். அங்கே காசி ஆனந்தன், ஆனந்தவிநாயகம், சேனாதிராஜா, அமரசிங்கம், ஜெயம், மணியம் ஆகியோரைச் சந்தித்தார். ஆனந்தவிநாயகம், 22ஆம் திகதி துக்க தினமாக அனுஷ்டிக்கப் பெறல் வேண்டும் என அங்குவைத்துக் கூறினார்.*

*ஆகவே குடியரசு தினத்தன்று யாழ்ப்பாணக் குடாநாட்டினை இருளில் மூழ்கவைத்தல் வேண்டும் எனவும் அவர் மேலும் சொன்னார். சமூகமாக இருந்த அனைவரும் அவரது கூற்றுக்கு ஏகமனதாக உடன்பட்டனர். மின்சாரச் சபையின் ஒருமுன்னைநாள் ஊழியராகிய ஜெயம் அதனைக் கவனித்துக்கொள்வார் என மணியம் இயம்பினார்.*

*21 ஆம் திகதியன்று மணியம் வீட்டிற்குத் தாம் சென்றார் எனவும், அங்கு மணியமும் ஆனந்த விநாயகமும் நின்றனர் எனவும் சத்தியசீலன் குறிப்பிட்டார். ஜெயம் "ஸ்பனர்" கள் கொணர்ந்தார். வெளியே சென்ற மணியம், இராசலிங்கம் செலுத்திவந்த காரொன்றினைக் கொண்டுவந்தார்.*

*பிப. 2.00 மணியளவில் புறப்பட்ட இந்த ஐவரும் (05) வழியில் அமரசிங்கத்தை ஏற்றிக் கொண்டு போயினர். மாங்குளம் சந்தியிலிருந்து இரண்டு (02) மைல்கள் தொலைவிலுள்ள ஓரிடம்வரை காரைச் செலுத்திச் சென்ற அவர்கள், மோட்டார் காரினுள் இராஜலிங்கத்தை விட்டதன்பின், மின்கோபுரங்களுக்குக் கால்நடையாகப் போனார்கள்.*

*ஜெயமும், மணியமும் புரிஆணிகளையும் சம்பந்தப்பட்ட பாகங்களையும் மூன்று (03)கோபுரங்களினின்றும் கழற்றினராயினும், அவற்றுள் ஒன்றினின்றும் சில ஆணிகள், பாகங்கள் முதலியவற்றையே அவர்களாற் கழற்றமுடிந்தது. கோபுரங்கள் சாய்ந்து விழவில்லை.*

*காருக்கு மீண்ட அவர்கள் யாழ்ப்பாணத்திற்குக் காரில் மீண்டனர். மின்கோபுரங்கள் பொறிந்து வீழ்ந்து விட்டன எனப் புதினப்பத்திரிகைகள் வாயிலாக அதன்பின்னர் அவர் அறிந்தனர்.*

www.padippakam.com

# அலசுவது-- இராஜதந்திரி

ஜனவரி 25ம் திகதி வடமேல் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. உச்சக்கட்டப் பிரசாரம் தற்போது சூடுபிடித்திருக்கிறது.

ஒரே ஒரு மாகாண சபையில் தேர்தல் நடைபெற்றாலும், பொதுத்தேர்தல் ஒன்றைப் போன்றே ஆளும்தரப்பு இதனை எதிர் கொண்டுள்ளது.

ஆளும் தரப்பின் ஆட்பலம், வாகன பலம், அதிகாரபலம், பணபலம், அனைத்தும் வடமேல் மாகாணத்தில் ஒன்று குவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தனது பலத்தை ஒருமுகப்படுத்தி தேர்தல் பிரசாரத்தில் குதித்திருக்கிறது.

பிரமாண்டமான சுவரொட்டிகள், நீலவர்ணக் கொடிகள் போன்ற ஆரவாரங்களால் வடமேல் மாகாணம் முழுவதையும் நீலப் பிரதேசமாக மாற்றியுள்ளனர் பொதுஜன முன்னணியினர்.

இடைக்கிடையே மிக அரிதாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் சுவரொட்டிகளையும், பச்சைக் கொடிகளையும் காணக்கூடியதாகவுள்ளது.

பச்சைக் கொடிகள் கட்டினாலோ, பொதுக் கூட்டங்கள் நடத்தினாலோ தாக்குதல் நடக்குமளவுக்கு அச்சுறுத்தல் உள்ளதாக அக் கட்சியினர் கூறியுள்ளனர்.

பொது ஜன முன்னணி இம்முறை தனது தொண்டர் படையை மட்டுமன்றி, ஒட்டுமொத்தமான குண்டர் படையையும் தேர்தல் களத்தில் இறக்கியுள்ளது.

இதனையடுத்து ஐ.தே.கட்சி தனது பிரசார உத்தியை மாற்றியாக வேண்டிய நிலைக்கு உள்ளானது.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியில் பிரசார திட்டம் வகுக்கப்பட்டது. பொதுக் கூட்டங்கள், கொடிகள் கட்டுதல் என்பவற்றை குறைத்துக் கொண்டு, வீடு வீடாக நேரடியாக சென்று பிரசாரம் செய்து வருகின்றனர்.

'பொக்கற் மீட்டிங்' எனப்படும் சிறு கூட்டங்களை நடத்தியும் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர்.

பொதுஜன முன்னணி வீதிக்கு வீதி ஆரவாரம் செய்து கொண்டிருக்க, ஐக்கிய தேசியக் கட்சி வீட்டுக்கு வீடு சென்று கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறது.

பொதுஜன முன்னணியினர் பிரமாண்டமான பொதுக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். ஜனாதிபதியும் ஒய்வு ஒழிச்சல் இன்றி பிரசாரக் கூட்டங்களில் பங்கு கொண்டு வருகிறார்.

1994இல் மக்களைக் கவர்ந்திழுத்த அவரது புன்னகையால் இம்முறை அதே வசீகரத்துடன் மக்களைக் கவர்ந்திழுக்கமுடியவில்லை.

பிரசாரக்கூட்டங்களுக்கு எதிர்பார்த்தளவு மக்கள் வரவில்லை என்பது பொதுஜன முன்னணி வட்டாரங்களை கடுமையாக யோசிக்க வைத்துள்ளது.

அரச தொலைக் காட்சியில் பொதுஜன முன்னணியினரின் மேடைகளைத்தான் நெருக்கத்தில் காண்பிக்கிறார்கள். கூட்டத்தினரை மேலோட்டமாக காண்பிக்கிறார்கள். அரச பத்திரிகைகளிலும் பொதுக் கூட்ட மேடையும், அங்கு அமர்ந்திருக்கும் அரச தரப்பு பிரதிநிதிகளது புகைப்படங்களும் மட்டுமே பிரசுரமாகி வருகின்றன.

"கூட்டத்தில் திரண்டிருந்த இலட்சக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினரை இங்கே காணலாம்" என்னும் அடிக்குறிப்புடன் வெளியிடக்கூடியளவுக்கு பொதுக்கூட்டங்களுக்கு மக்கள் திரண்டு செல்லவில்லை.

1994இல் ஐக்கிய தேசியக் கட்சிமீது காணப்பட்ட அதிருப்தி அலை தற்போது அடங்கியிருக்கிறது. அதேசமயம் பொதுஜன முன்னணி ஆட்சியினரும் மக்கள் தம்மீது கொண்டிருந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளனர்.

இக் காரணங்களால் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு முன்பு கிடைத்த உற்சாக வரவேற்பு இம்முறை காணப்படவில்லை.

ஐ.தே.கட்சியின் '17 வருடகால ஆட்சி குறித்து கடந்த பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் ஆகியவற்றில் பொதுஜன முன்னணியினர் அக்குவேறு ஆணிவேறாக விளக்கி முடித்திருந்தனர். இம்முறையும் மறுபடி அதனையே திரும்பத் திரும்ப கூறுவதும் பொதுஜன முன்னணியின் பிரசாரங்களில் மக்களுக்கு சலிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த நான்கு வருடங்களில் தமது ஆட்சியின் சாதனை என்று கூறத்தக்கதாக பொதுஜன முன்னணியிடம் இருப்பது யுத்தமும், ஐ.தே.கட்சிக்கு எதிரான விசாரணைக் கமிஷன் முடிவுகளும் மட்டுமே.

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி காணுமானால் அக்கட்சிக்கு அதனால் பாரிய சேதம் எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

ஆனால் பொதுஜன முன்னணி தோல்வி காணுமானால், அரசாங்கத்தின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும். ஆட்சிக்கட்டிலில் இருந்து இறங்குமாறு மக்கள் மன்றில் ஒலித்த அபாய மணியோசையாகவே கருதப்படும்.

## வடமேல் மாகாணசபை

## வெற்றி பெறுவதை தீர்மானிப்பது யார்? எது?





உள்நாட்டில் மட்டுமன்றி, உலக அரங்கிலும் அரசினதும், ஜனாதிபதியினதும் செல்வாக்கு பலத்த சேதத்துக்கும் உள்ளாகும். எனவே எவ்வாறெனினும் வெற்றி பெற்றேயாக வேண்டும் என்பது பொதுஜன முன்னணிக்கு மட்டுமன்றி, ஜனாதிபதிக்கும் கௌரவப் பிரச்சனையாக மாறியிருக்கிறது.

1994இல் பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் தேர்தலில் ஊழல் என்ற பேச்சுக்கே இடமின்றி மகத்தான வெற்றி பெற்றிருந்தது பொதுஜன முன்னணி.

ஆனால், அதன் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணி ஈடாட்டம் காணத்தொடங்கியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது தேர்தல்களில் சித்து வேலைகள் காண்பிப்பதிலும், வன்முறைகளை ஏவிவிடுவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தது. கைதேர்ந்த குண்டர் படை ஒன்று அக் கட்சியிடம் இருந்தது.

சொத்தி உப்பாலி போன்ற பல குண்டர் படைத் தளபதிகள் அதனிடம் இருந்தனர்.

வாக்குப் பெட்டிகள் மாயமாக மாற்றப்படுவது முதற்கொண்டு, பல்வேறு விதமான தேர்தல் வன்முறைகள் ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அரசினுடைய வளங்கள் அத்தனையும் ஆளும் கட்சியின் வெற்றி வாய்ப்புக்காக பயன்படுத்தப்பட்டன. பொலிஸ் உயரதிகாரிகள் முதற்கொண்டு, சிவில் அதிகாரிகள் வரை ஆளும் கட்சிக்கு வேண்டப்பட்டவர்களே தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஆளும் கட்சிக்கு ஒத்தாசையாக செயற்பட மறுத்த பொலிஸ் அதிகாரிகள் எதிர்க்கட்சிக்கு வேண்டப்பட்டவர்களாக முத்திரை குத்தப்பட்டு இடமாற்றம், பழிவாங்கல் போன்றவற்றுக்கு உள்ளாகினர்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்றவை அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் சொந்த பிரசார சாதனங்களாகவே மாறியிருந்தன.

இவற்றையெல்லாம் விலாவாரியாக கண்டித்த பொதுஜன முன்னணியினர், தாம் புதிய யுகம் ஒன்றை உருவாக்கப்போவதாக கூறியே 1994இல் ஆட்சிக்கட்டிலில் ஏறினார்கள்.

ஆனால், கடந்த நான்காண்டுகளில் பொதுஜன முன்னணியின் அணுகுமுறைகள், தமக்கு முன்பிருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளரின் பாதையில் செல்வதாகவே மாறியுள்ளன.

"சீச்சீ இந்தப் பழம்புளிக்கும்" என்ற கதைபோன்றே, முன்பு தம் கையில் அதிகாரம் இல்லாதபோது, ஐ.தே.க. ஆட்சியாளர்மீது பொ.ஐ.முன்னணி தெரிவித்த கண்டனங்களையும் இன்று நோக்கவேண்டியுள்ளது.

ஐ.தே.கட்சி ஆட்சியில் இருந்தபோது தம்மால் வன்முறைகளில் ஈடுபட முடியாத காரணத்தால்தான் பொ.ஐ.முன்னணியினர் வன்முறைகளை எதிர்த்து குரல் கொடுத்தனர் என்று கருதுமளவுக்கு கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் வன்முறைகள் தலைதூக்கியிருந்தன.

தேர்தல் சாவடிகளில் ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஏனைய கட்சிகளதும் முகவர்கள் வாக்களிப்பு முடியும் இறுதித் தறுவாயில் விரட்டியடிக்கப்பட்டனர். அதன் பின்னர் வாக்குச் சாவடிகளுக்குள் இருந்த வாக்குச் சீட்டுக்களை எடுத்து புள்ளடி போட்டு வாக்குப் பெட்டிகளுக்குள் தள்ளினார்கள் என்று புகார்கள் கூறப்பட்டன.

இம்முறை வடமேல்மாகாண சபைத் தேர்தலிலும் அவ்வாறான ஒரு நிலை ஏற்படக்கூடும் என்று எதிரணிகள் கூறிவருகின்றன.

இத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டனர்.

திடீரென்று அம் மாகாண சபை ஆளுநரும் தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். இந்த ராஜினாமாவுக்கான காரணத்தை கூற முடியாதநிலைக்கு அவருக்கு சில நாகரிகமான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டதாகவும் அறியப்படுகிறது.

ராஜினாமாவுக்கான காரணத்தை அவர் கூறியிருந்தால் ஆளும் தரப்புக்கு பெரும் தலையிடியாக அமைந்திருக்கும். எனினும் அவரது ராஜினாமா வடமேல் மாகாண சபை வாக்காளர்களிடம் ஆளும் தரப்பின் மதிப்பை இறக்குவதில் ஓரளவு பங்கு வகித்துள்ளது.

ஆளும் தரப்பின் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு ஒத்துழைக்க மறுத்தே அவர் பதவியை ராஜினாமா செய்ததாக எதிரணிகள் பிரசாரம் செய்வது வாக்காளர்களிடம் எடுபடுவதாகவே தெரிகிறது.

இதற்கிடையே அரச கட்டுப்பாட்டு வெகுஜன தொடர்புச் சாதனங்கள் முற்று முழுதாக பொதுஜன முன்னணியின் பிரசார சாதனங்களாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஐ.தே.கட்சி ஆட்சியில் எவ்வாறு அக் கட்சியினரால் அப்பட்டமாக கட்சிப் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்பட்டனவோ, அதேபோலவே இப்போது பொ.ஐ.முன்னணியினரும் தமது பிரசார சாதனங்களாக அவற்றை மாற்றியுள்ளனர்.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் போன்றே வெளிவருகின்றன. அரச வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிலும் பிரசார நெடி முகம் சுளிக்கவைப்பதாகவே இருக்கிறது.

இதேவேளை ஆளும் தரப்பு பாராளுமன்ற ஊறுப்பினரான திசநாயக்காமீதும், அவரது ஆதரவாளர்கள்மீதும் ஏகப்பட்ட புகார்கள் கூறப்பட்டுள்ளன.

புத்தளத்தில் தபாலகம் ஒன்றிலிருந்து வாக்குச் சீட்டுக்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாகவும் ஆளும் கட்சி எம்.பிமீது புகார் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சென்ற கார்மீதும் தாக்குதல் நடந்திருக்கிறது.

இதனிடையே ஐக்கிய தேசியக் கட்சியினர் கள்ள வாக்கு போட உள்ளதாக பொ.ஐ.முன்னணியினர் கூறி வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் மோசடிகளில் ஈடுபடாத கட்சியல்ல. சந்தர்ப்பம் கிடைத்தால் கள்ளவாக்குகள் போடுவதற்கு எக் கட்சியும் தயங்கப்போவதில்லை.

ஆனால், அதிகாரத்தில் உள்ள கட்சியினருக்கே குட்டித் தேர்தல்களில் சித்து விளையாட்டுக்கள் காண்பிக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

அடுத்து ஆட்சியமைக்கப்போவது யார் என்பது தெரியாத நிலையில் பொதுத் தேர்தல்களில் அரச அதிகாரிகள் பெரும்பாலும் கட்சி சார்பற்று செயற்படுவர். யார் கள்ள வாக்குப் போட்டாலும் கைது செய்வர். யார்மீது புகார் கூறப்பட்டாலும் துணிந்து நடவடிக்கை எடுப்பார்கள்.

ஆனால், மேலும் சில காலம் மத்திய ஆட்சி குறிப்பிட்ட கட்சியிடமே இருக்கும் என்ற சூழ்நிலையில், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும்போது, ஆட்சியில் உள்ள கட்சிக்கு விரோதமாக செயற்பட அதிகாரிகள் துணியமாட்டார்கள். ஒரு சிலர் அவ்வாறு துணிந்தால் அவர்களை இடமாற்றும் அதிகாரமும் ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது.

எனவே, மத்தியில் அதிகாரத்தில் உள்ள கட்சியால் குட்டித் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் மோசடிகளில் ஈடுபட முடியாமல் தடுக்கவும் முடியும். தமது கட்சியினருக்கு தோதான சூழலை தமது அதிகாரத்தின் மூலம் உருவாக்கித்தரவும் இயலும்.

இவ்வாறான நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி கள்ள வாக்குப் போட திட்டமிடுவதாக பொதுஜன முன்னணியின் அதிகாரமுள்ள அமைச்சர்களே கூறிவருவது விசித்தரமாக உள்ளது.

தேர்தலை நீதியாக நடத்தும்படி மக்கள் அரசிடம் முறையிடலாம். அந்த அரசே மக்களிடம் முறையிடுவது பிரசார விளையாட்டாகவே கருதப்படும்.

நீதியான, நேர்மையான தேர்தல் நடத்தப்படும் என்று ஆளும்தரப்பு திரும்பத் திரும்பக் கூறிவருகிறது. நீதியான தேர்தல் நடைபெறுமா? என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது என்பதை ஆளும்தரப்பும் உணர்ந்துள்ளதையே அத்தகைய கூற்றுக்கள் புலப்படுத்துகின்றன.

சென்றமுறை வடமேல் மாகாண சபையில் குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில் ஐ.தே.கட்சி தோல்வி கண்டிருந்தது. லலித் ஆதரவாளர்கள் அப்போது ஐ.தே.கட்சிமீது விரோதம் கொண்டிருந்தனர்.

லலித்தின் வலது கரமாகத் திகழ்ந்த பிரேமச்சந்திராவுக்கு கணிசமான செல்வாக்கு நிலவியது. பின்னர் பிரேமச்சந்திராவும் காமினி திசநாயக்காவுடன் ஐ.தே.கட்சியில் இணைந்திருந்தார்.

எனவே, லலித் கொலைக்கு பிரேமதாசாவே காரணம் என்ற கருத்தோடு 1994ல் லலித் ஆதராவாளர்களிடையே இருந்த ஆவேசமும், ஐ.தே.கட்சிமீதான விரோதமும் இம்முறை காணப்படவில்லை.

மொத்தத்தில் வடமேல் மாகாண சபையில் பொது ஜன முன்னணிக்கு பெரும் சார்பு அலை எதனையும் காணமுடியவிலலை. ஆனால, இறுதி நேர மாயாஜாலங்களால் மாற்றங்களை ஏற்படுத்தி விடுவார்களோ என்ற அபிப்பிராயமே மேலோங்கியுள்ளது.

ஐ.தே.கட்சி, பொதுஜன முன்னணி இரண்டுமே கள்ள வாக்குகள் பற்றி பிரஸ்தாபிக்கின்றன. கள்ளவாக்குகள் ஒரு தேர்தலின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க முடியுமா? என்று கேள்வி எழுகிறது.

ஐ.தே.கட்சியும், தேர்தல் வித்தைகளில் பெயர் போனவருமான பிரேமதாசா பதவியில் இருந்தபோதுதான் சந்திரிக்கா மேல் மாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றியைப் பெற்றிருந்தார். அப்போதும் ஐ.தே.கட்சி கள்ள வாக்குகள் போட்டிருந்தது. மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றிருந்தன.

ஆயினும் அப்போது ஐ.தே.கட்சிக்கு எதிரான பெரும் அலை எழுந்தடித்தது. கள்ள வாக்குகள் எத்தனை போட்டாலும் அந்த அலை முன்னால் தாக்குப் பிடிக்க முடியாதளவுக்கு அமைந்திருந்தது.

ஆனால், தற்போது ஆளும் தரப்பிடம் வாக்காளர்களுக்கு அதிருப்தி நிலவினாலும், பாரிய எதிர்ப்பலை எதுவும் காணப்படவில்லை.

எதிர்ப்பலை வீசினால் பெருமளவான வாக்காளர்கள் சென்று வாக்களிப்பர். அதனால் வாக்குச் சாவடிகளில் வாக்குச் சீட்டுக்களை களவாடி கள்ளவாக்குப் போடவும் சந்தர்ப்பம் குறைவாகவே இருக்கும்.

அவ்வாறில்லாமல், எக் கட்சியிலும் நம்பிக்கையின்றி, பலர் வாக்களிக்கவே செல்லாத மந்தமான தேர்தல்களில்தான் கள்ள வாக்குகள் வெற்றி தோல்வியை தீர்மானிக்கக் கூடியதாக மாறிவிடுகின்றன.

தற்போதைய வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சிமீது மக்களுக்கு அதிருப்தி இருக்கிறது. ஆனால் அது பொங்கிப் பிரவாகிக்கும் எதிர்ப்பு அலையாக மாறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிமீது முன்பிருந்த அதிருப்திகள் தணிந்திருக்கிறது. அது பேராதரவு அலையாக மாற்றம் பெறவில்லை.

எனவே, வடமேல் மாகாண சபைத் தேர்தல் வாக்காளர்களைப் பொறுத்தவரை மந்தமான தேர்தல்தான். எனவே இறுதி நேர மாயாஜாலங்கள் அரங்கேறினால் முடிவுகளில் தாக்கம் செலுத்தவே செய்யும்.

---

# சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

**வ**டமேல் மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புக்கும், அமைச்சர் பௌசியின் ஆதரவாளர்களுக்கும் இடையே பனிப்போர் மூண்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் முதன்மைப்படுத்த விரும்பும் வேட்பாளரை தலைநகர அமைச்சருக்கு பிடிக்கவில்லை. அவர் முன்னிலைப் படுத்தும் வேட்பாளரை முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு பிடிக்கவில்லை.

அதிக வாக்குகளை அள்ளித் தரப்போவது யார்? முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கும் வேட்பாளரா? அல்லது தலைநகர அமைச்சர் ஆதரிக்கும் வேட்பாளரா? என்ற பலப்பரீட்சையில் இருதரப்பும் இறங்கியுள்ளது.

இதனால் பொதுஜன முன்னணியின் வாக்கு அறுவடை பாதிக்கப்படுகிறது என்று அக் கட்சி ஆதரவாளர்கள் சிலர் புலம்புகிறார்கள்.

கிழக்குக்கு வெளியேயும் தனக்கு செல்வாக்கு இருக்கிறது என்பதை நிரூபிக்க அமைச்சர் அஷ்ரப்புக்கு இது ஒரு சந்தர்ப்பம்.

இலங்கை முஸ்லிம்களின் தேசியத் தலைவர் என்ற நாற்காலிதான் அமைச்சர் அஷ்ரப்பின் இலட்சியம்.

கிழக்கில் மட்டுமே அவருக்கு செல்வாக்கு என்றுகூறி அந்த நாற்காலியை நெருங்கவிடாமல் தடுப்பவர்களுக்கு தான் யார் என்பதை நிரூபிக்க நினைக்கிறார்.

ஆனால் அமைச்சர் பௌசிக்கு கணிசமான செல்வாக்கு இருக்கிறது தென்னிலங்கை முஸ்லிம்களின் தலைவர் அவர்தான்! என்கிறார்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் அணியினர்.

—0—

## "பிடி பிடி திருடன், திருடன்"

**மா**காணசபைத் தேர்தலில் எப்படியெல்லாம் திருகுதாளங்கள் நடக்கும் என்பதை ஊகித்து அதற்கேற்ப மாற்று ஏற்பாடுகளை செய்யத் தொடங்கியுள்ளதாம் ஐ.தே.கட்சி.

அதற்காகவே தனியான கண்காணிப்பு அணிகள் எம்.பி.கள் தலைமையில் போடப்பட்டுள்ளன.

பாம்பின்கால் பாம்பறியும். தேர்தல் மோசடிகள் எப்படி, எந்தெந்த முறையில் நடைபெறும் என்பதை ஐ.தே.கட்சி மிக நன்று அறியும்.

கள்ளவாக்கு போடவிடமாட்டோம் என்று ஆளாளுக்கு போட்டியாக கூறுகிறார்கள். இந்த பேச்சுக்களை படிக்கும்போது ஒரு கதை எட்டிப்பார்க்கிறது.

திருவிழாவில் கூட்ட நெரிசலில் சங்கிலியை அறுத்த திருடன், சங்கிலியை பறிகொடுத்தவரைவிட உரத்த குரலில் 'திருடன், திருடன்' என்று கத்திக்கொண்டு ஓடினானாம்.

கள்ள வாக்குகள் பற்றிய அரசியல் கட்சிகளது எதிர்ப்புக் கோஷமும் அப்படித்தான்.

□□

**இ**ந்தியாவில் இருந்து வெளியாகும் நாளிதழ் 'இந்து'. ராஜீவ் காந்தி கொலைக்கு பின்னர் 'இந்து' வுக்கு புலிகளை பிடிக்கவே பிடிக்காது. அதற்கு முன்னர் புலிகளை ஆதரித்தது.

தனது புலி எதிர்ப்புக் கண்ணோட்டத்தில் 'இந்து' வெளியிடும் சில செய்திகள் இலங்கை அரசுக்கு சந்தோசத்தை தருகின்றன.

"இந்தியாவில் புலிகள் ஊடுருவாமல் கடும் கண்காணிப்பு!", "இலங்கைப் பிரச்சனையில் இந்தியா தலையிடாது என்று உறுதி", "தமிழ் நாட்டில் புலி ஆதரவாளர்கள்மீது கண்காணிப்பு!" என்றெல்லாம் செய்திகள் வெளியிடுகிறது 'இந்து'.

அவ்வாறு கண்காணிப்பு எதுவும் புதிதாக மேற்கொள்ளப்படுவதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

# அதிர் இடி 45

**கடந்தவாரம்**

**வெளிநாட்டமைச்சில் பணியாற்றிய பிறின்சஸ் எலிஸபெத் பகாயா என்பவளை விரும்பும் இடி அமீன், அவ்ளையே வெளிநாட்டமைச்சராக நியமிக்கிறான். முன்னாள் வெளிநாட்டமைச்சரான ஒண்டேகா அமீன் ஆட்களால் கொல்லப்படுகிறார்.** இனி....

# இடி அமீன்

வெளிநாட்டமைச்சராக இருந்த ஒண்டேகாவின் உடல் நைல் நதியில் மிதந்து கரையைத் தொட்டது. அதனையடுத்து உகண்டா வானொலியில் அறிவிப்பு ஒன்று வெளியானது:

"ஆத்திரம்கொண்ட கும்பல் ஒன்றால் கொல்லப்பட்ட வெளிநாட்டமைச்சர் ஒண்டேகாவின் உடலை எமது இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளனர்.

பிரேத பரிசோதனை முடிந்ததும்அரச மரியாதையுடன் அரச செலவில் உடல் அடக்கம் செய்யப்படும்!"

ஒண்டேகாவின் உடலைப் பார்வையிட அவர் மனைவிக்கும், மகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

ஒண்டேகாவின் மனைவி அமீனை சந்திக்க பல முயற்சி எடுத்தும், அமீன் சந்திக்க மறுத்துவிட்டான்.

எப்படி, எங்கே நடந்தது என்று கூறாமல், ஒண்டேகாவின் இறுதிச் சடங்குகள் நடந்து முடிந்ததாக வானொலி அறிவித்தது.

அமீனை அவனது அலுவலகத்தில் பகாயா சந்தித்தாள். **"வாருங்கள் புதிய வெளிநாட்டமைச்சரே! மறுநாள் காலையில் வருவதாகக் கூறிவிட்டு நான்கு நாள் தாமதித்து வந்திருக்கிறீர்கள். பதவி ஆசை இல்லாத உங்களைப் போன்றோரைத்தான் எனக்குப் பிடிக்கும்!"** என்று சிரித்தான்.

"மன்னிக்க வேண்டும், முன்னாள் வெளிநாட்டமைச்சரின் இறுதிச் சடங்குகள் முடிவதற்கு முன்பாக பதவி ஏற்பு முறையல்ல என்றுதான் வரவில்லை!" என்றாள்.

**"அதுதான் நான் பாராட்டிவிட்டேனே!"** என்று குழைந்தவன், சட்டென்று கேட்டான்: **"ஒண்டேகாவின் வீட்டுக்கு போய் ஆறுதல் எல்லாம் சொன்னீர்களாமே?"**

தன் கண்ணுக்கு தெரியாத சிறையில் தன்னை அமீன் வைத்திருக்கிறான், தன் ஒவ்வொரு நடமாட்டமும் கண்காணிக்கப் படுகிறது என்பதை பகாயா முன்கூட்டியே உணர்ந்திருந்தாள். அதனால் அமீனின் கேள்விக்கு ஆச்சரியப்படவில்லை.

"ஆம். ஒண்டேகாவின் குடும்பத்தினருக்கு அவரது உடலைக்கூட காண்பிக்கவில்லையாமே. மனிதத் தன்மையில்லாத செயல் இது!" என்று சற்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறிவிட்டாள் பகாயா. அவ்வாறு கூறிவிட்டுத்தான், 'ஏன் வார்த்தைகளைக் கொட்டினோம்' என்று நொந்து கொண்டாள்.

வேறு யாராக இருந்தாலும் அமீன் தன் கோபத்தைக் காட்டியிருப்பான். ஆனால் பகாயாவிடம் அவனுக்குக் கோபம் வரவில்லை. துணிச்சலான பெண்ணாக இருக்கிறாளே என்று நினைத்தான். உடனே நடித்தான்.

**"அப்படியா? இது எனக்குத் தெரியாதே! என்னைச் சுற்றி சில முட்டாள்கள் இருக்கிறார்கள். சில சமயம் எனது அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்!"**

அமீனின் விளக்கம் கலப்படம் இல்லாத பொய் என்பது பகாயாவுக்குத் தெரியும். அதனைக் காட்டிக் கொள்ளாமல், நம்புவது போல முகபாவனை செய்தாள்.

**"இன்னொன்று தெரியுமா பகாயா? மைக்கேல் ஒண்டேகா இந்த நாட்டுக்கு எதிரான சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டிருந்தார். என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அவர்தான் இறந்து போனாரே; இனி எதற்கு என்று அந்த ஆதாரங்களைத் தூக்கி நெருப்பில் போட்டுவிட்டேன். நான் அவரை மலையாக நம்பினேன். அவர் ஒரு எலி மாதிரி நடந்து கொண்டார்!"** என்று கூறினான் அமீன்.

தன்மீது அளவற்ற ஆசை வைத்திருக்கிறான் அமீன் என்பதை அவனது பேச்சில் தெரிந்த குழைவிலும், அடிக்கடி உதிர்த்த இளிப்பிலும் இருந்து பளிச்சென்று புரிந்து கொண்டாள் பகாயா.

வெளிநாட்டமைச்சராக தன் பெயரை அமீன் கூறிய பின்னர் நான்கு நாட்களாக தீவிரமாகச் சிந்தித்த பகாயாவின் மனதில், பல திட்டங்கள் தோன்றியிருந்தன.

அமைச்சர் பதவி என்னும் எலும்புத் துண்டைவீசி தன்னை வளைக்க அமீன் மேற்கொள்ளும் முயற்சியிலிருந்து மெல்ல மெல்லத்தான் தப்ப வேண்டும் என்று தீர்மானித்தாள்.

உடனடியாக நாட்டைவிட்டு தப்பியோடவும் முடியாது. ஒவ்வோர் அசைவையும் அமீனின் உளவாளிகள் கண்கொத்திப் பாம்பாக கவனிக்கிறார்கள். அதனால் அமீனுக்கு தன்மீது நம்பிக்கை ஏற்படுத்திவிட்டு சரியான தருணத்தில் தப்பிக்கொள்ள வேண்டும் என்று முடிவு பண்ணிக்கொண்டாள்.

அதனால் இப்போது தான் அவசரப்பட்டு கக்கிவிட்ட வார்த்தைகளுக்காக வருத்தப்பட்டாள்.

"தேசத்துரோகம் என்றால் மன்னிக்க முடியாதுதான். அப்படியானால் நீங்கள் செய்தது சரிதான்!" என்றாள்.

அமீனுக்கு அவள் அவ்வாறு கூறியது பிடித்திருந்தது. அதனைவிட அவளை அணு அணுவாகப் பிடித்திருந்தது.

அன்றே பதவி ஏற்பு வைபவம் நடந்தது. **"மிகப்பெரிய பொறுப்பை உங்களை நம்பி ஒப்படைத்திருக்கிறேன். எனக்கு என்ன பரிசு தரப்போகிறீர்கள்?"** என்று கேட்டான்.

"என் விசுவாசமான உழைப்பை பரிசாகத் தருகிறேன்!" என்று பகாயா சொன்னது, அமீனுக்கு அலுப்பாக இருந்தது.

ஆனாலும் பகாயா விடயத்தில்



கட்டாயப்படுத்தாமல், 'அவளாகவே கனிந்து மடியில் விழ வேண்டும்' என்று நினைத்தான் அமீன். அதனால் விட்டுப் பிடிக்கத் தீர்மானித்தான்.

**'இதுவரை பல பெண்களை என் அதிகாரத்தைக் காட்டித்தான் கட்டிலில் சாய்த்திருக்கிறேன். பகாயாவை அவளாகவே என்னை நாட வைக்கப்போகிறேன்'** என்று தனக்குள் பேசிக்கொண்டான்.

புகழ்ச்சிக்கு ஆண்களும் அடிமைகள்; பெண்களும் அடிமைகள். பகாயாவை புகழ்ச்சியால் வீழ்த்தினால் என்ன: நினைத்தான். புகழ்ந்தான்.

**"அமெரிக்க இராஜதந்திரியான ஹென்றி கிஸிங்கரைவிட புத்திசாலி ஒருவர் நம்மிடம் இருக்கிறார். அவர்தான் நமது வெளிநாட்டமைச்சர் எலிசபெத் பகாயா!"** என்று அமைச்சரவைக் கூட்டத்தில் பாராட்டினான் அமீன்.

சக அமைச்சர்கள் பகாயாவை பொறாமையோடு நோக்கினார்கள். சிலர் விஷமமாக கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டனர்.



அடுத்து இன்னொரு தகவலையும் அக் கூட்டத்தில் வைத்தே வெளியிட்டான் அமீன். அத் தகவலை பகாயாவும் அப்போதுதான் அறிந்தாள்.

**"ஐ.நா.சபையில் உகண்டாவின் பிரதிநிதியாக பகாயா போகப்போகிறார். எமது அரசுமீதான பொய்யான பிரசாரம் அனைத்தையும் பொடிப்பொடியாக்கிவிட்டு வீராங்கனையாக திரும்பிவருவார்!"** என்று கூறினான்.

பகாயாவுக்கு இடிபோல இருந்தது அத் தகவல். உகண்டாவில் நடைபெறும் படுகொலை ஆட்சிக்கு வக்காலத்து வாங்கும் ஒருத்தியாக தான் மாறுவதா? என்று எரிச்சலாக இருந்தது. அவள் மனதில் இன்னொரு திட்டம் விரிந்தது.

ஐ.நா.சபையில் சென்று உகண்டாவில் நடைபெறும் ஆட்சியைப் பற்றி அம்பலப்படுத்திவிட்டு அப்படியே வெளிநாட்டில் தங்கிவிட வேண்டும் என்பதுதான் அத் திட்டம்.

அமைச்சரவைக் கூட்டம் முடிந்து வீடு திரும்பியவளுக்கு தன் திட்டம் நிறைவேறப் போவதில்லை என்பது புரிந்துபோனது.

அவளது வீட்டைச் சுற்றிலும் காவல் பலப்படுத்தப்பட்டு இருந்தது.

அவளது வயதான தாயார் மற்றும் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு என்ற போர்வையில் 'சிறை' பலப்படுத்திருந்தது.

"ஏன் இந்தப் புதிய ஏற்பாடு? முன்னைய பாதுகாப்பே போதும்தானே!" என்று அங்கிருந்த பொறுப்பதிகாரியிடம் கேட்டாள்.

"நீங்கள் ஐ.நா.சபையில் உகண்டா அரசுக்காக வாதாடப்போறீர்கள். அதனால் உங்கள் குடும்பம் எதிரிகளால் பழிவாங்கப் படலாம் என்று முன்னெச்சரிக்கை நடிவடிக்கை இது!" என்று பதில் வந்தது.

'உகண்டா அரசுக்கு விரோதமாகப் பேசினால் உன் குடும்பம் இங்கு மிஞ்சாது!' என்பதை மறைமுகமாக உணர்த்துகிறார்கள் என்று தெரிந்தது.

பகாயா யோசித்தாள். நேராகச் சென்று தொலைபேசியை எடுத்து அமீனின் தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தை சுழற்றினாள்.

அமீன் "ஹலோ" என்றான். பகாயா "நன்றி, பெரிய நன்றி...." என்றாள்.

"எதற்காக?" என்றான் மறு முனையில் அமீன்.

"என் குடும்பத்திற்கு பாதுகாப்பு அளித்ததுக்காக!" என்று கூறிவிட்டு வைத்துவிட்டாள்.

**"பகாயா! முட்டாள் பெண், தன்னை நான் நம்பி விட்டதாக எண்ணிவிட்டாள்!"** என்றான் அமீன். அவன் கூறியது கேணல் மலையமுங்குவிடம்.

"பகாயாவைத்தான் அனுப்ப வேண்டுமா?" என்று கேட்டான் மலையமுங்கு.

இடி அமீன் மர்மமாகப் புன்னகைத்தான். **"பகாயா ஓர் பெண். அதுவும் அழகான பெண். ஐ.நா.சபைக்கு எல்லா நாடுகளும் ஆண்களைத்தான் பிரதிநிதிகளாக அனுப்பி வைக்கும். அத்தனை ஆண்கள் இடையே ஓர் அழகான பெண், தன் அழகான உதடுகளால் பொய் சொன்னால்கூட அழகாகத்தான் இருக்கும். கரகோஷம் செய்து வாயைப் பிளக்கப் போகிறார்கள் பலர்!"** கண்ணடித்தான் அமீன்.

கேணல் மலையமுங்கு தன் அதிபரின் புத்திசாலித்தனத்தைப் பார்த்து மலைத்தான்.

1974 நவம்பரில் ஐ.நா.சபைக் கூட்டத்தில் உகண்டா சார்பாக பகாயா உரையாற்றினாள்.

அவள் உரையாற்றவிருந்த தினத்தன்று காலையில், அவள் தங்கியிருந்த விடுதிக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

**"நான் உங்கள் வீட்டின் பாதுகாப்பு அதிகாரி பேசுகிறேன். உங்கள் உரையை பயப்படாமல் ஆற்றுங்கள். நாங்கள் உங்கள் குடும்பத்தைப் பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்கிறோம்!"** என்று கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்துவிட்டான்.

அதுவும் மறைமுக எச்சரிக்கைதான். பகாயா அன்று ஆற்றிய உரையில் பொய்யைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை.

அமீன் எதிர்பார்த்தது போலவே பலநாடுகளின் பிரதிநிதிகள் பகாயாவின் உரையைவிட அழகை இரசித்தனர்.

பகாயாவின் அழகு முன்பாக உகண்டாவின் மனித உரிமை மீறல்களும், அமீனின் கொடூரங்களும் அவர்களுக்கு பெரிதாகத் தோன்றவில்லை.

உகண்டா வானொலி, பத்திரிகைகள் முதலியவற்றில் பகாயாவின் உரை வெளியானது. கூடவே அமீனின் அறிவிப்பும் வெளியானது.

**"ஐ.நா.சபையில் எமது நாட்டின் கௌரவத்தைக் கண்போல காத்து நின்ற வெளிநாட்டமைச்சர் எலிஸபெத் பகாயாவுக்கு பெரும் பட்டம் சூட்டி கௌரவிக்க எண்ணியுள்ளேன். 'நைலின் பிறப்பிடம்' என்ற உயர் விருதை அவருக்கு வழங்கப்போகிறேன்!"** என்று அறிவித்தான்.

பகாயா நாடு திரும்பினாள். பகாயாவோடு சென்ற குழுவில் அமீனின் உளவாளிகள் ஒரிருவரும் சென்றிருந்தனர்.

அதில் ஒருத்தன் அமீன்மீது அதிருப்தி கொண்டவன்போல பகாயாவிடம் பேச்சுக் கொடுத்தான்.

தன்னிடம் பரிச்சயம் அதிகமில்லாத போது, துணிந்து அமீன் பற்றி அவன் குறை கூறியதும் பகாயா உஷாரானாள்.

"அதிபர் பற்றி என்னிடம் எதுவும் குறையாகப் பேசவேண்டாம். வேறு யாரிடமும் பேசவும் வேண்டாம்!" என்றாள் கண்டிப்பான குரலில். அத்துடன் இன்னொன்றையும் கூறினாள்.

"நாடு திரும்பியதும் உங்கள் பணியில் இருந்து என்னால் நீக்கப்படுவீர்கள்!"

நாடு திரும்பியதும் ஒருநாள் ஓய்வு எடுத்துவிட்டு, அமீனின் அலுவலகத்திற்குச் சென்றாள்.

அங்கு அதிர்ச்சியான சம்பவங்கள் காத்திருந்தன.

(இடி தொடரும்)

**தருவது ரசிகன்**

# மாதுரியோடு ஜடேஜா



'வரமாட்டேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தவர் கடைசியாக வந்தேவிட்டார். இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் அஜய் ஜடேஜா சினிமாவில் நடிக்கத் தொடங்கியிருப்பதைத்தான் கூறுகிறோம்.

உலகக் கிண்ணப் போட்டி நடக்கப் போகும் இந்த ஆண்டில், ஜடேஜா கிண்ணம் பற்றி யோசிக்காமல், மாதுரி டிக்ஷித்தின் கன்னத்தோடு கன்னம்வைத்துக் கொண்டிருக்கிறார்.

இந்தியில் ஜடேஜா நடிக்கும் முதல் பட ஜோடி மாதுரி டிக்ஷித். நடிகைகள் பலருடன் ஜாலியாகப் பேசப்பட்ட ஜடேஜாவின் சினிமா பிரவேசம் கிரிக்கெட்டை பாதிக்குமா?

"கிடையவே கிடையாது. கிரிக்கெட்தான் என் சுவாசம். அதுதான் என் உணவு, கிரிக்கெட்தான் என் வாழ்க்கை!' என்று அடித்துக் கூறுகிறார்.

மும்பாய் சஞ்சிகை ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் சர்ச்சைக்குரிய கேள்விகளுக்கும் சினக்காமல், சலிக்காமல் பதில் கூறியிருக்கிறார்.

"சென்னையில் நடிகை தபுவும் நானும் டிஸ்கோ நடனத்தில் கலந்துகொண்டோம். அதற்காக நான் தபுவை காதலிப்பதாக அர்த்தமா? தபு காதலிப்பது சாஜிக் நாடியாலாவைத்தான். எனவே என்னை தபுவுடன் இணைத்து எழுதியது நாடியாலாவை அவமானப்படுத்தியது போன்றதே.

நடிகை பாக்யஸ்ரீயின் தங்கையான நடிகை மதுவானியை நான் திருமணம் செய்யப்போவதாக கூறுவதும் மெய்யல்ல.

ஷில்பா ஷிரோத்கர், கஷ்மீராஷா, தபு என்று பல நடிகைகளுடன் எனக்கு நட்பு மட்டும் இருக்கிறது.

நான் முனிவனும் அல்ல. கண்களை அலையவிடும் ரோமியோவும் அல்ல. எனக்கு பலருடன் பழக்கம் உண்டு. ஒரு இரவு விடுதிக்குச் சென்றால், அங்கு எனக்கு பழக்கமானவர்களுடன் பேசத்தான் செய்வேன். அதற்காக அவர்களுடன் என்னை முடிச்சுப்போட்டு விடுவதா?" என்று பதில் கேள்வியை வீசியிருக்கிறார் ஜடேஜா.

சினிமா கதாநாயகர்களைவிட விளையாட்டு வீரர்கள்தான் உண்மையான கதாநாயகர்கள் என்று கூறவும் தவறவில்லை. சினிமாவில் 'டூப்' போட்டு நடிக்கலாம். விளையாட்டு வீரர்கள் 'டூப்' போடமுடியாது." என்று தன் கருத்துக்கு உதாரணம் கூறியிருக்கிறார்.

# விநோதமான கோரிக்கை

இங்கிலாந்தில் உள்ள பெரும் சூப்பர் மார்க்கெட் நிறுவனம் டெஸ்கோ. அந்த நிறுவனத்துக்கு உலகெங்கும் கிளைகள் உள்ளன.



இந்த நிறுவனத்திற்கு விசித்திரமான கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நிர்வாணப் பிரியர்கள் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். அந்த நிர்வாண சங்கத்திடம் இருந்துதான் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"எங்கள் சங்க உறுப்பினர்கள் உங்கள் கடைகளில் நிர்வாணமாக வந்து பொருட்கள் வாங்க அனுமதிக்க வேண்டும்." என்பதுதான் கோரிக்கை.

நிர்வாண ஆசாமிகளைக் காண கூட்டம் வரும். வியாபாரம் செழிக்கும் என்ற நம்பிக்கையில், அவர்களது கோரிக்கையை டெஸ்கோ நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதற்காக ஹாஸ்டிங்ஸ் பகுதியில் உள்ள நிர்வாணக் கடற்கரை அருகே புதிதாக கடையும் திறந்துள்ளது.

இரவிரவாக வியாபாரம் களை கட்டுகிறதாம்.

# கிளின்டன் மகள் மயக்கம்



அமெரிக்க அதிபர் கிளின்ரனின் மகள் செல்ஷியா கல்லூரியில் படித்து வருகிறார். கிளின்ரன் மோனிகா விவகாரம் அம்பலமான பின்னர் சக மாணவ மாணவிகள் கிண்டல் பண்ணுகிறார்களாம்.

செல்ஷியாவின் பாதுகாப்புக்கு செல்லும் பாதுகாவலர்கள் தலையிட்டு கிண்டல் செய்பவர்களை தாஜா பண்ணுகிறார்கள்.

இதனால் கடுப்பான செல்ஷியா தன் அப்பா கிளின்ரனுடன் பயங்கரமாக சண்டை போட்டாராம். திடீரென்று மயக்கம் போட்டும் விழுந்துவிட்டார் செல்ஷியா.

கிளின்ரன் தன்னுடன் எவ்வாறான முறையில் உறவு கொண்டார் என்பதையும் மோனிகா கூறித்தொலைத்தார், அதைக் கூறி படுபயங்கரமாக கிண்டல் அடிக்கிறார்களாம் மாணவிகள்.

ஹிலாரியும் தமது மகளது தர்மசங்கட நிலையை எண்ணி தலையைச் சொறிகிறார்.

# அழகி தயார்



அடுத்த உலக அழகுராணிப் போட்டிக்கு அனுப்பிவைக்க இந்தியா தனது அழகியை கண்டுபிடித்திருக்கிறது. இந்திய அழகியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அழகிக்கு மிகச் சுருக்கமான பெயர்: குல். வயது 19. புதுடெல்லியைச் சேர்ந்தவர்.

29 அழகிகள் மத்தியில் குல் தெரிவானார். இவரை தெரிவு செய்த நடுவர்களில் ஐஸ்வர்யாராயும் ஒருவர். அவர் தவிர நடிகைகள் கரிஷ்மாகபூர், ஊர்மிளா, மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ், தொழில் அதிபர் அம்பானி ஆகியோரும் இருந்தனர்.


படிப்பகம்

www.padippakam.com



## காதுக்கு இது அழகோ?

காதைவிடப் பெரிய காதணி. நமக்கு இது ஆச்சரியமாக இருக்கலாம். தெற்கு சீனக் கடலில் ஹெய்னன் தீவில் வசிக்கும் 'லி' இனப் பெண்களுக்கு இது சர்வசாதாரணம்.

ஆனால் தினமும் அணிய மாட்டார்கள். முக்கிய நிகழ்ச்சிகளின்போது எடுத்து மாட்டிக்கொள்வார்கள். தினமும் மாட்டினால் கனம் தாங்காது காது நீண்டுவிடும்.

பித்தளையால் செய்யப்பட்ட இந்த காதணிகள் ஒவ்வொன்றும் ஐந்து இறாத்தல் கனம் கொண்டவை. யப்பா! இது செவியா, சுமை தாங்கியா! இன்னொரு செய்தி 'லி' இன இளைஞர்களுக்கு காதணிகளைப் பார்த்துத்தான் காதலே பிறக்கிறதாம்.

## உடல் ஒன்று தலை இரண்டு

இந்திய தினமணிப் பத்திரிகையில் சில வாரங்களுக்கு முன்னர் பிரசுரமான படம் இது. மும்பாயைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு அதிசயக் குழந்தை பிறந்துள்ளது. தாயின் பெயர் கமல் குப்தா.

இரட்டைத் தலையுடன் பிறக்கும் குழந்தைகள் உயிர் தப்புவது அரிதிலும் அரிது. ஆனால் இக் குழந்தை இன்றுவரை நலமாக உள்ளது என்பது இன்னொரு ஆச்சரியம். 05.01.99 அன்று இக் குழந்தை பிறந்துள்ளது.



## மகா சேவல்

உங்கள் வீட்டுச் சேவல், எங்கள் வீட்டுச் சேவல் எல்லாம் இதனிடம் எடை கடன்வாங்கலாம். உலக மகா குண்டுச் சேவல் இது.

அவுஸ்திரேலியாவில் 'குளோ' செஸ்டர்ஷையர் என்னும் நகரில் ஹோரிமூர் என்பவர் இதனை பக்குவமாக வளர்க்கிறார்.

அங்கு சாதாரண சேவல்கள் சராசரியாக நான்கு கிலோதான் இருக்கும். இதன் எடை 10.55 கிலோ. 'போரிஸ்' என்று பெயர் வைத்துள்ளனர். உலக சாதனைப் புத்தகத்தில் மகா குண்டுச் சேவலாக பதியப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் உலக சாதனைச் சேவலாக இருந்ததும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்ததுதான். அதன் பெயர் 'பிக்ஸ்நோ'. 1992ல் அதன் எடை 9 கிலோ. அது இறந்துவிட்டது.

'போரிஸ்' சேவலுக்கு வயது ஆறுமாதம்தான். அதற்குள்ளேயே இந்த எடை. இதன் உயரம் 40 சென்றி மீட்டர். மார்பளவு 86 செ.மீ.

## தகவல் பெட்டி

மனிதர்களுக்குள் ஒற்றுமை காணாமல் போய்க்கொண்டிருக்கிறது. மிருகங்கள் போல சண்டை பிடிக்கிறான் மனிதன் என்பார்கள். மிருகங்களுக்குள் எப்போதும் சண்டைதான் என்று யார் சொன்னது?! புரிந்துணர்வுடன் பழகும் காட்சிகளும் உண்டு. பாருங்கள் காட்டுப் பன்றிக்கு 'பேன்' பார்க்கிறார் குரங்கார். கிடைத்தால் லபக் எடுத்து பிடித்து வாயில் போட்டு சாப்பிட்டுவிடும். உதவியுமாச்சு. பசியும் போச்சு. பணி ஒன்று, பயன் இரண்டு.



## மகா சேவல்

## கலைப்படா தேசகோதரா



## இயற்கை விநோதம்

'ஆலங்கட்டி மழை' பெய்ததாகக் கூறுவார்கள். இதனை நேரடியாகக் கண்டு அனுபவித்தவர் குறைவு. இதனால் இவ்வாறான மழை பெய்ததை பலர் நம்ப மறுப்பார்கள் இம்மழை எல்லா இடங்களிலும் எப்போதும் பெய்வதில்லை. எப்போதாவது எங்கோ ஓரிடத்தில் மட்டுமே இம்மழை பெய்யும்.


பெரும்பாலும் கோடைகாலத்தில் மிகக் கடுமையான வெப்பம் வாட்டும். அதேவேளையில் வானில் இருள் மேகம் திரண்டு வரும். சடசடவென்று பெரு மழை பொழியும். மழை நீராக மட்டுமில்லாமல், பனிக்கட்டிப் பாளங்களும் வானிலிருந்து கொட்டும். அப்போது வீட்டின் கூரை ஓடுகளும் உடைந்து நொருங்கும்: தெருக்களில் செல்லும் வாகனங்களின் கண்ணாடிகளும் உடைந்துபோகும்.

எப்போதாவது நடக்கும் இயற்கையின் இந்த விளையாட்டு, ஆரம்பத்தில் வேடிக்கையாகத் தோன்றினாலும், வானிலிருந்து வேகமாகத் தரையில் வந்து மோதும் பனிக்கட்டிகள் வெளியில் நின்று வேடிக்கை பார்ப்போரின் தலையையும் பதம் பார்த்துவிடும்.

'பனிக்கட்டி மழை' என்றும் இந்த இயற்கை விநோதத்தைக் கூறுவார்கள்.

வடஇந்தியாவில் உத்திரப் பிரதேசத்திலுள்ள மொரதாபாத் என்ற இடத்தில் 1888ம் ஆண்டு ஏப்ரம் மாதம் 20ம் திகதி பெய்த ஆலங்கட்டி மழைதான், இதுவரை இடம்பெற்ற இத்தகைய பனிக்கட்டி மழையில் மிகப் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தியாகக் கூறப்படுகிறது. இதில் 246 பேர் படுகாயமடைந்து உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் தெற்கு டகோட்டா மாநிலத்திலுள்ள ஹுரொன் என்ற இடத்தில் 1998 மே மாதம் ஆலங்கட்டிப் புயல் வீசியதாக அறிவிக்கப்பட்டது. இவ்வேளையில் வானிலிருந்து விழுந்த கல்லைத்தான் படத்தில் காண்கிறீர்கள்.



பனிக்கட்டி மழையின் போது வெறும் பனிக்கட்டிகளாகவே கொட்டும். இக்கட்டிகள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் 5 மில்லி மீட்டர் முதல் 10 மில்லி மீட்டர் விட்டம் கொண்டவையாக இருக்கும்.

சில நிமிடங்களில் அவை உருகிவிடும். ஆனால் படத்தில் காணப்படும் கட்டி உருகக்கூடிய நிலையிலில்லாத கல்போன்று தோற்றமளிக்கிறது.

அதனால் இக் கல்லை பத்திரமாக படம்பிடித்து உலக சாதனையாக பதிவு செய்து வைத்துள்ளனர். இயற்கையின் விநோதங்கள்தான் எத்தனை! O

## கண்ணுக்கு ருசி?

இந்தியாவில் உள்ள உணவு தயாரிப்பு நிறுவனமான நீல்கிரீஸ் பெங்களூர் சென்ட் ஜோசப் கல்லூரியில் 'கேக்' கண்காட்சி ஒன்றை நடத்தியது. அங்கு பிரமாண்டமான கேக் வகைகள் கண்களுக்கு ருசி கொடுத்தன. வாயைப் பிளந்தவர்களுக்கு கேக் ஊட்டமுடியவில்லை. கண்காட்சி முடியும்வரை தொடக்கூடாது.

'டைட்டானிக் கேக்' என்ற பெயரில் கப்பல் வடிவத்தில் கச்சிதமாக செய்யப்பட்ட கேக் தான் இங்குள்ளது. இதன் நீளம் 18அடி. உயரம் 6 1/2 அடி. 850 கிலோ சீனியை விழுங்கியது இந்தக் கேக்.

ஆனால் இதனை தூக்கிச் சாப்பிட்டுவிட்டது இன்னொரு பிரமாண்ட கேக். ஐக்கிய நாடுகள் சபை கட்டட வடிவத்தில் தயாரான அந்த கேக்கின் உயரம் 22 அடி. 700 மணி நேரத்தை செலவிட்டு அதனை கட்டி முடித்தனராம். அதற்கு பயன்பட்ட சீனியின் எடை எவ்வளவு தெரியுமா? 45 தொன். இதனையும் நீல்கிரீஸ் நிறுவனமே தயாரித்துள்ளது.

கண்காட்சி முடிந்ததும் தர்ம நிறுவனங்களுக்கு கேக்குகள் அனுப்பி வைக்கப்படுமாம்.






படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் **87** தமிழ்நாட்டிலிருந்து மயன்

நட்சத்திரத் தம்பதியின் மறுபக்கத்தை அந்த ஐந்தெழுத்து நடிகை அறிந்திருக்கவில்லை. ஐந்தெழுத்து நடிகையின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவதுபோல, தாமாக வலியச் சென்று நட்புக் கொண்டார் நட்சத்திரத்தம்பதி நடிகை.

ஐந்தெழுத்து நடிகையும் அந்த மஞ்சளான நடிகை மூத்த நடிகையாச்சே என்று மதிப்பு வைத்து பழகினார்.

தான் கதாநாயகியாக இருந்தபோது பிரபலமான இரு நடிகர்களும் தன்னை குறிவைத்து வேட்டையாடியதையும், அவர்கள் இருவரையும் தான் சரிக்கட்டிய விதத்தையும் பேச்சோடு பேச்சாக கூறுவார் மஞ்சளான நடிகை.

ஐந்தெழுத்து நடிகையும் தன்னை பிரபல நடிகர் ஒருவர் விருந்து தருவதாக அழைத்து, வேறு விதமாக நடந்து கொண்ட கதையைக் கூறியிருக்கிறார்.

திரையுலகில் இதுபோன்ற தொல்லைகளை தவிர்க்க வேண்டுமானால் பிரபல நடிகர்களுக்கு இசைந்து போக வேண்டும். அவர்களை நாம் ஆட்டுவிக்க வேண்டும். பிரபலமான அரசியல் பிரமுகர்கள் சிலரையாவது கைக்குள் வைத்திருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார் மஞ்சளான நடிகை.

தனது வீட்டில் விருந்துபசாரம் ஒன்று நடக்கிறது என்றும், அதில் கலந்துகொள்ளுமாறும் ஐந்தெழுத்து நடிகைக்கு அழைப்பும் விடுத்தார்.


நடிகையும் அழைப்பை ஏற்று நட்சத்திர தம்பதியின் வீட்டுக்கு சென்றார். அவர் செல்லும்போதே விருந்து களைகட்டியிருந்தது. கண்ணியமான பாத்திரங்களில் நடித்து பெயர் வாங்கிய அழகுக்கு அரசியான நடிகையும் கையில் கிளாசுடன் அங்கு நின்றார். கிளாசுக்குள் மஞ்சள் திரவம் தழும்பிக் கொண்டிருந்தது.

தங்கையாக பல படங்களில் நடித்த நித்தியமான நடிகையை, நட்சத்திர தம்பதியின் வாரிசு நடிகர் தொட்டுத் தொட்டு பேசிக்கொண்டிருந்ததையும் நடிகை கண்டார்.

மஞ்சளான நடிகை இவரைக் கண்டதும் ஓடிவந்து உபசரித்தார். பல கண்கள் தன்னைக் குத்துவதை உணர்ந்த நடிகைக்கு உடம்பெல்லாம் கம்பளிப் பூச்சிகள் ஊர்வது போன்ற பிரமை.

அறிமுகமான பட இயக்குநர் முதல், பிரபலமான நடிகர் வரை பலருடன் அனுசரித்துப் போனதால்தான் வாய்ப்புக்களே கிடைத்தன. ஆனாலும் இப்படி கூட்டத்தின் முன்னால் வேடிக்கை பொருளாக நிற்பது புதிய அனுபவமாகவும், அத்தனைபேர் பார்வையும் சகிக்க முடியாததாகவும் இருந்தது.

நடிகையின் தர்மசங்கடத்தை குறிப்பால் உணர்ந்த மஞ்சளான நடிகை உடனடியாக அவரை தனியறை ஒன்றுக்கு அழைத்துப்போனார்.




நெப்போலியன்-நக்மா
படம்: மாயா

## 'தலைவர் அறிமுகம்'

ஒரு அரசியல் தலைவரின் பெயரைக் கூறி, "அவர் இப்போது வருவார். சந்தோசமாக நடந்துக்க. அவர் மட்டும் உன் பிடியில் இருந்தால் திரையுலகில் யாரும் வாலாட்டமாட்டார்கள். நள்ளிரவில் வந்து யாரும் கதவு தட்டமாட்டார்கள்" என்று கூறிவிட்டு போனார்.

மஞ்சளான நடிகை அரசியல் தலைவர் என்று அந்தப் பெயரைக் குறிப்பிட்ட போது, நடிகைக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. நாணயமானவர் என்றும், குடும்பஸ்தர் என்றும் பேசப்படும் அவருக்கா இப்படி ஒரு சபலம்? நம்பமுடியவில்லை.

சில நிமிஷங்கள் கரைந்ததும் அந்த 'தலைவர்' மஞ்சளான நடிகையின் தோளில் கைபோட்டபடி அறைக்குள் வந்தார். அறைக்குள் வந்ததும் தோளில் போட்டிருந்த கை மேலும் இறங்க, மஞ்சளான நடிகை புது மணப்பெண்போல சிணுங்கிக்கொண்டிருந்தார்.

தான் ஒருத்தி அங்கிருப்பதையே மறந்து அவர்கள் நடந்துகொண்ட முறையைப் பார்க்க ஐந்தெழுத்து நடிகைக்கு சகிக்கவில்லை. தொண்டையைச் செருமினார்.

தன் கணவரும், பெரிய பிள்ளைகளும் வெளியே இருக்கக் கூடியதாக மஞ்சளான நடிகை அந்த தலைவருடன் கொஞ்சிக் குலவுவது ஒருபுறம் ஆச்சரியமாக இருந்தது.

அந்தத் தலைவருக்கு ஐந்தெழுத்து நடிகையை அறிமுகம் செய்து வைத்தார் நடிகை. "தெரியுமே, எந்த நடிகை புதுசா வந்தாலும் நடிச்ச படத்தை பார்த்து கணக்குப் பண்ணிடுவேனே" என்றபடி பகபகவென்று சிரித்தார்.

பின்னர் மஞ்சளான நடிகை முன்னாலேயே அந்த வயோதிபத் தலைவர் தனது மடியில் வந்து அமருமாறு ஐந்தெழுத்து நடிகையை அழைத்தார். மஞ்சளான நடிகை நைசாக வெளியே போய்விட்டார்.

அதன்பின்னர் நடந்தது ஒவ்வொன்றும் ஐந்தெழுத்து நடிகை நினைத்தே பார்த்திராத வக்கிரங்கள். தன் வயோதிப இயலாமையை மறைக்க அந்த 'பெரிய மனிதர்' வக்கிரமாக நடந்து வடிகால் தேடினார்.

## நாயகியானார்

அன்று இரவு முழுக்க நரகத்தில் உழன்ற நடிகை, மறுநாள் தன் வேதனையை மஞ்சளான நடிகையிடம் கூறினார். "இதெல்லாம் சகஜம்" என்று கூறிய நடிகை, தன்னுடன் நாயகர்களாக நடித்த சில நடிகர்களை குறிப்பிட்டு, அவர்கள் எப்படியெல்லாம் நடந்து கொள்வார்கள், 'தான் எப்படி சமாளித்தேன்' என்று பிரசங்கமே நிகழ்த்தினாராம்.

ஆனாலும், அந்த 'பெரிய மனிதர்' சிபாரிசில் நடிகைக்கு நாயகியாக படம் ஒன்று கிடைத்தது. அதுவரை கவர்ச்சி பாத்திரங்களில் தோன்றிய நடிகைக்கு, முதன் முதலில் சேலை கட்டி நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.. அது காதலர்களைக் கவரும் கதையுள்ள படம். படம் பெருவெற்றி பெற நடிகை வெற்றிப் படிகளில் ஏறினார். வக்கிரமாக நடந்தாலும் வாக்குறுதியை மறவாது உதவிய அந்த பெரிய மனிதரை மனதார பாராட்டினார்.

ஆனால் மஞ்சளான நடிகையுடனான உறவை கத்தரித்துக் கொண்டார். அதனால் அந்த நடிகையின் முன்னாள் கதையை தனக்கு தெரிந்த சில நிருபர்களுக்கு மஞ்சளான நடிகை கூறிவருகிறார்.



ஊர்மிளா

## 'எனக்கு பொறாமை இல்லை'

இளைய தளபதி விஜய்க்கு போட்டியார்? என்ற கேள்வியை விஜய்யிடமே கேட்டால் சிரிக்கிறார்.

புதிதாக வருபவர்கள் எல்லோருமே போட்டிதான். ஆனால் சந்தோசமான போட்டி. எப்பவுமே போட்டி இருந்தால் தான் திரிலிங்காக இருக்கும்.

சூர்யா, அஜித்குமார் எல்லாம் என் நண்பர்கள்தான். அதுமாதிரி புதிதாக வருபவர்களும் என் நண்பர்கள்தான்.

யாரு நல்ல பண்ணினாலும் நான் பாராட்டுவேன். பொறாமை இருந்தால் காணாமல் போயிடுவோம். சின்ன வயதில் இருந்தே எனக்கு பொறாமை என்றால் என்னென்று தெரியாது!" என்று கூறுகிறார் விஜய்.

விஜய்யின் சமகால நடிகர்கள் எவரும் அவருக்கு தற்போது போட்டியாக இல்லை என்பதுதான் உண்மை. அப்பாஸ், அஜித் குமார் ஆகியோர் சறுக்கியதால், விஜய்க்கு போட்டி இல்லாமல் போய்விட்டது.

சிவாஜி, எம்.ஜி.ஆர்., கமல், ரஜினி போன்று விஜய்க்கு போட்டியாக கூறுவதற்கு இதுவரை யாரும் வரவில்லை. இனிமேல் வரலாம்.

## இன்னொரு இயக்குநர்

'தலைமுறை' படத்தில் அதியமான், ராஜ் கபூர் ஆகிய இரண்டு இயக்குனர்களது நடிப்பையும் படம் பார்த்தவர்கள் பாராட்டுகின்றனர்.

அந்த பாராட்டுச் சத்தம் காதில் கேட்டதால், இன்னொரு இயக்குநரும் வரிந்துகட்டி தயாராகிறார். அவர் சேரன்.

'என் இனிய காதலர்களே' படத்தை இயக்கி, இரண்டாவது கதாநாயகனாகவும் நடிக்கபோகிறார்.

## அழைத்தார் சங்கர் மறுத்தார் ஊர்மிளா

'முதல்வன்' படத்தில் மனிஷாவுடன் ஊர்மிளாவையும் நடிக்க வைத்த நினைத்தாராம் ஷங்கர்.

ஒரே ஒரு பாடல்காட்சியில் கவர்ச்சி நடனம் ஒன்றுக்கு ஊறுகாய்போல பயன்படுத்த நினைத்திருக்கிறார்.

எப்படி வேண்டுமானாலும் கவர்ச்சி காட்ட நான் தயார். ஆனால் படத்தில் முக்கிய பாத்திரமும் எனக்கு இருக்க வேண்டும். ஒரே ஒரு பாடலுக்கு வந்து கவர்ச்சி காட்டுமளவுக்கு என் மவுசு குறைந்தா போய்விட்டது? என்று கடச்சட கேட்டாராம் ஊர்மிளா. வாபஸாகிவிட்டார் ஷங்கர்.

இந்திப் படவுலகில் இளம் நடிகர்கள் முதல் நடுத்தர வயது ஜாக்கிஷெராப் வரை ஊர்மிளாவை மொய்த்துக் கொண்டிருக்க, ஒரு பாடலுக்கு ஆடிச் சம்பாதிக்கும் அவசியம் அவருக்கு ஏன் வருகிறது?!

## கமலை சந்தித்தது ஏன்? மீனா கூறும் விளக்கம்

"நானும் கமலும் இலண்டனில் சந்தித்துக் கொண்டது உண்மைதான். அது தற்செயலான சந்திப்பு. வேறு எந்த நோக்கமும் இல்லை" என்று கூறுகிறார் மீனா.

"கமல் குடும்பஸ்தர். தேவையற்ற கதைகளை எழுதி அவர் குடும்பத்தில் ஏன் குழப்பம் விளைவிக்கிறீர்கள்?" என்றும் பத்திரிகையாளர்கள்மீது சீறியிருக்கிறார் மீனா.

மீனா அடுத்து கதாநாயகியாக நடிப்பது 'பெரியண்ணா' படத்தில். இப்படத்தில் விஜயகாந்த் நாயகன் என்பது முன்பே தெரிந்த செய்தி மீனாவை சிபாரிசு செய்தவரும் விஜயகாந்த்தான் என்பது புதிய செய்தி.

'உளவுத்துறை' படத்தில் விஜயகாந்த் ஜோடியாக நடித்தவர் மீனா. மீனாவுடன் ஒரு முறை ஜோடி சேரும் நடிகர்கள் அவரை இலேசில் மறந்து விடுவதில்லை.


படிப்பகம்

# மினி சினி

* தமிழில் வெளியான 'தலைமுறை' தெலுங்கில் தயாராகவுள்ளது. தமிழில் ராஜ்கிரண்-ரேவதி-பானுப்பிரியா நடித்த வேடங்களில் தெலுங்கில் டாக்டர் ராஜசேகர்-மீனா-ரோஜா ஆகியோர் நடிக்கின்றனர்.
* நெப்போலியன்-சங்கீதா ஜோடியாக நடிக்கும் 'பரணி' என்ற படத்தை இயக்கும் கணேசராஜ், 'சின்னத்தாயி', 'மாமியார்வீடு' போன்ற படங்களை இயக்கியவர்.
* 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தின் மூலம் தமிழில் நாயகியாக அறிமுகமாகும் நக்மாவின் தங்கை ஜோதிகா, அர்ஜுனுக்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.
* அஜித்குமார்-ரிச்சா நடித்த 'உயிரோடு உயிராக' படத்தை இயக்கிய சுஷ்மா, தற்போது மலையாளப்படமொன்றில் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார்.
* எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கத்தில் விஜயகாந்த்-சூர்யா இணைந்து நடிக்கும் 'பெரியண்ணா' படத்திற்கு பரணி என்னும் புதிய இசையமைப்பாளர் இசையமைக்கிறார்.
* 'வெள்ளி நிலவே' படத்தை இயக்கி வெளியிட்டிருக்கும் ஆர்.வி.உதயகுமார், விரைவில் கார்த்திக் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
* மம்முட்டி நடித்த 'த ட்ருத்' என்ற மலையாளப்படம், தமிழில் 'உண்மை' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, 'த ட்ருத்' தற்போது தெலுங்கில் மொழிமாற்றப்படுகிறது.
* 'தர்மச்சக்கரம்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடித்த இந்தி நடிகை தீப்தி பட்நாகர், 'காமா' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.
* 'தினந்தோறும்' பட இயக்குநர் நாகராஜன் இயக்கத்தில் முரளி நடிக்கும் 'ஆகாயம்' படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் நிறுத்தப்பட்டு விட்டதாம்.
* பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் 'டைம்' படத்தில் வில்லனாக நடிக்க பாபி புனைய் என்ற மும்பை புதுமுகம் தமிழுக்கு இறக்குமதியாகிறார்.

## பிரபுதேவா–சிம்ரான்

'டைம்' படத்தில் பிரபுதேவாவுக்கு மும்பாயில் இருந்து ஜோடி ஒன்றை இறக்குமதி செய்தனர். மேனா செனாயில் என்னும் அந்த மும்பை அழகியை பிரபுதேவாவுக்கு பிடிக்கவில்லை. அதனால் அவரை ஏற்றுமதி செய்து விட்டு, சிம்ரானை போட்டுள்ளனர்.

வி.ஐ.பி. படத்தின் பின்னர் பிரபுதேவாவும் சிம்ரானும் ஜோடி சேருகிறார்கள்.

பிரபுதேவாவின் சகோதரர் ராஜுசுந்தரத்துடன் நகமும் சதையுமாக இருப்பவர் சிம்ரான்.

பிரபுதேவாவை எப்படிச் சமாளிக்கப் போகிறார்? என்று கோடம்பாக்கம் வட்டாரத்தில் குசப்புகிறார்கள்.



மனிஷா கொய்ராலா
படம்: முதல்வன்

## குளிரக் குளிர தாஜ்மஹால்

'தாஜ்மஹால்' படத்தை படு சிரத்தையோடு இயக்கிவருகிறார் பாரதிராஜா. படத்தில் நாயகிக்கு பாத்திரப் பெயர் மச்சக்கன்னி. நாயகன் பெயர் மாயன்.

மாயனாக பாரதிராஜாவின் மகன் மனோஜ். மச்சக்கன்னியாக ரியாசென் நடிக்கும் தாஜ்மஹால் வித்தியாசமான கிராமக் காதல் கதை.

படத்தில் சண்டைக் காட்சிகளும் தூக்கலாக இருக்கிறதாம். தன் மகனை ஆக்ஷன் ஹீரோவாக காட்டுகிறார் பாரதிராஜா.

ரேவதி, ரஞ்சிதா, மணிவண்ணன் ஆகியோர் அடங்கிய பாரதிராஜாவின் பட்டாளம் இதில் உண்டு. பாரதிராஜாவும் நடிக்கக் கூடுமாம். இசை: ஏ.ஆர்.ரகுமான். வசனம்: மணிரத்னம். படப்பிடிப்பு குளிரக் குளிர நடக்கிறது. அதாவது குளிரான பகுதியிலும் படப்பிடிப்பு நடந்திருக்கிறது.

## டபுள்ஸ்

'கும்பகோணம் கோபாலு' வெற்றியை கொட்டியிருப்பதால், பாண்டியராஜன் உற்சாக ராஜனாகி விட்டார்.

'கபடி கபடியை' வெளியிட்டுவிட்டு, 'டபுள்ஸ்' படத்தை இயக்கி நடிக்கவுள்ளாராம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் அவசரம்.

முகப்பில் விஜய் க ஜோல்



நாகர்ஜுன்-ஹீரா
படம்: பொலிஸ் கில்லாடி



அம்மாடி!
பொண்ணுக்கு
தங்கமனசு!
கண்ணுக்கு
நூறு வயசு!—அவ
சொல்லுக்கு
நாலு வயசு!

ரகுராம்-பூனம்
படம்: சொல்லிவிடு

## எம்.ஜி.ஆர் ரசிகர்

கடந்த வருடம் அறிவிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். விருதை சமீபத்தில்தான் தமிழக முதல்வரிடம் இருந்து பெற்றிருக்கிறார் சரத்குமார்.

"எம்.ஜி.ஆர். பாணியிலேயே என் படங்களிலும் பாடல்கள் வரவேண்டும் என்று நினைக்கிறேன்.

இப்போது மேடை ஏறும் போதெல்லாம், 'உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம்' என்னும் பாடலை சில வரிகளாவது பாடுவேன்.

'சிம்மராசி' படத்தில் 'பாரு தம்பி பாரு' பாடலும் நான் விரும்பி வைக்கச் சொன்ன பாடல்தான்" என்று கூறியுள்ளார் சரத்குமார்.

## பிரசாந்த்-அப்பாஸ்

'மன்னவரு சின்னவரு' படத்தை அடுத்து கலைப்புலி தாணு பிரமாண்டமான படம் ஒன்றை தயாரிக்கப்போகிறார்.

இப்படத்தில் இரண்டு நாயகர்கள். பிரசாந்த், அப்பாஸ். இருவரும் இணையும் முதல் படம் இது.

சம வயது இளம் கதாநாயகர்களுடன் இணைந்து நடிக்கமாட்டேன். வி.ஐ.பி.பட அனுபவம் போதும் என்றவர் அப்பாஸ். இப்போது முடிவை மாற்றி விட்டாரா?

## செந்தில் உதவி

சினிமா ஆசையில் சென்னைக்கு போகும் இளைஞர்கள் வாய்ப்புக் கிடைக்காமல் பிச்சை எடுக்கும் நிலையில் இருக்கின்றனர். ஊருக்கு திரும்பிச் செல்லவும் வெட்கம்.

இவர்களது பரிதாப நிலையைப் பார்த்த செந்தில், பவுடர், பற்பசை, பிரஷ் போன்றவற்றுக்கு விநியோக உரிமை வாங்கி, இந்த இளைஞர்கள் மூலம் வீடுவீடாக விற்பனை செய்கிறார். சம்பளமும் கொடுக்கிறார்.

## நடிக்க ஆசை

இராணுவ அதிகாரி ஒருவரை திருமணம் செய்து கொண்டு சென்றார் ரஞ்சிதா. 'சாசனம்' படத்தை முன்பே ஒப்புக்கொண்டதால் நடித்துக் கொடுப்பேன். தொடர்ந்து நடிக்க மாட்டேன் என்றார்.

அதன்படி 'சாசனம்' படத்தில் நடித்துக் கொடுத்தார். மறுபடி நடிக்கும் ஆசை தொற்றிக் கொண்டது. தொலைக்காட்சி தொடர்களிலும் நடிக்கிறார்.

கணவர் புதுடில்லி குளிரில். மனைவி சென்னையில். இப்படியே போனால் சிக்கலாகிவிடும்.

www.padippakam.com

# அந்தநாள் ஞாபகம்



நடிகை அர்ச்சனாவின் அந்த நாள் தோற்றங்கள். தேசிய விருதுகளை அடிக்கடி பெற்று 'விருது நடிகை' என்றே பெயர் வாங்கியவர்.

ஒளிப்பதிவாளர் பாலுமகேந்திராவுடன் நெருக்கமாக இருந்தவர். பாலு மகேந்திராவின் மனைவியாக இருந்தவர் ஷோபா. அவரும் விருது பெற்ற நடிகைதான். திடீரென்று ஒருநாள் ஷோபா 'தற்கொலை' செய்து கொண்டார். அதன் பின்னர் பாலுமகேந்திராவுடன் அதிக ஒட்டுதலாக இருந்தவர் அர்ச்சனா. அப்போது அதனை மறுத்தாலும் தற்போது மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார்.

# ஒரு நடிகையின் வாக்குமூலம்




என் அப்பாவை இதுவரை நான் நேரில் பார்த்ததில்லை... அவர் எப்படி இருப்பார் என்று மன கம்ப்யூட்டரில் வரைந்து பார்க்க முயன்றிருக்கிறேன். கற்பனை கலந்த அந்த உருவங்கள் துல்லியமாக வராமல் அவுட் ஆ ஃப் ஃபோகஸில் தடுமாறும். இப்போது அதுபோல கற்பனைகள் செய்வதில்லை என்றாலும், அப்பா என்ற உணர்வு தந்த ஏக்கம் இன்னும் மனதில் அலைமோதிக் கொண்டுதான் இருக்கிறது!

கைக்குழந்தையான நான்- அம்மா என்ற இருவர் கொண்ட சிறு குடும்பத்துக்கு அம்மாவின் சம்பாத்தியம்தான் அன்று கைகொடுத்தது... அம்மா நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். ஒரு கட்டத்தில் அம்மா ஆந்திராவின் நாடக மேடைகளில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார். எல்லாமே மெயின் ரோல்கள்தான்! சொந்தமாகவே நிறைய நாடகங்கள் தயாரித்தும் இருக்கிறார்.

வாழ்க்கையில் வசதியாக வாழ வேண்டும் என் பதுபோன்ற கனவுகள் இல்லை என்றாலும், பத்மா சுப்ரமணியம், கமலா மாதிரி நாட்டியத்தில் பெரிய ஆளாக வரவேண்டுமென்று என் பிஞ்சு மனதில் ஆசை இருந்தது.

அதனால் பரதநாட்டியத்தோடு நின்றுவிடாமல், கதக், குச்சுப்புடி என்று விதவிதமான கிளாஸிக்கல் நடனங்களையும் கற்றுக்கொண்டேன்.

ஆனால் வாழ்க்கைச் சக்கரம் எப்போதும் ஒரே மாதிரி சுழல்வதில்லையே! எங்கள் வீட்டிலும் வறுமை எட்டிப் பார்த்தது. பரத நாட்டியம் கற்றுக்கொள்ள முடிந்த என்னால் செலவுசெய்து அரங் கேற்றம்கூட நடத்த முடியாமல் போனது!

"இந்தப் பொண்ணு நல்லா இருக்கா.. நல்லா டான்ஸும் ஆடறா... ஏன் சினிமாவில் நடிக்கக்கூடாது...?" என்னைப் பார்க்கும் சிலர் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருந்தார்கள்.

எங்கே என் நாட்டியக் கனவுகள் தொலைந்து போய்விடுமோ என்ற பதற்றத்தில், சினிமாவில் நடிப்பது என்றாலே "ஐயோ" என்று பயந்து ஒடிய நான், ஒரு கட்டத்தில் யோசிக்க ஆரம்பித்தேன். என் வீட்டின் வறுமை ஒழியவேண்டும்.. என் அம்மா என்னைக் கவலையின்றி பாதுகாத்து... வளர்த்தது போல என் அம்மாவையும் நான் கவலையின்றி பாதுகாக்க வேண்டும்..! நடிப்புத்தான் அதற்கு வழிவகுத்து கொடுக்குமென்றால் நான் நடிக்கத் தயார் என்ற முடிவுக்கு வந்தேன்! அப்போதெல்லாம் ஞாயிற்றுக்கிழமை மதிய நேரங்களில் தொலைக்காட்சியில் பார்க்க நேரிட்ட அவார்டு படங்கள் வேறு, சினிமாமேல் எனக்கு கொஞ்சம் கொஞ்சமாக ஈர்ப்பை ஏற்படுத்த ஆரம்பித்தன.. சினிமாவை நான் காதலிக்க ஆரம்பித்தேன்!

திரைப்பட இன்ஸ்டியூட்டில் சேர்ந்து படிக்க ஆரம்பித்ததும் அதற்கு அப்புறம்தான்.

திரைப்படக் கல்லூரி மாணவர்கள் எல்லாம், படிக்கும் காலத்தில் ஒரு குறும்படம் இயக்க வேண்டும். சக மாணவி என்ற முறையில் அதுபோல் புராஜெக்ட்களில் நடிக்க மாணவர்கள் என்னைக் கூப்பிட ஆரம்பித்தார்கள். அப்போது என் பேர் சுதா!

"சுதாவுக்குச் சொல்லிட்டியாப்பா!" என்று புரொ ஜெக்ட் ஆரம்பிக்கும்போதே என்னை புக் செய்யும் அளவுக்கு அநேகமாக ஒவ்வொரு மாணவரின் புரொ ஜெக்டிலும் நான் நடித்தேன்.

எனக்கு உடல் ரீதியாகவே சில மைனஸ் பாயிண்ட்டுகள் உண்டு. ஒரு நடிகைக்குரிய பளபளப்போ, கவர்ச்சியோ இல்லாத சாதாரண பர்சனாலிட்டி. கலர் வேறு கறுப்பு! நிற்கும்போது சற்று கூன் வேறு போடுவேன். என் நடைகூட நளினமாக இல்லாமல் கொஞ்சம் ஆண்மைத்தனமாக இருக்கும்.

ஆனாலும் இதையெல்லாம் மீறி நடிப்பில் நான் எதையோ சாதிக்கப் போவதுபோல் என் மனசுக்குள் ஒரு நம்பிக்கை மட்டும் மாறாமல் இருந்தது! என் தன்னம்பிக்கை சில நேரங்களில் எனக்கே ஆச்சரியம் ஏற்படுத்தும்!

தமிழ்த் திரையுலகில் பரபரப்பாக பேசப்பட்ட ஒரு பிரபல டைரக்டர் தன் படத்துக்கு என்னை புக் செய்தார்.

மூன்றுநாள் ஷூட்டிங் கூட நடந்தது. அப்புறம் என்ன ஆனதோ... அவருக்கு என் முகத்தை அதற்குமேல் ஹாண்டில் செய்ய முடியாமல் போய்விட்டது.. "ஸாரி உன் முகத்தை எப்படிக் காட்டினாலும் சரியாக வரவில்லை" என்று என்னை அந்தப் படத்திலிருந்தே அத்தோடு நீக்கிவிட்டார். அந்த டைரக்டர் டி. ராஜேந்தர். எனக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் வரவில்லை!

சினிமா ஸ்டில்கள் எடுக்கும் போட்டோ கிரா ஃபர் 'சிவம்' எங்கள் குடும்ப நண்பர். அவர் பல முன்னணி டைரக்டர்களிடம் என்னை அறிமுகப்படுத்தினார்.

"என்ன சிவம்... நீங்களே இப்படி செலக்ட் பண்ணா எப்படி? இந்த மூஞ்சியெல்லாம் ஹீரோயினா வர சான்ஸே இல்லே!" என்று என்னை வெளியே நிற்கச் சொல்லிவிட்டு சத்தமாகச் சலித்துக்கொண்டு திருப்பியனுப்பினார்கள்...

"சார்... பார்க்கத்தான் சுமாரா இருக்கும். ஆனா, நடிப்பிலே இந்த பொண்ணு பின்னி எடுக்கும். ஒருநாள் இல்லேன்னா ஒருநாள் இந்திய லெவலில் இந்தப் பொண்ணு நடிப்பில் பெரிய உயரத்தைத் தொடப் போகுது!" என்று ஒவ்வொரு இடத்திலும் அவர் ஆதங்கத்தோடு எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருப்பார்.

உள்ளுணர்வில் அவர் அன்று சொன்ன அந்த விஷயம் பிற்காலத்தில் ஒரு முறை அல்ல... இரண்டு முறை பலித்தது... 'வீடு' படத்துக்காகவும் 'தாசி' படத்துக்காகவும் இந்தியாவின் சிறந்த நடிகையாக நான் ஜனாதிபதி அவார்டு வாங்கியபோது கண்கொள்ளாத கண்ணீரும் 'சிவம்' அவர்களின் ஞாபகமும்தான் வந்தன!

எங்கள் ஃபிலிம் இன்ஸ்டியூட்டுக்கு வந்த பிரபல அமெரிக்க டைரக்டர் வில்லியம் கிரிவ்ஸ், நான் நடித்த சில குறும்படங்களைப் பார்த்து பாராட்டிய கையோடு ஒரு மிக முக்கியமான மனிதரிடமும் என்னை அறிமுகப்படுத்தினார்.

என் வாழ்க்கையில் ஒருபெரிய மாற்றத்தை உருவாக்கிய, என்னால் மறக்கமுடியாத ஒரு மனிதர் அவர். என் முகத்தையும் இந்த உலகத்துக்கு அழகாகக் காட்ட முடியுமென்று நிரூபித்தவர் அவர். அவருடன் இணைந்து நான் பணி புரிய ஆரம்பித்தபோது இன்னொரு திரைப் படக் கல்லூரியில் சேர்ந்த ஃபீலிங் கிடைத்தது..!

**இந்திய தேசிய விருதுகளை பலமுறை வென்றவர்;**



**இயக்குநரும், ஒளிப்பதிவாளருமான பாலுமகேந்திராவின் ஆஸ்தான நடிகை என்று பேசப்பட்டவர் நடிகை அர்ச்சனா. தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு அவரே கூறிய வாக்குமூலம்.**

'நீங்கள் கேட்டவை', 'வீடு', 'சந்தியா ராகம்', 'ரெட்டைவால் குருவி' உட்பட ஏழு படங்களில் நாங்கள் இணைந்து பணியாற்றினோம்.

பாலு சாரிடம் ஒரு வசதி உண்டு. அவர் படங்களுக்காக நான் மெனக்கெடவே வேண்டாம். ஒரு பிள்ளைத்தாய்ச்சி பெண் எப்படி நடந்து வருவாள் என்று அவர் நடித்துக் காட்டுவதில் பத்தில ஒரு மடங்கு செய்தாலே போதும்...! படத்தில் பிரமாதமாக இருக்கும்! அதனால் அவர் படங்கள் என்றால் நான் நடிக்க வேண்டுமே என்ற உணர்வே இல்லாமல் ரொம்ப காஷுவலாக இருப்பேன்.

நானே உணர்ந்து என் உண்மையான நடிப்பு வெளிவந்தது 'தாசி' என்ற தெலுங்குப் படத்துக்கு அப்புறம்தான்! பி. நரசிங்க ராவ் என்பவர் இயக்கிய படம் அது!

நான் சினிமாவுக்குள் நுழையத் தடையாக இருந்த பளபளப்பற்ற கிளாமர் இல்லாத முகமே எனக்கு ப்ளஸ் பாயிண்டாக அமைந்துவிட்டது! 'பக்கத்து வீட்டுப் பொண்ணு மாதிரி அந்தப் பொண்ணு காஷுவலாக இருக்கா!' என்று என்னோடும் என் உணர்வோடும் ஆடியன்ஸுக்கு ஒரு நெருக்கம் ஏற்படுத்தியது என் மிகச் சாதாரண முகமே!

அர்ச்சனாவுக்குப் படமே இல்லை என்று என்னைப் பற்றி ஒரு காமெண்ட் எப்போதுமே உண்டு!

அதிக படங்களில் நான் நடிக்க முடியாமல் போனதற்கு 'அவார்டு நடிகை' என்ற பேர் மட்டுமல்ல... வேறு சில காரணங்களும் கூட இருக்கின்றன. 'செல் ஃப் ரெஸ்பெக்ட்' என்பது எனக்கு என் வாழ்வில் முக்கியம்! எதில் காம்ப்ரமைஸ் ஆனாலும் என் சுயமரியாதையை விட்டுத்தர நான் எப்போதும் சம்மதிக்க மாட்டேன். ஆனால், சினிமாவுலகில் பல இடங்களில் இதை விட்டுத்தர வேண்டியதாக இருக்கிறது!

அதனால்தான் சினிமாவைக் காதலிக்க முடிந்த என்னால் சினிமா மனிதர்களைக் காதலிக்க முடியவில்லை!

'செட்'டில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போதே நம் முதுக்குக்குப் பின்னால் மோசமான காமெண்ட்கள் அடிப்பார்கள். நாம் திரும்பினால், சிரிப்பார்கள். நாமும் அவர்கள் அடித்த காமெண்ட்டை மறந்துவிட்டு பொய்யாக அவர்களுடன் சிரித்துப் பேசி, ஒன்றாக அமர்ந்து சாப்பிட வேண்டும்!

என்னால் தாங்கிக்கொள்ளவே முடியாத ஒரு விஷயம் இது...! மனதில் கோபத்தை வைத்துக்கொண்டு வெளியே சிரிப்பைக் காட்டி நிஜ வாழ்க்கையில் எனக்கு நடிக்கத் தெரியாது. சினிமா உலகம் என்பது மனதில் ஒன்று வைத்து வெளியில் ஒன்று பேசும் பொய்யான 'ஹிப்போகிரடிக்' உலகம் என்று புரிந்தது! இதில் மிகச் சிலரே உண்மையானவர்களாக இருக்கிறார்கள்.

பாலுமகேந்திரா சாரிடம் எனக்கு கௌரவம் கிடைத்தது. அதனாலேயே அவருடன் பல படங்கள் பணிபுரிய முடிந்தது! இப்போதும் மாற்றானின் சுயமரியாதையை மதிக்கும் ஒரு சிலர் என் நடிப்பு வேண்டும் என்று கேட்டால் நடித்துக் கொடுக்கவும் நான் தயங்குவதில்லை.

சமீபத்தில் ரேவதி-சுரேஸ் மேனனின் தொலைக்காட்சி நிறுவனம், சன் டி.வி.க்காக தயாரித்த சீரியலுக்கு ஒரு எபிசோடை நானே டைரக்ட் செய்து கொடுத்தேன்.

'நிறங்கள்' என்ற அந்த எபிசோட் நல்ல பாராட்டுப் பெற்றதால் அடுத்து 'உணர்வுகள்' என்றுகூட ஒரு எபிசோட் டைரக்ட் செய்யும் வாய்ப்புத் தந்தார்கள்.

சமீபத்தில் என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாம் கேட்கும் கேள்வி 'எப்போ கல்யாணம்?' என்பதுதான்!

ஒரு நடிகை என்பவள் திருமணம் செய்து கொள்வது என்பது அவ்வளவு லேசுப்பட்ட விஷயமில்லை! ஒருத்தர் மேல் ஒருத்தர் மலையளவுக்கு அபார நம்பிக்கை வைத்தால் மட்டுமே அது முடியும்! முப்பது வயதைத் தாண்டிய நான், இன்னும் கன்னியாகவே இருக்கிறேன் என்று என்னால் பொய்யெல்லாம் சொல்ல முடியாது. நான் விரும்பியே எனக்கு ஒரு உறவு கூட அமைந்தது... எந்த கமிட்மெண்டும் இல்லாமல் பன்னிரண்டு வருடங்கள் அவருடன் வாழ்ந்தும் இருக்கிறேன்.

அப்பா என்று எனக்கு இல்லாமல் போய்விட்ட ஒரு உறவு குறித்த என் ஏக்கம், பொறுப்பும் பொறுமையுமாக என்மேல் கவனம் எடுத்துக்கொண்ட விதம், அவர் வேலைத் திறன் மீது எனக்கிருந்த மதிப்பு அவரை நான் விரும்ப வைத்தது.

ஏதோ சில காரணங்களால் தவிர்க்க முடியாமல் அது முறிந்தும் விட்டது!

எனக்குள் இருக்கும் நான் எப்படிப் பட்டவள் என்பதையும் நேர்மையாக மனம் விட்டு முதலில் என் வருங்கால கணவருடன் பேச வேண்டும். சில விஷயங்கள் நடக்கவே இல்லை என்று மறைத்து அமையும் ஒரு பொய்யான வாழ்க்கை எனக்குத் தேவையில்லை.

திருமணம் என்பது பகிர்ந்து கொள்ளுதல்.. இதில் பகிர்ந்து கொள்ளாமல் விஷயத்தை மறைத்தால் திருமணம் என்பதே ஏமாற்று ஆகாதா? அப்படியொரு நேர்மையும், என் நேர்மையை ஏற்றுக்கொள்ளும் தைரியமும் இருப்பவர் கிடைத்தால் திருமணத்துக்கு நான் தயார்தான்!

அதற்காக அப்படி ஒருவர் கிடைக்கவில்லை என்றால் வருத்தப்படவும் மாட்டேன். இதில் காம்ப்ரமைஸ் செய்துகொள்ளவும் என்னால் முடியாது!

***சந்திப்பு: லோகநாயகி***

## உயிரே உதிராதே

வார்த்தைகளில்
முத்தமிட்டவனே!
முத்தத்துக்குள்-என்
முட்களையும்
மூடிவைத்தாய்...?
-0-
நீ
என் இதயத்தை
காயப்படுத்தியதிலிருந்து
என் கைக்குட்டையும்
காயவேயில்லை!
-0-
காயப்பட்ட மனசுக்கு
ஆறுதல் சொல்ல
தோழியில்லை;
அழுகின்ற கணகளை
தூங்க வைக்க தூளியுமில்லை!
-0-
விளக்கை அணைக்கிற
போதெல்லாம்
உன் நினைவுகள்
விழித்துக் கொள்கின்றன!
உன் நினைவுகளை
அணைக்கும் போதெல்லாம்
தூக்கம் தூர்ந்து போகின்றது!
-0-
எனக்கு
பிரியமில்லை-நீ
பிரிவுடன் பிரியமாகயிருப்பது!
-0-
நானும்
பிரிவோடு பிரியத்தானே
உன்னோடு
பிடிவாதம் பிடிக்கிறேன்!
-0-
தனிமை உனக்கு
தாரமா?
அப்படியானால் என்னை
இரண்டாந்தாரமாக
கட்டிக் கொள்!
-0-
நீ
வாக்குக் கொடுத்ததனால்
நான் 'காதலி' என்ற
பதவி பெற்று விட்டேன்!
நான் வாக்குக் கொடுத்ததனால்
நீ 'காதலன்' என்ற
பதவி பெற்று விட்டாய்;
பிறகு ஏன் கலவரம்...?
-0-
இன்னுமோர்
தேர்தலில் நான்
நிற்கமாட்டேன்!
நீ நின்றாலும்
நான் போட்டாலும்
அது செல்லுபடியாகாத
வாக்குத் தானே!
-0-

கதிர், பிட்டியகந்தை.

## தேன் கிண்ணம்

## நீ வேண்டும்

உன்னை
நினைக்கும்போது
என் வைராக்கியம்
பொடிப்பொடியாய்
பறக்கும்!
***
உனக்கு
நிகர் ஏதடி?
***
தனிமையிலும்
உனை நினைப்பதால்
ஒரு சுகம் உண்டு!
***
நிலவில்கூட
முழுமையில்லை.
ஒருநாள் மட்டுமே
பூரணம்!
***
ஆனால்... ஆனால்...
நீ!
என் ஜீரணம்!
***
உனக்குப்
புரியாமலிருக்கலாம்-
உன்னைச் சுற்றி
நானிருப்பது!
***
பூவில்
மணம் போல
கலந்துவிட்ட
என்னைப் பிரிக்காதே..
நீ வேண்டும் எனக்கு!
***

மாரிமுத்து யோகராஜன்,
மட்டக்களப்பு

## பொங்க நாம் எங்கு போக?

பசுஞ்சாணி நீர் தெளித்து
அழகோடு மெழுகி வைத்து,
★☆
ஓட்டுச் சில்லெடுத்து
உரலில் போட்டிடித்து
★☆
உலக்கை படுக்க வைத்து
அழகாய் கோலமிட்டு,
★☆
கோலத் தடுப்புக்குள்
அடுப்பு வைத்து
★☆
பொங்க வைத்து
காலம் போனதடி.
★☆
கண்மணியே...
இன்று இங்கு
★☆
கோலத் தடுப்பளவு
நிலத்துள்ளே தானே
★☆
எம்
குடும்பம் வாழுதடி...!
★☆
பொங்க நாம்
எங்கு போக..?
★☆
பொங்கவில்லை
மனதில்
பொங்குகிறோம்!

திருமதி மேகலா இரஞ்சித்

## அமைதி வந்தால் மனிதரை வாழ்த்துவோம்

அது பாதி இரவு
கோடை கால குடியிருப்பை
குடை வைத்து மூடியது
விடிகாலைச் சூரியன்.
•••
ஒவ்வொரு நாளும்
பல்லாயிரம் அகதிகளின்
மௌனங்களை அவலங்களாய்
வாசிக்கத் தெரிந்த
இந்தப் பிரபஞ்சமும்!
•••
மனசுக் கண்ணீரை
இதயப் பெருமூச்சால்
இடைவெளி வைக்காமல்
ஒட்டிப் போகின்ற
யுத்தச் சூழலும்!
•••
மழை வெள்ளத்தாலும்
சூறைக் காற்றினாலும்
போர் உரசல்களின்
துயரக் குத்தலாலும்
கண்ணீர் வடிக்கின்ற
எம் கிராமத்து தரையினில்
அமைதி உதயமாகும் போது!
•••
காய்ந்த எங்கள் சின்னக்
கிராமத்தில் கமத்துக்குப் போய்
கணப்பின் அருகில் பறண்போட்டு
தூங்கவும்-மேயும் செம்மறிகளை
துரத்திப் பிடித்து தோளில்
சமந்து வீட்டுக்கு வரவும்.
•••
நாரைக் கொக்குகளை
வலை வைத்துப் பிடிக்கவும்
எம்பி ஓடுகின்ற அருவி
ஆற்றினில் பாய்ந்து குளிக்கவும்-
மனசு துடிப்பது எமக்கு
நன்றாகத் தெரிகிறது
•••
என்ன செய்ய யுத்தயுகம்
முடிந்து வரலாற்று மண்ணில்
அமைதி வரும்போது நாம்
அப்பொழுது மனிதரை
வாழ்த்துவோம்...!

விடத்தல்தீவு- உவைஸ்கனி,
-தில்லையடியிலிருந்து.



படிப்பகம்

www.padippakam.com

# மேனிப் பூவெழில்

## நலம்–நலமாக வாழ ஆவலா?



**நா**ம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடித்துப் பாருங்களேன். நல்ல உடல் ஆரோக்கியமாக வாழலாம்.

- ஒரு நாளைக்கு 8 கிளாஸ் தண்ணீர் குடியுங்கள்.
- ஒவ்வொரு வேளை சாப்பாட்டின் போதும் இரண்டு காய்கறிகளையும், ஒரு பழத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொருவேளை சாப்பாட்டின் முடிவிலும் ஒரு பச்சைக் காய்கறி சாலட்டையும் சாப்பிடுங்கள்.
- மாலை வேளையில் வெவ்வேறு விதமான முளைவிட்ட பயறுகளைச் சாப்பிடலாம்.
- காலையில் எழுந்ததும் வெதுவெதுப்பான ஒரு டம்ளர் நீரில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து குடியுங்கள்.
- புதிதாகப் பறித்த காய்கறிகளை மட்டும் உபயோகியுங்கள்.
- வாரத்தில் ஒருநாள் காலை உணவாகப் புதிய பழங்களை மட்டும் சாப்பிடுங்கள்.
- பெரும்பாலும் முதல் நாள் மீதமாகும் உணவுகளை, அடுத்தநாள் சாப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். புதிதாகச் சமைத்த உணவுதான் நல்லது.
- எண்ணெயில் பொரித்த பதார்த்தங்களை உங்கள் உணவில் இருந்து விலக்கி விடுங்கள்.
- அதிகமான ஐஸ்கிறீம், சொக்கிலேட், குளிர்பானங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- உணவில் நார்ச்சத்து நிரம்பிய பதார்த்தங்கள், பழம், காய்கறி, தானியங்களை அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- மிதமான அளவு உப்பைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- காய்கறிகளைப் பொரிப்பதற்கும், வறுப்பதற்கும் பதிலாக வேக வைத்துச் சாப்பிடுங்கள்.
- உருளைக்கிழங்கு, வெள்ளரி, கரட், தக்காளி போன்றவற்றின் தோலைச் சீவாமல் உபயோகியுங்கள்.
- உணவை அவசரமாக வாயில் போட்டு விழுங்காமல், இரசித்து நிதானமாகச் சாப் பிடுங்கள்.
- திரைப்படத்திற்குச் செல்லும்போது, சிப்ஸ் போன்றவற்றைச் சாப்பிடாமல் 'பொப்கோர்ன்' (சோளப்பொரி) வாங்கிச் சாப்பிடுங்கள்.
- சாப்பிடும்போது படிப்பது, தொலைக்காட்சி பார்ப்பது போன்ற வேறு எந்த வேலையிலும் கவனத்தைச் செலுத்த வேண்டாம்.
- வயிறு முட்டச் சாப்பிடாமல் தேவையான அளவு மட்டுமே சாப்பிடுங்கள்.
- தினமும் 8 மணிநேரம் தூங்குங்கள்.

## அழகுக் குறிப்புக்கள்



**கரும்புள்ளிகள் மறைய**

* ரோஜா இதழ்களுடன், பாதாம் பருப்பை ஊறவைத்து அரைத்து முகத்தில் தடவி வரலாம்.

* வாழைப்பழம் அல்லது பப்பாளிப் பழத்துடன் சிறிது தேன் கலந்து குழைத்து முகத்தில் பூசி வரலாம்.

* வெள்ளரிச்சாறு, புதினாச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு ஆகியவைகளைச் சம அளவில் கலந்து தடவலாம்.

**கண்கள் அழகுபெற**

தாமரை, ரோஜா, தாழம்பூ, நந்தியாவட்டை ஆகிய மலர்களில் ஒன்றை அடிக்கடி கண்களில் ஒற்றிக்கொண்டால் கண்கள் புத்துணர்ச்சியுடன் காட்சியளிக்கும்.

**நிறப்பொலிவு பெற**

அடிக்கடி அன்னாசிப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால், சற்று மாநிறமாக உள்ள பெண்கள் நல்ல நிறத்தைப் பெறுவார்கள்.

## தங்கமாலைப் பரிசுப்போட்டி அதிஷ்டசாலிகள்

முரசு–அம்மன் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கிய தங்கமாலைப் பரிசுப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளான தங்கமாலை, தங்க மோதிரம், சமையல் அடுப்பு போன்றவற்றை பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்களை அறிய ஆவலாக இருப்பீர்கள்.

**அந்த சூப்பர் அதிஷ்டசாலிகளின் விபரங்கள் இறுதியில் அறிவிக்கப்படும்.**

ஆறுதல் பரிசுபெறும் 50 அதிஷ்டசாலிகளில் கடந்த வாரம் 10 பேரின் விவரங்கள் தந்தோம். அடுத்துவரும் 10 பேரின் பெயர் விபரம் பின்வருமாறு:

11. எஸ். சசிகலா
HOUSE NO.126, BLOCK NO.04
STREET NO.11
SABAHYA -KUWAIT.
12. ஜே. மேரி ஜொஸ்லீன்
பள்ளிமுனை, மன்னார்.
13. எஃப். இஸ்மியா இஸ்மத்
இல 12/20, இல்லவத்துற,
கம்பொல.
14. ஏ. செல்வராணி,
இல. 546, பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் அவன்யூ,
கொழும்பு-14.
15. ஐனுல் மர்ழியா
டயரப, பண்டாரவளை.
16. எஃப். கரீமா
இல. 26/A. ரோஸ்தெரு, மாத்தளை.
17. திருமதி ம. இளமுருகன்
வ/தமிழ் மத்திய ம.வித், வவுனியா.
18. இஸட்.ஏ. பர்ஸானா
இல. 103, கே.பீ.எம்.வீதி, பொத்துவில்-07.
19. ஏ.எல்.ஜெசீமா
இல. 62, கிழக்கு வீதி,அக்கரைப்பற்று-01.
20. ஷெரீன் சுரேந்திரன்
I MEADOWGLEN PL# 308
SCAR-ONT, MIG 2V5, CANADA.

ஏனைய அதிஷ்டசாலிகளின் விவரங்கள் அடுத்த வாரம் வெளியாகும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FC

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-01-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## பலாங்கொட வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | **ந. சிவபாக்கியம்,**<br>57, இராசக்கலை வீதி, பலாங்கொட. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 71

புவனா



டயானாவும் சாள்ஸ்சும் பிரிவதற்குக் காரணம் கமீலாதான் என்று கருதியோர். கமீலாவை வெறுத்தனர். வில்லியாகவே நோக்கினர்.

இதனையடுத்து கமீலாவின் சிநேகிதிகள் சிலர் அவரது சோகக் கதையை பத்திரிகைகளுக்குக் கூறினர்.

கமீலா பற்றி அறியப்படாத இன்னொரு பக்கத்தை அந்த சோகக் கதை கூறியது.

கமீலாவின் கணவர் பார்க்கர் அரச குடும்பத்திற்கு தூரத்து உறவினர். அந்த அந்தஸ்து காரணமாக அரச குடும்பப் பெண்களுடன் நெருங்கி உறவாட முடிந்தது.

திருமணத்தின் பின்னராவது பார்க்கர் திருந்திவிடுவார் என்று எதிர்பார்த்தார் கமீலா.

இரண்டு பிள்ளைகள் பிறந்த பின்னரும், பிறபெண்களுடன் கூத்தடிப்பதை பார்க்கர் நிறுத்தவில்லை.

கமீலாவின் சிநேகிதிகள் சிலரையும் பார்க்கர் கொத்திக் கொண்டார்.

அவர்களில் சிலர் விவஸ்தை கெட்டவர்கள். நிறைபோதையில் கமீலாவிடமே- அவர் தங்களை எப்படியெல்லாம் சந்தோஷப்படுத்தினார் என்று விவரிப்பார்கள். தங்களுடன் எப்படியெல்லாம் நடந்து கொண்டார் என்றும் கூச்சமில்லாமல் கூறுவார்கள்.



கமீலாவைப் பார்ப்பதற்காக வந்திருந்த சிநேகிதி ஒருத்தி, கமீலா வீட்டில் இல்லாததால், வரவேற்பறையில் காத்திருந்தாள்.

அந்த நேரம் அங்கு வந்த பார்க்கர் அவருடன் பேசிப் பேசியே வசப்படுத்திவிட்டார். வரவேற்பறையில் இருந்த சோபாவிலேயே இருவரும் கட்டியணைத்து முத்தங்களைப் பரிமாறிக்கொண்டிருந்தனர்.

அந்த நேரம் கமீலா வந்து சேர்ந்துவிட்டார். அக்காட்சியைக் கண்ட போதும், காணாததுபோல சென்றுவிட்டார். நல்ல வேளையாக தன் பிள்ளைகள் எவரும் வீட்டில் இல்லாமல் போனார்களே என்று ஆறுதல் பட்டார்.

பிள்ளைகளும் வளர்ந்து கொண்டிருக்க, பார்க்கரது பெண் வேட்டையும் தொடர்ந்து கொண்டிருந்தது.

மனமுடைந்துபோன கமீலா தனது பிள்ளைகளுடன் சில காலம் தங்கிவிட்டு வருவதாக தன் கிராமத்துக்குச் சென்றார். அதனையும் தன் பெண் வேட்டைக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் பார்க்கர்.

தனது வீட்டுக்கே பெண் சிநேகிதிகளை அழைத்து வந்து இன்பம் நுகர்ந்தார்.

ஒருநாள் இதுபற்றி பார்க்கரிடம் நேரடியாகவே கேட்டுவிட்டார் கமீலா. "இந்த திருவிளையாடல்களை இனியாவது நிறுத்தக் கூடாதா?"

அதற்கு பார்க்கர்: "உடம்பில் வலு இல்லையென்றால் நானே நிறுத்திவிடுவேன். இப்போது தெம்பு இருக்கிறது. புகுந்து விளையாடுகிறேன்!" என்ற ரீதியில் பதில் சொன்னவர், "உனக்கும் ஆண் நண்பர்கள் இருந்தால், எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது!" என்று குண்டொன்றையும் தூக்கிப்போட்டார்.

முதலில் அதிர்ச்சியாக

## கமீலாவின் சோகம்

இருந்தாலும் பின்னர் சாள்ஸ்சுடன் ஏற்பட்ட தித்திக்கும் சந்திப்புக்களுக்கு, பார்க்கரின் கூற்று கமீலாவுக்கு அனுமதிப் பத்திரமாகிவிட்டது.

சாள்ஸ்சிடம் உடல்ரீதியாக மட்டுமல்லாமல் உளரீதியாகவும் கமீலா அன்பு வைத்தார்.

சாள்ஸ்சும் கமீலாவும் அளவற்ற அன்பும், ஆசையும் கொண்டிருந்தார்.

'கமீலாவையே மணப்பேன்' என்று ஒற்றைக்காலில் நின்ற சாள்ஸ்சிடம், அவரது தந்தை எடின்பரோ கோமகன் பக்குவமாக எடுத்துக்கூறினார்: "நீ இதுவரை விளையாட்டுப் பிள்ளை. திருமணமாகும்வரை இளவரசர்களுக்கு இதெல்லாம் சகஜம். ஆனால் இதுவே வாழ்க்கையல்ல!"

சாள்ஸ்சுக்கு தந்தையை எதிர்த்துப் பேசுவதற்கு துணிவில்லை. மௌனித்தார்.

"உனக்கு தோதான புது மணப்பெண்ணை நீ தேர்ந்தெடு. அரியணை உனக்காகக் காத்திருக்கிறது. முக்கியமான கடமைகள் காத்திருக்கின்றன. மனதில் உள்ள குழப்பங்களைத் தூக்கி எறி மகனே!"

### உண்மைக் காதலி

இதன் பின்னர் டயானாவுடனான சந்திப்புக்களும் சாள்ஸ்சை திசை திருப்பின. அவர் மனதை கரைத்தன.

ஒரு தடவை கமீலாவிடம் சாள்ஸ் தனது மனதைத் திறந்து காட்டினார்: "இதுவரை பல பெண்களுடன் உறவாடியுள்ளேன். இனிமேலும் அது தொடரும். ஆனால் உன்னை மட்டும்தான் உண்மையாகக் காதலிக்கிறேன். உன்னை வாழ்க்கைத் துணைவியாக அடையும் பாக்கியம் எனக்குக் கிடைக்கப் போவதில்லை என்றே நினைக்கிறேன்!"

சாள்ஸ்சுடன் திருமணம் நடக்கிறதோ இல்லையோ, தங்கள் நட்பு ஆயுள் உள்ளவரை தொடரும் என்று கமீலா நம்பினார். அதனால் சாள்ஸ்-டயானா திருமணத்தின்போதும் கமீலா கவலையில் விழவில்லை. திருமண ஏற்பாடுகளில்கூட கலந்து கொண்டார்.

சாள்ஸ் அணியவேண்டிய சில உடைகளுக்குக்கூட கமீலாதான் யோசனை கூறி உதவினார்.

ஒருமுறை சாள்ஸ்சிடம் கமீலா தன் மனதில் பட்டதை மறைக்காது கூறினார்: "உங்கள் ஜோடிப் பொருத்தம் உண்மையாகவே பிரமாதம். டயானா உங்களுக்கு ஏற்ற அழகான பெண்தான். ஆனால் சிறு பெண். பூவைப்போல அவளை அணுகுங்கள்."

அதற்கு சாள்ஸ்: "எந்தத் துணை வந்தாலும், உனது துணை போல இருக்காது. உன்னிடம் கிடைக்கும் திருப்தி எங்கும் கிடைக்காது!" என்று கூறினார்.

சாள்ஸ் விரும்பி அழைத்த போதெல்லாம் கமீலா அவரிடம் சென்றார்; உறவாடினார். ஆனால் டயானாவை சாள்ஸ்சிடம் இருந்து பிரிக்க வேண்டும் என்று அவர் கனவிலும் நினைத்தது கிடையாது.

உண்மையில் நோஞ்சானாக இருந்த சாள்ஸ்சை, பெண்கள் விரும்பும் ஆண்மகனாக மாற்றியவரே கமீலாதான்.


ஒரு பெண்ணை எங்கெங்கு தொட்டால் அவளுக்கு உணர்வுகள் தகிக்கும் என்பதைக்கூட கமீலா சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

பார்க்கர் தவிர சாள்ஸ்சிடம் மட்டுமே கமீலா காதல் வயப்பட்டார். சாள்ஸ்சை காதலிக்க ஆரம்பித்த பின்னர் பார்க்கரை விவாகரத்து செய்யவும் முன்வந்தார்.

ஆனால் சாள்ஸ்-கமீலா, டயானா தவிர பல பெண்களுடன் நெருங்கி உறவாடினார். கமீலாவிடம் கற்ற பயிற்சியை ஆங்காங்கே உபயோகித்தும் பார்த்தார்.

"கமீலா வில்லியல்ல; எட்டத்தில் நின்று பார்த்தால் அப்படித்தான் தெரியும்!" என்று கமீலாவின் சிநேகிதிகள் கூறினர்.

திருமணம் பற்றி சாள்ஸ் கூறிய கருத்துக்



களும் வெளியாகின.

"திருமணம் என்பது அடிப்படையில் ஒரு வலுவான நட்புறவு. உடலால் மட்டுமல்ல, உள்ளத்தாலும் உங்களுக்கேற்ற ஒரு வாழ்க்கைத் துணை கிட்டுமானால், நிச்சயம் நீங்கள் ஓர் அதிஷ்டசாலி.

வாழ்க்கையில் ஒருவர் எத்தகைய நிலையில் இருந்தபோதும் அவர் திருமண பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும்போது அவருடைய ஆயுள் முழுவதற்குமான ஒரு துணையை தன்னுடன் இணைத்துக் கொள்கிறார்.

திருமணம் செய்பவர்கள் இருவரும் தமது விருப்பு. வெறுப்புக்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும்!" என்று கூறினார் சாள்ஸ்.

**(அடுத்த வாரமும் வரும்)**



படிப்பகம்

www.padippakam.com






ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக் கோர் கணமும்-கிளியே!
வாழத் தகுதி யுண்டோ?

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# பாத்திரமறிந்து....



ஆட்டு மந்தைக்குள் ஓநாய் ஒன்று புகுந்து விட்டது. இதை ஆட்டு மந்தையைக் காவல் காக்கும் காவல் நாய்கள் கண்டு கொண்டன. உடனே ஓநாய் மீது பாய்ந்து கடித்துக் குதறி விட்டன.

படுகாயங்களுக்குள்ளான ஓநாய், எப்படியோ தப்பித்து விட்டது. ஒரு வாரத்திற்குள் அதன் உடம்பில் இருந்த காயங்கள் எல்லாம் ஆறிவிட்டன. ஆனால் அதன் காலில் இருந்த பெரிய காயம் மட்டும் ஆறவில்லை.

ஓநாய் மெதுவாக காலை இழுத்து இழுத்து உணவு தேடப் போனது. காலில் ஏற்பட்ட காயம் சரியாக ஆறாததால், அதிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இதனால் ஓநாய்க்கு வலி அதிகமாக இருக்க அப்படியே உட்கார்ந்து விட்டது.

அப்போது, அந்த இடத்தால் ஓர் ஆட்டுக்குட்டி போய்க்கொண்டிருந்தது. இதைக் கண்ட ஓநாய்க்கு ஆசை அடங்கவில்லை. நாக்கை சப்புக் கொட்டியது.

'என்னால் இப்போது ஓடிச்சென்று ஆட்டுக்குட்டியைப் பிடிக்க முடியாது. இருந்தாலும் ஆட்டை நழுவவிட மனமில்லை. எப்படியாவது அதை என் பக்கத்தில் வரவழைக்க வேண்டும்' என்று யோசனை செய்தது.

"உடம்புக்கு என்ன?" என்று சற்றுத் தள்ளி நின்றபடி ஓநாயிடன் கேட்டது ஆட்டுக்குட்டி.

"எதிரிகள் பலர் சேர்ந்து என்னைக் காயப்படுத்தி விட்டார்கள். தாகம்.... தாகமாக இருக்கிறது... தண்ணீர் ... தண்ணீர் வேண்டும்!" என்று நடித்தது ஓநாய்.

"பக்கத்தில் தான் ஏரி இருக்கிறது. மெல்ல எழுந்துபோய் தண்ணீர் குடிக்க முடியாதா?" என்று கேட்டது ஆட்டுக் குட்டி.

"எழுந்து நடக்க இயலுமென்றால், நான் அப்போதே போய்த் தண்ணீர் குடித்திருப்பேன். தயவுசெய்து அந்த ஏரி வரை என்னை அழைத்துச் செல்," என்று கெஞ்சிக் கேட்டது ஓநாய்.

உடனே, பெரிய சத்தத்துடன் 'ஓ'வென்று நிலத்தில் புரண்டு அழுதது ஓநாய். இதை அந்த ஆட்டுக்குட்டி கண்டது. இளகிய மனம் கொண்ட ஆட்டுக்குட்டி ஓநாயின் பக்கத்தில் வந்தது.

விழுந்து கிடந்த ஓநாயின் கோலத்தைக் கண்ட ஆட்டுக்குட்டி பரிதாபப்பட்டது. ஓநாயின் பக்கத்தில் சென்று, மெல்ல தோள் கொடுத்து அணைத்து அதைத் தூக்கி நிறுத்த முயற்சித்த வேளையில், ஆட்டுக்குட்டியின் குரல்வளையைப் பிடித்தது ஓநாய்.

சிறிது நேரத்தில் ஆட்டுக்குட்டியைத் தின்று, பசியைத் தீர்த்த ஓநாய், ஆட்டுக்குட்டி சொன்ன ஏரியில் தண்ணீர் குடித்தது.

'பாத்திரமறிந்து பிச்சை போட வேண்டும்!' என்று சும்மாவா சொன்னார்கள்?

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **30.01.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 281**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 279

பரிசுக்குரியவர்:
எம். முகைஸ்,
விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயம், திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ப. பிரசாந்தன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | 03. எம்.ஏ.அமீதா பானு, அல்/அக்ஸா ம.கல்லூரி, கல்பிட்டி. |
| செல்வி தர்ஷினி ரவிச்சந்திரன், புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி.,திருகோணமலை. | கருணாகரம் சந்திரமோகன், விபுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவு-01. |
| எஸ். சுதர்சன், ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்., கம்பளை. | செல்வி வாரிதா மீராமுஹைதீன், மட்/மீரா பாலிகா மகா வித்தியாலயம், காத்தான்குடி. |
| பா. திருமால், செட்டிபாளையம் ம.வி., மட்/செட்டிபாளையம். | ஆர். சுரதிஸ், க/கலாபொக்க த.வி.மடுல்கெல. |
| எம்.எஸ்.எம். சுஐப், மட்/அலிக்கார் தேசிய பாடசாலை, ஏறாவூர்- | எஸ். மாதங்கி, ஹோலி ;.பாமலி கொன்வன்ட், பம்பலப்பிட்டி. |

## விநோத வழக்குகள்

உலக சரித்திரத்திலே மிக நீண்டகாலம்- 42 வருடங்கள் ஒரு வழக்கு நடந்தது என்றால் ஆச்சரியமல்லவா? இது ஃபிரான்ஸ் நாட்டில் 15ம் நூற்றாண்டில் நடந்தது. குற்றவாளி யார் தெரியுமா? ஒரு சிறு பூச்சி.

ஐரோப்பாவில் முன்பு இப்படி விலங்குகளைக் குற்றவாளியாக்கி வழக்குத் தொடர்வார்கள். ஃபிரான்ஸ் நாட்டில் மட்டும் இம்மாதிரியான வழக்குகள் கி.பி. 1120-1740க்குள் இப்படி 49 வழக்குகள் நடந்திருக்கின்றன.

1740ல் ஒரு பசுவைக் கொலைக் குற்றத்திற்காக தூக்கில் இடும்படி தண்டனை பிறப்பிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டது.

1457ல் லவேக்னி என்ற இடத்தில் ஒரு பெண் பன்றியும், அதன் ஆறு குட்டிகளும் ஒரு குழந்தையை உயிரோடு தின்று விட்டதாக ஒரு வழக்கு நடந்தது. அதில் பெண் பன்றிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன் குட்டிகள், குழந்தையைத் தின்றதற்குத் தக்க சாட்சிகள் இல்லாதபடியால் அவை விடுதலை செய்யப்பட்டன.

## புயல் பாதிப்புக்கள்

உலகில் புயலினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அவற்றில் பாரிய பாதிப்புக்கள் நடந்த தினங்களும், இடங்களும், ஏற்பட்ட பாதிப்புக்களும் வருமாறு:

| தினம் | இடம் | இறப்புக்கள் |
|---|---|---|
| 1906 செப்டெம்பர் 18 | ஹொங்கொங் | 10,000 |
| 1942 ஒக்டோபர் 15-16 | இந்தியா | 40,000 |
| 1963 மே 28-29 | பங்களாதேஷ் | 22,000 |
| 1965 மே 11-12 | பங்களாதேஷ் | 17,000 |
| 1965 ஜூன் 01-02 | பங்களாதேஷ் | 10,000 |
| 1970 நவம்பர் 13 | பங்களாதேஷ் | 300,000 |
| 1985 மே 25 | பங்களாதேஷ் | 10,000 |
| 1991 ஏப்ரல் 30 | பங்களாதேஷ் | 70,000 |

## துணுக்குச் செய்திகள்

* விண்வெளியில் நீண்ட தூரம் பிரயாணம் செய்பவர்கள் பூமியைப் பார்க்கையில் அது நீலநிறமாகத் தெரியும்.
* வெள்ளிக் கிரகத்தில் மட்டும் சூரியன் மேற்கே உதிக்கிறது, கிழக்கில் மறைகிறது. காரணம் மற்ற கிரகங்களைப் போல் அல்லாமல் இது தனது அச்சில் எதிர்த்திசையில் சுற்றுகிறது.
* யுரேனஸ் கிரகத்தின் 15 துணைக் கோள்களுக்கும், ஆங்கில எழுத்தாளர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

# அதிசயம் - ஆனால் உண்மை!



அமெரிக்காவைச் சேர்ந்த காவர்லி- இரயில் விபத்தில் 1906ல் இறந்தார். இவரது தொப்பி ஈமச்சடங்கு செய்பவரின் அலுவலகச் சுவரில் ஆணியில் மாட்டப்பட்டது. இன்றுவரை அங்கே அப்படியே தொங்கியபடி உள்ளது.



பிரேஸில் நாட்டில் முக்கிய நகரொன்றில் ஓராண்டு முழுவதும் பகல் 2 மணியில் இருந்து மாலை 4 மணிவரை தினமும் மழை பெய்தது.



பல்வேறு நிறங்களில் வெவ்வேறு மதிப்பைக் குறிக்கும் கண்ணாடி நாணயங்கள் எகிப்தில் 908 முதல் 1171 வரை புழக்கத்தில் இருந்தன. இதைக்கொடுத்து தங்கத்தை வாங்கலாம்.



கைவிரல்கள்போல் சீனாவில் காணப்படும் எலுமிச்சம் பழங்களின் பெயர் 'புத்தர் கை' எலுமிச்சம்பழம். இந்த எலுமிச்சம்பழங்கள் சீனாவில் வீடுகளில் நறுமணத்திற்காக மட்டுமே பயன் படுத்தப்படுகின்றன.

## நுளம்புச் சுருள்

நுளம்புத் தொல்லையில் இருந்து தப்புவதற்காக நுளம்புச் சுருளைப் பற்ற வைப்பது நமது நாட்டில் 15, 20 ஆண்டுகளாகத்தான் பிரபலமாகியுள்ளது. ஆனால் நுளம்புச் சுருள் கண்டுபிடிக்கப்பட்டு 104 ஆண்டுகளாகிவிட்டன.

1895ம் ஆண்டு ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஈஜிரோ என்பவர்தான் நுளம்புச் சுருளைக் கண்டுபிடித்தார். 1866ம் ஆண்டில் அமெரிக்காவில் இருந்து கிரிசாந்தமம் என்னும் செடிகள் ஜப்பானுக்கு வந்தன.

இந்தச் செடியில் இருந்து நுளம்புகளை விரட்டும் ஆராய்ச்சியை 1890ல் தொடங்கினார். கடைசியில் கிரிசாந்தமம் செடியைப் பொடி செய்து அதை நுளம்புச்சுருளாக்கி வெற்றியும் பெற்றார்.



ஈஜிரசா 1910ம் ஆண்டில் 'சிஞ்சோ' என்னும் பெயரில் நுளம்புச் சுருள்களை அதிக அளவில் தயாரித்து உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்தார். இப்போது ஜப்பானில் ஏராளமான நுளம்புச் சுருள்கள் வந்து விட்டாலும் சிஞ்சோ தான் முன்னணியில் இருக்கிறது.

## எப்படித் தெரியுமா?



சிப்பிக்குள் இருந்து முத்து எடுக்கிறார்கள் என்று அறிந்திருப்பீர்கள். மூடியிருக்கும் சிப்பிக்குள் முத்து எப்படி வருகிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

திறந்திருக்கும் சிப்பியின் கூட்டிற்குள் ஓர் ஒட்டுண்ணி அல்லது சிறுதுகள் அல்லது மணல் வந்தடையும். இப்படி வந்தடையும் பொருட்களில் ஒன்று சிப்பிக்குள் இருக்கும் 'மேண்டலின்' எனப்படும் சவ்வுப் பகுதியில் தங்கிவிடும்.

இந்த 'மேண்டலின்' தன் மேல் தங்கியிருக்கும் பொருளைச் சுற்றி ஓர் உறையைத் தோற்றுவிக்கும். இதுவே நாளடைவில் விலையுயர்ந்த முத்தாக மாறுகின்றது.

## ஏன் தெரியுமா?

மெழுகுவர்த்தியின் திரியில் இருந்து வெளிவரும் ஒளி ஏன் கோணிக்கல் வடிவில் எரிகிறது என்று தெரியுமா?

மெழுகு வெப்பத்தால் உருகும் போது, சுற்றியுள்ள வெப்பக்காற்று ஒளிச்சுடரை அமுக்கிக் கொண்டு மேலே வருகிறது. இதே நேரத்தில் வெளிக்காற்றான ஒட்சிசன் ஒளிச் சுடருக்குள் நுழைந்து மெழுகுவர்த்தியைத் தொடர்ந்து எரிய வைக்கிறது.

இப்படி வெளிக்காற்று அழுத்தத்தால் ஒளிச்சுடரானது கோணிக்கல் வடிவத்தில் எரிகின்றது.

இதேபோல் மெழுகுவர்த்தியை விண்வெளியில் எரிய விட்டால் ஒளிச்சுடர் பந்து வடிவில் வட்டமாக எரியும்.



காரணம் விண்வெளியில் சூடான காற்று மேலே எழுவதில்லை.

## அமைதிக் கடல்

உலகில் மிகப் பெரிய சமுத்திரம் பசிபிக் சமுத்திரம் என்பது எல்லாருக்கும் தெரியும். உலகப் படத்தைப் பார்க்கும்போது அதில் அதிகமாகத் தெரிவது பசிபிக் சமுத்திரம்தான்.

பசிபிக் சமுத்திரத்திற்கு இந்தப் பெயரைச் சூட்டியவர் ஃபெர்டினன்ட் என்ற போர்த்துக்கேய மாலுமி. இவர் 1519ல் 5 கப்பல்களில் 237 மாலுமிகளுடன் உலகைச் சுற்றப் புறப்பட்டவர்.

'பசிபிக்' என்றால் அமைதி அல்லது சமாதானம் என்று அர்த்தம். இந்தச் சமுத்திரம் பெரும்பாலும் அமைதியாகவே இருக்கிறது. ஆனால், இது எப்போதுமே அமைதியாக இருப்பதில்லை. சில சமயங்களில் பெருங்காற்று வீசும். அப்போது பெரும் அலைகள் மேலெழும்.

## வென்ட்ரிலோகுவிஸ்ட்

வென்ட்ரிலோகுவிஸ்ட் என்னும் இந்தப் பறவை கத்துவதிலேயே பேர்போனது. இது 'தக் தக் தக்....' என்று தொடர்ந்து கத்திக்கொண்டே இருக்கும். ஒரு நாள் முழுவதும் தொடர்ந்து கத்தும் இது களைப்படையாது.

மற்றப் பறவையினங்கள் எல்லாம் வெய்யில் தாங்க முடியாமல் கொஞ்ச நேரம் கத்த முடியாமல் நிறுத்தினாலும் இப்பறவை நிறுத்தாது. இப்பறவை கத்தினால் சத்தம் வரும். ஆனால் எந்த இடத்திலிருந்து கத்துகிறது என்று யாராலும் கண்டு பிடிக்க முடியாது.



ஓரிடத்தில் இருந்து கொண்டு இன்னொரு இடத்திலிருந்து கொண்டே சத்தம் வருவதுபோல் செய்யும் கலைக்கு 'வென்ட்ரிலோக்கிஸம்' என்று பெயர். அதனால்தான் இப்பறவைக்கு இப்பெயர் வந்தது.

இப்பறவைகள் காய்ந்த, மென்மையான மரங்களான முருங்கை, குல்மொஹார் போன்றவற்றில் பொந்துகள் அமைத்து வசிக்கின்றன.

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி

**13**

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.

இனி......

ஒரு நாள் காலை ஒன்பது மணி.

சாந்தா குளித்து முடித்து சேலை மாற்றிக் கொண்டிருந்தபோது,, கதவைத் தட்டும் சத்தம் கேட்டு பக்கவாட்டு யன்னலை எட்டிப் பார்த்தாள். ஆயா தெரிந்தாள்.

"என்ன ஆயா...?"

"உங்களைப் பார்த்துப் பேசறதுக்காக ஒருத்தர் வந்து காத்திட்டிருக்கார்."

"யார்ன்னு கேட்டியா?"

"கேட்டேன் மா... உங்களுக்கு சொந்தம்ன்னு சொன்னார்."

"எனக்கு சொந்தமா? பேர் என்ன சொன்னார்."

"பேரை அவர் சொல்லலை. ஆள் மீசை வெச்சுகிட்டு வாட்டசாட்டமா இருக்கார்."

"வர்றேன் போ...!" சொன்ன சாந்தா சேலையை துரிதகதியில் மாற்றிக் கொண்டு நெற்றிக்கு ஒரு ஸ்டிக்கர் பொட்டை ஒட்ட வைத்தபடி அறையினின்றும் வெளிப்பட்டு விசிட்டர்ஸ் அறையை நோக்கிப் போனாள்.

வெள்ளைப் பேண்ட் வெள்ளை சர்ட் அணிந்து புஷ்டியாய் மீசை வளர்த்து உயரமாய் தெரிந்த அந்த மனிதர் சாந்தாவைப் பார்த்ததும் புன்னகைத்தார்.

சாந்தா கேட்டாள்,

"நீங்க?"

"சொல்றேன் உட்கார்!"

சாந்தா தயங்கிக்கொண்டே உட்கார்ந்தாள். அவர் ஒரு விநாடி மௌனித்து விட்டு கேட்டார்,

"நீ டெலிஃபோன் கிளினிங் கேர்ள் தானே?"

"ஆமா"

"உன்கிட்ட ஒரு என்கொயரி..."

"என்கொய்ரியா... வாட்... அபௌட்?"

"நான் பொலிஸ் டிபார்ட்மெண்ட்டிலிருந்து வர்றேன். ஸீ... மை ஐ.டி.கார்ட்...." சொன்னவர் தன் சட்டையின் மேல் பாக்கெட்டில் சொருகி வைத்திருந்த ஐடென்டிஃபிகேஷன் கார்டை எடுத்து சாந்தாவின் முகத்துக்கு நேரே பிடித்தார்.

படித்தாள்.

ராஜ கணேஷ், இன்ஸ்பெக்டர் ஆஃப் பொலிஸ்.

"இட்ஸ்... ஓ.கே...! என்ன என் கொய்ரி?" சாந்தா கலக்கத்தை மறைத்துக் கொண்டு இயல்பாய்க் கேட்டாள்.

"நேத்து உனக்கு எந்த ஏரியா ட்யூட்டி?"

"நேத்து நான் ட்யூட்டிக்கே போகலை... லீவு எடுத்து விட்டேன்."

"சரி.... நேத்திக்கு முந்தாநாள் எங்கே ட்யூட்டி?"

"மகாராணி நகர்!"

"பகல் பூராவும் இந்த டெலிஃபோன் க்ளினிங் வேலை பார்த்துட்டு நைட்லேயும் வேற வேலை ஏதோ பார்க்கிறியாமே... உண்மையா....?"

சாந்தா எரிச்சலாய் நிமிர்ந்தாள்.

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை."

"கேள்விப்பட்டேனே....?"

"என்ன கேள்விப்பட்டீங்க...?"

"சாயந்தரம் ஏழு மணிக்கு... மேல பார்ட் டைமா பலான வேலை பார்க்கிறதா?"

"இன்ஸ்பெக்டர்! லிமிட் யுவர் டங்க்" சாந்தா தன் இடக்கையின் சுட்டுவிரலை கோபமாய் உயர்த்தினாள்.

"ஏம்மா! அவ்வளவு கோபப்படறே?"

"இன்ஸ்பெக்டர்... நீங்க நினைக்கிற மாதிரி நான் அப்பேர்ப்பட்ட பெண் இல்லை!"

"எனக்கு புகார் வந்திருக்கேம்மா..."

"என்ன புகார்?"

"நீ உடல் வியாபாரம் செய்யறதா?"

"புகார் குடுத்தது யாரு?"

"அதை உனக்கு சொல்ல வேண்டியது இல்லை. நீ அதுமாதிரியான பொண்ணா... இல்லையான்னு விசாரிக்க வேண்டியதுதான் என்னோட ட்யூட்டி!"

"நான் அது மாதிரியான பொண்ணு கிடையாது!"

"சரி... பொலிஸ் ஸ்டேஷனுக்கு வந்து ஸ்டேட்மெண்ட் எழுதி கையெழுத்து போட்டுட்டு போ!"

"ஸ்டேட்மெண்டா? எதுக்கு ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுக்கணும்?"

"நான் அப்பேர்ப்பட்ட பொண்ணு கிடையாதுன்னு ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதி கையெழுத்து போட்டாத்தான் அதை ஒரு ரிக்கார்டா எடுத்துக்குவோம்."

"இன்ஸ்பெக்டர்! திஸ் ஈஸ் டூ மச்!"

"உனக்கு டூ மச்சா படலாம். பட் பொலிஸுக்குன்னு சில ஃபார்மாலிடீஸ் இருக்கு. வாய்மொழி ஸ்டேட்மெண்ட் எதுவும் பொலிஸ் என்கொய்ரியில் இருக்கக்கூடாது. நீ சிரமம் பார்க்காமே ஒரு நடை பொலிஸ் ஸ்டேஷனுக்கு வந்து ஸ்டேட்மெண்ட் எழுதிக் குடுத்திட்டு போயிடு."

"நோ..!"

"நோன்னா?"

"என்னால ஸ்டேஷனுக்கு வர முடியாது. ஸ்டேட்மெண்ட்டும் எழுதிக்கொடுக்க முடியாதுன்னு அர்த்தம்."

ராஜகணேஷ் புன்னகைத்தார்.



"இதோ பாரம்மா... காக்கி யூனிஃபார்மை போட்டுக்கிட்டு வந்து உன்னை நான் விசாரிக்காததுக்குக் காரணம் உன்னைப்பற்றி இந்த ஹாஸ்டல்ல இருக்கிற மத்தவங்க தப்பா நினைச்சுடக் கூடாதேங்கிற எண்ணம்தான் எனக்கு. நீ ஸ்டேஷனுக்கு வந்து இன்னும் ஒரு மணி நேரத்துல ஸ்டேட்மெண்ட் எழுதித் தரணும்; இல்லேன்னா நான் யூனிஃபார்மை மாட்டிக்கிட்டு மறுபடியும் உன்னை ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு போக வர வேண்டியிருக்கும். நீ இன்னும் ஒரு மணி நேரத்துல ஸ்டேஷனுக்கு வரப் போறியா இல்லை... நான் மறுபடியும் யூனிஃபார்மோடு வரட்டுமா?"

சாந்தா இன்ஸ்பெக்டரையே வெறித்துக் கொண்டிருக்க அவர் எழுந்தார்.

"பி ஃபைவ் பொலிஸ் ஸ்டேஷன். சரியா ஒரு மணி நேர அவகாசம்.... ஸ்டேஷனுக்கு வந்துடு!" சொல்லிவிட்டு ராஜகணேஷ் வாசலை நோக்கிப் போக சாந்தா ஆணியடித்த மாதிரி நின்றாள்.

'இது என்ன புதுப் பிரச்சனை?'

'முதலில் நித்தியனுக்கு ஃபோன் செய்து விஷயத்தைச் சொல்ல வேண்டும்!' வேக வேகமாய் டெலிஃபோனை நோக்கிப் போனாள்.

டயலில் எண்ணைத் தட்டியதும் ரிங் போயிற்று. ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ!" வேலைக்காரப் பெண்ணின் பாமரக் குரல்.

"நித்தியன் இருக்காரா?"

"இல்லையே... கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் கம்பெனிக்கு கிளம்பிப் போனார்."

சாந்தா இணைப்பைத் துண்டித்து விட்டு கம்பெனியின் டெலிஃபோன் எண்ணை டெலிஃபோன் கோர் பட்டன்களில் ஏற்றி எடுத்தாள்.

ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது. கம்பெனியின் டெலிஃபோன் ஆபரேட்டர் குரல்.

"எஸ்... ருத்ரா கம்பெனி..."

"மிஸ்டர் நித்தியன் ப்ளீஸ்..."

"அவர் இன்னமும் கம்பெனிக்கு வரலையே?"

"வீட்டுக்கு ஃபோன் பண்ணி கேட்டேன். கம்பெனிக்கு புறப்பட்டு போயிட்டதா சொன்னாங்க..."

"மே... பி.. ஆன்... த.... வே... நீங்க யார் பேசறது? வந்ததும் அவர் கிட்ட சொல்றேன்."

"வேண்டாம்... ஒரு அரைமணி நேரம் கழிச்சு நானே ஃபோன் பண்றேன்."

சாந்தா ரிஸீவரை வைத்துவிட்டு மோவாயை தாங்கியபடி பக்கத்தில் இருந்த பி.வி.சி வர்ண நாற்காலிக்குச் சாய்ந்தாள்.

நேர் எதிர் சுவரில் மாதக் கலண்டர் டிசம்பர் மாதத்தைக் காட்ட நாளைய தேதிக்குக் கீழே பௌர்ணமி என்ற வாசகம் தெரிந்தது.

'நாளைக்கு திட்டமிட்டபடி கல்யாணம் நடக்குமா?'

'இல்லை.... தட்டிப் போகுமா?'

யோசனையில் விநாடிகள் கரைந்து நிமிஷங்கள் உற்பத்தியாகி அரைமணி நேரத்தைக் கரைத்திருந்த போது சாந்தா தயக்கமாய் டெலிஃபோனை தொட்டாள்.

'இந்நேரம் நித்தியன் கம்பெனிக்கு வந்திருக்கலாம்' டயல் செய்தாள். ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ... ருத்ரா கம்பெனி ஹியர்."

"மிஸ்டர் நித்தியன் ப்ளீஸ்..."

"இன்னும் வரலையே... உங்க பேரையும் டெலிஃபோன் நெம்பரையும் சொல்லுங்க... அவர் வந்ததும் உங்களுக்கு போன் பண்ணச் சொல்றேன்."

"வேண்டாம்.... மறுபடியும் நானே ட்ரை பண்றேன்"

ரிஸீவரை வைத்துவிட்டு நெற்றியைப் பிடித்துக்கொண்டாள் சாந்தா.

இன்ஸ்பெக்டர் ராஜ கணேஷ் கொடுத்து விட்டுப் போன ஒரு மணி நேர கெடு வேகவேகமாய் காலாவதியாகிக் கொண்டிருந்தது.

★★★

"சூப்பர்" என்றாள் விசாலி. உதட்டில் சின்னதாய் ஒரு விசில் பிறந்தது. கையில் ஒரு அடி சதுரப் பரப்பில் நீலநிற வெல்வெட் உடம்போடு கல்யாணப் பத்திரிகையின் டிசைன்.

விஜயராகவன் கேட்டார்,

"என்னம்மா... அழைப்பிதழை இதே டிசைனில் ப்ரிண்ட் பண்ணிடலாமா?"

"எனக்கு ஓ.கே."

"லெட்டர்ஸ் கோல்ட் ஃபாயிலில் இருக்கலாமா... இல்லை சில்வரா?"

"கோல்ட் பாயில்... பத்திரிகையோட ஃப்ரண்ட்ல என்னோட போட்டோவும் அவரோட போட்டோவும் பக்கத்து பக்கத் துல இருக்கிற மாதிரி பிரிண்ட் பண்ணனும்!"

"மாப்பிள்ளையோட போட்டோ இல்லையேம்மா!"

விசாலி. சிரித்தாள்.

"ஃபோன் பண்ணிச் சொன்னா... அவரே கொண்டு வந்து குடுத்துட்டு போவார்."

"அதெல்லாம் மரியாதை கிடையாது விசாலி. இன்னிக்கு சாயந்தரம் நானே போய்க் கேட்டு வாங்கிட்டு வந்துடறேன்."

விஜயராகவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் கார் ஹார்ன் சத்தம் கேட்டது.

விசாலி யன்னல் வழியாய் எட்டிப் பார்த்துவிட்டு "அடடே" என்றாள்.

"யாரும்மா?"

"மாமா" சொல்லிவிட்டு போய் கதவைத் திறந்தாள்.

புன்னகையோடு ருத்ரமூர்த்தி.

"வாங்க... சம்பந்தி.... உங்களுக்கு ஆயுசு நூறு. இப்பத்தான் உங்களைப் பத்தி பேசிட்டிருந்தோம்..."

ருத்ரமூர்த்தி உள்ளே வந்தார்.

"என்ன விஷயமா?"

"ப்ரிண்ட் பண்ணப் போற கல்யாணப் பத்திரிகையில் உங்க சன் நித்தியனோட ஃபோட்டோவும் விசாலியோட ஃபோட்டோவும் இடம் பெறணும்னு விசாலிக்கு ஒரு ஆசை. மாப்பிள்ளையோட ஃபோட்டோ வேணுமேன்னு பேசிட்டிருக்கும்போது நீங்களே வந்துட்டீங்களே."

ருத்ரமூர்த்தி சோபாவுக்கு சாய்ந்து கொண்டே புன்னகைத்தார்.

"விசாலி ஆசைப்பட்டதை நான் கையோடு முடிச்சுக்கிட்டே வந்துட்டேன்!"

"என்ன சொல்றீங்க சம்பந்தி?"

"நித்தியனோட ஃபோட்டோவையும் விசாலியோட ஃபோட்டோவையும் போட்டு நான் அழைப்பிதழையே ப்ரிண்ட் பண்ணிக்கொண்டு வந்துட்டேன். ப்ரிண்டர்ஸிலிருந்து நான் வீட்டுக்குக் கூட போகலை. நேரா இங்கேதான் வர்றேன்."

ருத்ரமூர்த்தி சொல்லிக் கொண்டே தான் கையோடு கொண்டு போயிருந்த ப்ரீப் கேஸைப் பிரித்து அழைப்பிதழ் கட்டு ஒன்றை எடுத்து வெளியே போட்டார்.

பத்திரிகையின் முகப்பிலேயே நித்தியனும் விசாலியும் ஃபோட்டோக்களில் நேர்பார்வை பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

(பௌர்ணமி தொடரும்)

---

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

**25**

**ராஜையா**



"கிழக்குகரை எங்களுக்குத்தான் சொந்தம். விட்டுக்கொடுக்க மாட்டோம்." என்றது அது. ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்த ஏழாவது நாள், கிழக்குக் கரையை கைப்பற்ற இராணுவத்துக்கு சதாம் உத்தரவிட்டார்.

ஈராக் போர் விமானங்கள் ஈரானுக்குள் ஊடுருவிக் குண்டு மழை பொழிந்து யுத்தத்தைத் தொடங்கி வைத்தன.

சிறிவயதில் இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேர போதிய மார்க்குகள் இல்லையென்று கூறி இடம் மறுக்கப்பட்ட சதாம், தானே முன்னின்று இந்த யுத்தத்தை நடத்தினார்.

அவரது இராணுவ நடவடிக்கைகளும், இராணுவத்தினரை அவர் களத்தில் துணிச்சலுடன் சந்தித்து உற்சாகப்படுத்தும் காட்சிகளும் ஈராக் டெலிவிஷனில் காட்டப்பட்டன..

ஈரான்-ஈராக் யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. அப்போது இன்னொரு நாடு திடீரென தன்னை வம்புக்கு இழுக்கும் என்று சதாம் எதிர்பார்க்கவில்லை.

யாரும் எதிர்பார்க்கவில்லை...

எல்லாம் சில நிமிடங்களுக்குள் முடிந்துவிட்டது.

அதை நினைக்கையில் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது சதாமுக்கு...!

1981 ஜூன் 7ம் தேதி. ஞாயிற்றுக்கிழமை. அந்திப் பொழுது. பாக்தாத் நகர மேற்கு வானத்தில் செந்நிறம் படர்ந்திருந்தது. வெம்மை தணிந்த கதிர்களுடன் சூரியன் மெல்ல மெல்ல விடைபெற்றுக் கொண்டிருந்தான்.

இத்தனை ரம்மியமான சூழ்நிலையைச் சிதைக்கிற மாதிரி வானத்தில் திடீரென இடி முழக்க ஓசை...

இஸ்ரேலின் நவீன போர் விமானங்கள் கூட்டமாய்...!

பாக்தாத் நோக்கி மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்தன.

ஏனிவை...? இப்படி..? என்று நிதானிப்பதற்குள் அவை பாக்தாத் புறநகரிலிருந்த 'ஒசிராக்' அணு உலையை சரமாரியாகக் குண்டு வீசித் தாக்கி, தவிடு பொடியாக்கி அழித்து விட்டு நிமிடத்தில் மாயமாய் மறைந்து விட்டன.

ஈரானுக்கெதிரான போரில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சதாம் இதையறிந்து அதிர்ச்சியடைந்தார்.

இஸ்ரேல் விமானங்கள் தாக்கி அழித்தது அணு உலையை அல்ல; சதாமின் நெடுநாள் கனவை!

பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக்கொண்டு அட்டகாசம் செய்துவரும் இஸ்ரேல், ஏற்கனவே அதிக சக்தி வாய்ந்த அணுகுண்டுகளை தயாரித்து வைத்திருக்கிறது. ஆனால் இஸ்ரேலை எதிர்க்கும் அரபு உலகத்தில் எந்த நாட்டிலும் அணுகுண்டு மருந்துக்குக்கூடக் கிடையாது. அதனால்தான் இஸ்ரேல் தனது அண்டை அரபு நாடுகளை அடாவடித்தனமாக மிரட்டிக் கொண்டிருக்க முடிகிறது...

இஸ்ரேலை மிரட்டி, பாலஸ்தீனத்தை விடுவிக்க வேண்டுமானால் நம்மிடமும் அணுகுண்டு இருக்க வேண்டும் என்பது சதாமின் நெடுநாள் கனவு.

இந்தக் கனவை நனவாக்க 1976ல் அவர் துணை ஜனாதிபதியாக இருக்கையில் பாரீஸ் சென்றார். பிரெஞ்சு அரசுடன் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தினார். 'இதன் விளைவாக ஈராக்குக்கு அணு உலையையும், தொழில் நுட்ப உதவியையும் விலைக்குக் கொடுக்க ஃபிரான்ஸ் முன்வந்தது.

இராணுவ ரீதியில் தன்னளவுக்கு வேறு எந்த அரபு நாடும் பலம் பெற்று விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்த இஸ்ரேல், பாக்தாத்தில் ஃபிரான்ஸ் தொழில் நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்ட அணு உலையைத்தான் திடீர் தாக்குதல் மூலம் நிர்மூலமாக்கி விட்டது.

தொழில் நுட்ப உதவி செய்ததாலும், ஸ்தலத்திலிருந்த பிரெஞ்சு இன்ஜினியர் ஒருவர் உயிரிழந்ததனாலும் இஸ்ரேலியன் தாக்குதலை பிரான்ஸ் வன்மையாகக் கண்டித்தது.

இது சதாமுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. ஆனால் அந்த ஆறுதல் நீடிக்கவில்லை...

காரணம்-

தாக்குதல் நடத்துவதற்கு முன் இஸ்ரேல் தன் திட்டத்தை பிரான்ஸ் அதிபர் மிட்டரான்டுக்கு தெரிவித்து விட்டுத்தான் தாக்குதல் நடத்தியிருக்கிறது. அப்போது பிரான்ஸ் அதிபர் இஸ்ரேலின் திட்டத்தை ஆட்சேபிக்கவோ, அல்லது அதுபற்றி சதாமிடம் சொல்லி உஷார்ப் படுத்தவோ இல்லை என்று விவரம் பின்னால் சதாமுக்குத் தெரிய வந்தது.

ஃபிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் இரட்டை வேடம் கண்டு ஏற்கனவே குமுறிக் கொண்டிருந்த சதாமுக்கு இந்நிகழ்ச்சி மேலும் மனஉறுதியை ஏற்படுத்திவிட்டது. அணுகுண்டு தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர் கைவிடவில்லை...

'அணுகுண்டு தயாரித்தே தீரணும், இஸ்ரேல் நம்நாட்டுக்குப் பக்கத்துல இல்லாட்டி என்ன? நாடு விட்டு நாடு பாயும் ஏவுகணைகளையும் நாமே தயாரிக்கணும். தொழில் நுட்ப உதவிக்காகக் கூட எந்த பணக்கார நாட்டையும் சார்ந்திருக்கக் கூடாது. முயற்சி பண்ணினா நம்மால் முடியாதா? ஹே.... இஸ்ரேல்...! எனக்கொருகாலம் வரும். அன்னிக்கி நான் குட்டக்குட்ட நீ குனிவாய்! உன் கொட்டம் ஒடுங்கும்...?"

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மச்சம்

சுபா

## 14

ஓடக்கரை.

சிம்னி விளக்கு படபடத்துக் கொண்டிருந்தது. அம்மாவின் கையை மடியில் வைத்துத் தடவிக் கொண்டிருந்தான் ஷிவா.

"ஷிவா... நீ தூங்கவில்லை?"

"தூக்கம் வரவில்லை, அம்மா!" அவளுடைய விரல்களை ஒவ்வொன்றாக உருவி விட்டான். "தனியாக இருக்கப் போகிறாயே என்று நினைத்தாலே கஷ்டமாயிருக்கிறதம்மா..."

"தனியாக இருந்து நிறையப் பழகிவிட்டேன் ஷிவா! அப்பா ஆர்மியில் இருந்தபோது, சின்னக் குழந்தைகளோடு தன்னந்தனியே எத்தனை நாள் இருந்திருக்கிறேன்! 'அம்மா அம்மா' என்று உருகிக்கொண்டிருந்த சீனுவும் போய் விட்டான். நீயும் ஒருநாள் போகத்தான் போகிறாய்." அம்மா அவன் விரல்களை எடுத்து கன்னத்தில் அழுத்திக்கொண்டாள்.

"நர்மதா இருக்கிறாளே, ஷிவா. தினமும் இரண்டு தடவை என்னைப் பார்க்க வருகிறாள். புத்தகம் படித்துக் காட்டுகிறாள். உன்னை எதிர்பார்க்க முடியுமா, நான்? இந்த ஊருக்காக உன்னைக் கொடுத்து விட்டேன்!"

"கைலாஷைப் போல நான் திரும்பி வராமலே போய்விட்டால் கூட வருத்தப்பட மாட்டாயா அம்மா?"

"எதற்காக வருத்தம், ஷிவா? சூதாடப் போகிறாயா? குடித்து சாக்கடையில் புரளப் போகிறாயா? பாங்கைக் கொள்ளையடித்து வரப்போகிறாயா? இல்லையே. நமக்காகப் போகிறாய். இந்தக் குடும்பத்தில் எல்லோரும் அப்படித்தான் போயிருக்கிறார்கள். நீ திரும்பி வந்தால் சந்தோஷமாயிருக்கும். வரா விட்டால் வலிக்கும். ஆனாலும் இந்த வலி தித்திப்பாய்த்தான் இருக்கும். நர்மதா தான் ஒடிந்து போய்விடுவாள்."

"அவளுக்கு நீதாம்மா ஆறுதல்!"

"அவளிடம் சொல்லி விட்டாயா, ஷிவா?"

●●●

நர்மதா கொஞ்ச நேரம் அவன் தோளில் புரண்டு அழுதாள்.

"ஊரில் எத்தனை பேர் இருக்கிறார்கள். தேவ் ஏன் உங்களை மட்டும் இதற்கு செலக்ட் பண்ண வேண்டும்?"

"அபத்தமாய் இருக்கிறது நர்மதா, உன் கேள்வி. கைலாஷ் என்று ஒருத்தன் என்னைவிட ஒரு வயது சின்னவன், இதே ஊரில் இருந்தானே, ஞாபகம் இருக்கிறதா நர்மதா?"

"ஷிவா.... நான் எப்படி இருக்கப் போகிறேன்!"

"எனக்காக ஒரு நிமிஷம் கண்மூடி இருந்துவிட்டு, மனதிற்குப் பிடித்த இன்னொருத்தனை நீ கல்யாணம் பண்ணிக் கொள், நர்மதா?"

"ஷிவா!"

"பிராக்டிக்கலாகப் பேசுவது தப்பில்ல... உணர்ச்சிகளால் ஒரு பாசாங்கு நிம்மதிதான் கிடைக்கும். செயல்களில் கோட்டை விட்டுவிடுவோம். நாம் பிராக்டிக்கலாக இருப்போம்."

"எனக்கு இந்தப் பேச்சுப்பிடிக்கவில்லை."

"இந்த பிளவுஸை டைலர் ஏன் இவ்வளவு ஆழமாகத் தைத்தான் என்பது பற்றிப் பேசுவோமா? இல்லை இடுப்பில் இந்த இடத்தில் மட்டும் ஏன் இப்படி பளபளவென்று வியர்க்கிறது என்று பேசுவோமா? அல்லது இங்கே மட்டும்..."

"அங்கெல்லாம் நோ டச்சிங்... ப்ளீஸ்..."

"எங்கேயெல்லாம் யெஸ் டச்சிங் ப்ளீஸ்?"

"போங்கள் ஷிவா!" என்று நர்மதா அவன் மடியில் சாய்ந்தாள். ஷிவா அப்படியே குனிந்து அவள் முதுகில், பின் கழுத்தில் பிடரியில் என்று உதடுகளைப் பதித்து சிலிர்க்க வைத்தான்.

❣ ❥ ❤

ஓடைத் தண்ணீர் சிலீர் என்றிருந்தது. தேவேந்திரன் ஒற்றைக் காலை நனைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். நிலா வெள்ளித்தகடாக நீரில் மின்னிக் கொண்டிருந்தது. தண்ணீரில் முழ்கி, கழுத்துக்கு மேலே மட்டும் நீட்டியிருந்த ஷிவா, ஈரத்தலையைச் சிலுப்பிக் கொண்டான்.

"தேவ்... நாளைக்கு நான் சென்னை கிளம்புகிறேன், விமானப் பயிற்சியைத் தொடர..."

"நான் டில்லி போகிறேன். சில ஏற்பாடுகளைச் செய்ய... வெளியூர் போவதாக இருந்தால் எங்கே போகிறோம், எத்தனை நாள், எதற்காக என்று பொலிஸில் சொல்ல வேண்டும் என்று முட்டாள்தனமாக ஒரு ரூல் போட்டிருக்கிறார்கள். அதனால்தான் யோசிக்கிறேன்."

"சுதந்திர நாட்டில் பொதுமக்களுக்கு இந்த மாதிரி நிபந்தனையெல்லாம் போடலாமா தேவ்?"

"கூடாது. அதனால்தான் சட்டசபையில் கூட இதுபற்றி விவாதம் நடந்தது. அமைச்சரின் செக்யூரிட்டி சீஃப் மோகனன் கொஞ்சம் ஸ்ட்ரிக்டாக ஒரு வாரத்திற்கு இருக்கச் சொல்லியிருக்கிறாராம். ஒரு வாரம் முடியப் போகிறது. இத்தனை பொலிஸ் இங்கே சும்மா பெஞ்சைத் தேய்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. எப்படியும் நாளைக்கு காவல் பிசுபிசுத்து விடும். அப்புறம் பிரச்சனை இருக்காது. நான் புறப்பட்டு விடுவேன். ஏற்கனவே என் நண்பன் மூலம் சில ஏற்பாடுகள் செய்து விட்டேன்."

"ஜலால் என்று சொன்னாயே, அவனா தேவ்?"

"ஆமாம். முதல் கட்ட நடவடிக்கையை ஜலால் கவனித்துக் கொள்வான். அதற்கப்புறம்தான் உன் முகத்துக்கு ஆபத்து இருக்கிறது."

தேவேந்திரன் சற்றுக் கவலையோடு சொன்னபோதுகூட, ஷிவா சிரித்துக் கொண்டே தண்ணீருக்குள் மூழ்கினான்.

▫▫▫

புதுடில்லி.



ஜ்யோதி திடுக்கிட்டு எழுந்தாள். உடனே விளக்கைப் போட்டாள். பக்கத்தில் படுத்திருந்த அரவிந்தின் முகத்தை இரண்டு கைகளாலும் வருடிக் கொடுத்தாள்.

"அரவிந்த்... உனக்கு ஒன்றுமில்லையே?"

அரவிந்த் சோம்பலாகக் கண்களைத் திறந்தான். "என்ன ஹனி, திடீரென்று?" என்றான், கொட்டாவி கலந்து.

"உனக்கு ஏதோ ஆகிவிட்டது போல் கனவு கண்டேன், அரவிந்த்."

"சரியான லூஸுப் பெண்டாட்டியாகி விட்டாய். குளித்துக்கொண்டிருக்கும்போது, கதவைத் தட்டி முகத்தைக்காட்டு என்கிறாய். தூக்கத்தில் எழுப்பி தடவிப் பார்க்கிறாய். அமைச்சரைக் கொல்ல சதி செய்து நடந்த தாக்குதல் உன்னை மிகவும் பாதித்துவிட்டது. நான் வெறும் டிரைவர்... என்னை யாரும் தாக்க மாட்டார்கள்."

"எனக்கு பயமாக இருக்கிறது அரவிந்த்..."

"ஒழுங்காகத் தூங்கப் போகிறாயா, இல்லை நான் கட்டிலுக்குக் கீழே இறங்கிப் படுத்துக் கொள்ளட்டுமா?" என்றான் குறும்பாக.

"போடா... உனக்கு என் கவலை புரியவேமாட்டேன் என்கிறது."

"நாளைக்கும், நாளன்னைக்கும் இருபத்து நாலு மணி நேரமும் உன் முந்தானை நிழலில்தானே இருக்கப் போகிறேன். அப்புறம் எனக்கு என்ன நடந்துவிடப்போகிறது? கம்மான், கொஞ்சம் தூங்கவிடு... விளக்கை அணை. கண்ணை உறுத்துகிறது," ஜ்யோதியின் உதடுகளை வருடிச் சொன்னான், அரவிந்த்.

ஜ்யோதி அவன்மீது கையையும் காலையும் போட்டு அணைத்துக் கொண்டு பெருமூச்சுக்களோடு மெல்ல மெல்ல தூக்கத்தில் அமிழ்ந்து போனாள்.

♠ ♠ ♣

பீங்கான் கோப்பையில் வந்திருந்த பீரை ஒரே மூச்சில் குடித்தான் விக்ரம். ஆம்லெட்டை முள் கரண்டியால் குத்திக்கிழித்தான். எதிரே நிழலாடியது.

"நான் இங்கே உட்காரலாமா?" என்று கேட்டவனுக்கு நசுங்கிய மூக்கு. கண்களுக்குக் கீழ் இருட்டு. முகவாயில் முக்கோணத் தாடி. புகைபடிந்த பற்கள்.

"ஏன்? எவ்வளவோ நாற்காலிகள் காலியாகத்தானே இருக்கிறது?"

"ஆனால் வேறெங்கு உட்கார்ந்தாலும் உங்களுடன் தனிமையில் பேச முடியாதே!" வந்தவன் அனுமதிக்குக் காத்திராமல் எதிர் நாற்காலியில் உட்கார்ந்தான். இருவருக்கும் பீர் ஆர்டர் செய்தான். இருவருக்கும் சிகரெட்களைப் பற்ற வைத்தான்.

"என்னிடம் பேச உனக்கு என்ன விஷயம் இருக்கிறது?"

"முதலில் பீர் சாப்பிடுங்கள், விக்ரம்."

"என் பெயர் உனக்குத் தெரியுமா?"

"உங்கள் பெயர் தெரியும். சண்டிகர் காலேஜில் நீங்கள் தங்க மெடல் வாங்கியது தெரியும். கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் பத்து விக்கெட்டுக்களை வீழ்த்தியது தெரியும். கராத்தே கற்றுக்கொண்டது தெரியும். காதலில் தோல்வி கண்டது தெரியும்!"

"யார் நீ?"

"உங்கள் நண்பன். உங்களுக்கு உதவ வந்திருப்பவன்."

"பெயர் என்ன?"

"ஜலால் என்று வைத்துக்கொள்ளுங்கள்."

"இதற்கு முன் உன்னை நான் சந்தித்ததேயில்லை. திடீரென்று முளைக்கிறாய். உங்களுக்கு உதவ வந்தேன். என்கிறாய். நமக்குள் பொதுவான விஷயம் கிடையாது, பேசுவதற்கு."

"இருக்கிறது. பொதுவான விஷயம் இருக்கிறது."

"என்ன அது?"

"அரவிந்த்" என்றான் ஜலால்.

★★★

**1903** டிசம்பர் 17-ப்ளையர் 1-ரைட் சகோதரர்கள்- 12 விநாடிப் பயணம்.

புஸ்மோத், லெப்போர்டுமோத் டி.எச்.86, டி.எச்.89, ஸ்கை மாஸ்டர், சூப்பர் கான்ஸ்டெலேஷன், போயிங் 707, போயிங் 747, ஜம்போ ஜெட்.

காக்பிட், எய்லிரான், பெட்ரோல் டாங்க்ஸ், எலிவேட்டர், ஸ்டெபிலைஸர், அண்டர் காரியேஜ், ஆல்டி மீட்டர், ஜெனரேட்டர், புரொபல்லர், லாக்புக், பிளாக் பொக்ஸ், டர்ன் அண்ட் பேங்க் இண்டிக்கேட்டர்.

துணுக்குச் செய்திகளாக விமானம் பற்றி மறுபடி மறுபடி ஷிவாவின் மூளைக்குள் தகவல்கள் ஓடிக்கொண்டேயிருந்தன.

கண்ணை மூடினால் அவன் காக்பிட்டில் உட்கார்ந்திருந்தான். டேக்ஆஃப் ஃப்ளைலோ. லாண்டிங் என்று விமானத்தில் உட்கார்ந்திருப்பது போலவே அவனுக்குள் உணர்வு எழுந்தது.

பயிற்சி மும்முரமாக, மும்முரமாக மீண்டும் மீண்டும் விமானம் அவன் மூளைக்குள் பறந்து கொண்டிருப்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

குப்புறப்படுத்து வலுக்கட்டமாயமாக கண்களை மூடிக்கொண்டு தூங்காமலேயே, பல இரவுகளைக் கழித்தான். பயிற்சி முடியும் தினத்திற்காகக் கனவுகளுடன் காத்திருந்தான்.

(○–வரும்–○)

### இதுவரை

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு இறக்கிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
அமைச்சரை கொலை செய்ய
செல்லும் கைலாஷ்
மாட்டிக்கொள்கிறான்.
மின்சார வயரைப் பிடித்து
தற்கொலை செய்கிறான்.
அடுத்தத்திட்டம் தயாராகிறது.

இனி...

---

கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

# கவியரசுவின் சுயசரிதை

## 33

லாயிட்ஸ் ரோடில் நடைபெற்ற பொதுக்குழுவில் அண்ணாத்துரை பொதுச் செயலாளரானதை சம்பத் ஒப்புக்கொண்டதும் அதுவரை பொதுக்குழு உறுப்பினராய் இல்லாத அவனை நியமன உறுப்பினராக்க அண்ணாதுரை சம்மதித்திருந்தார்.

'திராவிட நாட்'டில் கட்டுரை வெளியாவதற்கு சில வாரங்களுக்கு முன்பே பொதுக்குழு உறுப்பினராக அவன் நியமிக்கபட்டிருப்பது பற்றி 'நம் நாட்'டில் அறிக்கை வந்துவிட்டது. ஆகவே வேலூரில் நடைபெறப் போகும் பொதுக்குழுவில் அவன் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று சம்பத் கூறினார். குழு கூடுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு சம்பத் வீட்டில் மதியழகன், ராஜாராம், ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ., எம்.பி. சுப்பிரமணியன் எம்.எல்.ஸி., ஆர்.எஸ். பாண்டியன், பொன்னுவேல், கண்ணப்பா வள்ளியப்பன், அவன் ஆகியோர் கூடி பத்துக்கு மேற்பட்ட தீர்மானங்களைத் தயாரித்தார்கள். அந்தத் தலைவர்களுக்கு வயிற்றுப் பிழைப்புப் போய் விடும். அவ்வளவு பயங்கரமானவையாக அவை இருந்தன.

தீர்மானங்கள் தயாரிப்பதில் சம்பத் கைதேர்ந்தவர். முறையற்ற தலைவர்களை தீர்மானங்கள் மூலமே அவர் சித்திரவதை செய்வார். லாயிட்ஸ் ரோடு பொதுக்குழு நடப்பதற்கு முன் நடைபெற்ற மாயவரம் பொதுக் குழுவில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அண்ணாதுரையையும் கருணாநிதியையும் அலற வைத்தவர் அவர். அந்தப் பழைய குழுவில் அவனும் தேர்ந்தெடுக்கப்பட்ட



உறுப்பினனாக இருந்தான். கட்சியின் செயலாளர், பொருளாளராக இருக்கிறவர்கள் எம்.எல்.ஏ. ஆகவோ எம்.பி. ஆகவோ ஆகக் கூடாதென்றும் அப்படி ஆனால்-கட்சியில் வகிக்கின்ற பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட வேண்டும் என்றும் கூறிய அந்தத் தீர்மானம் பலத்த விவாதத்துக்குப் பிறகு–தீர்மானமாக இல்லாமல் சம்பிரதாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆகவே-இந்தத் தடவை வேலூர்ப் பொதுக்குழுவுக்கு தீர்மானம் தயாரிக்கிறார் என்றால்–அது கண்டிப்பாகப் பரபரப்பை உண்டு பண்ணும் என்பது அவனுக்குத் தெரியும். சில தீர்மானங்களில் அவனும் கையெழுத்து இட்டான். அத்தனை தீர்மானங்களும் உடனே பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டன. அவனது இல்லத்தில் தீர்மானத்தில் கையெழுத்திட்டவர்கள் கூடி யார் யார் எந்தெந்தத் தீர்மானங்கள்மீது பேசுவது என்று முடிவு கண்டார்கள்.

சம்பத்தின் ஆதரவாளர்கள் எல்லாம் வேலூர்ப் பொதுக்குழுவில் இந்தத் தீர்மானங்களை விவாதிப்பது பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியாமலேயே கருணாநிதி இரகசியமாக ஒரு வேலை செய்து கொண்டிருந்தார்.

பொதுக்குழுவில் பெரும் ரகளை செய்வது என்ற முடிவு கட்டி அண்ணாதுரையின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டு மேல்மட்டத்தில் இருந்த அண்ணாதுரையின் ஆதரவாளர்களுக்கெல்லாம் தெரிவித்து விட்டு, மற்றப்பொதுக்குழு உறுப்பினர்களை ஊர்ஊராகப் போய்ச் சந்தித்து ஒவ்வொருவரையும் தயார் செய்து, உறுப்பினர் அல்லாத அடியாட்கள் சிலரையும் ஏற்பாடு செய்து கொண்டு பல கார்களில் எல்லோரையும் ஏற்றி முதல் நாளே வேலூருக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டு-தானும் அங்கேயே வந்து விட்டார்.

இந்த ரகளைக்கு அண்ணாத்துரையும் கருணாநிதியும் திட்டமிட்டிருந்தது சம்பத் கோஷ்டியினரில் யாருக்குமே முன்கூட்டித் தெரியாது. அவ்வளவு இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அதை முதல் நாளே தெரிந்து கொள்வதற்கு சம்பத் குழுவினருக்கு ஒரு வாய்ப்பு இருந்தது. அப்போது சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளராக இருந்த தோழர் தி.மணிவண்ணன் அவர்களை ஒரு நடிகருடைய கார் அவருடைய தேனாம்பேட்டை வீட்டுக்கு அழைத்துச் சென்றது. அங்கே நடிகர்களும் அவர்களது ஸ்டண்ட் கோஷ்டியினரும் அவரைத் தங்களோடு சேரும்படியும் இல்லையென்றால் பயங்கரங்கள் நடக்குமென்றும் மிரட்டினார்கள். மணிவண்ணன் அதற்கு மசியவில்லை. உடனே அதுவரைக்கும் அங்கே தோன்றாதிருந்த அண்ணாதுரை அடுத்த அறையிலிருந்து அந்த அறைக்குள் நுழைந்தார். மணிவண்ணனை மாற்ற எவ்வளவோ முயன்றார். அதற்கும் மணிவண்ணன் மயங்கவில்லை, உடனே "அப்படி என்றால் இப்பொழுதே எங்களுடைய காரிலேயே நீ வேலூருக்கு வா!" என்று அண்ணாதுரை அழைத்தார். அவருடைய பேச்சிலிருந்தும் அங்கு நிலவிய சூழ்நிலையிலிருந்தும் மறுநாள் வேலூரில் கலவரம் நடத்த ஏற்பாடாயிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்ட மணிவண்ணன், "வீட்டுக்குப் போய்ச் சொல்லிவிட்டு வேட்டி சட்டை எடுத்து வருகிறேன்!" என்று கூறினார். "போவதென்றால் எங்கள் காரிலேயே போ!"–என்று தங்கள் காரைக் கொடுத்து நடிகர்கள் அவரை அனுப்பினார்கள். தன் வீட்டுக்குச் சென்ற மணிவண்ணன் பக்கத்து வீட்டிற்குள் நுழைந்து டெலிபோனில் சம்பத்தைக் கூப்பிட்டார். ஆனால் அதற்குள்ளாக அத்தனைபேரும் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். பிறகு அவர் சம்பத்தின் துணைவியாரிடம் "வேலூருக்கு நம்முடையவர்கள் ஜாக்கிரதையாகப் போகவேண்டும். நான் சிக்கிக்கொண்டிருக்கிறேன்!"– என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டார். அந்தச் செய்தி சம்பத் குழுவினரில் யாருக்கும் கிடைக்கவில்லை.

வேலூருக்குப் போய் அங்கிருந்த சூழ்நிலையைப் பார்க்கிறவரை அவனுக்கும் அது தெரியாது. அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு அவன் வேலூருக்குச் சென்றான். பொதுக்குழு நடைபெற இருந்த ஒரு கட்டடத்திற்கு அவன் சென்றான். அன்றைக்குக் காலையில்தான் செயற்குழுக் கூட்டம். மாலையில்தான் பொதுக்குழு. செயற்குழுவில் அவன் இல்லை!

செயற்குழு வேறொரு இடத்தில், ஒரு பீடி முதலாளியின் கட்டடத்தில் நடந்து கொண்டிருந்தது. மாலையில் பொதுக் குழு நடக்க இருந்த கட்டடத்திற்குத்தான் அவன் சென்றான். சகஜமாகவே உள்ளே சென்றான். தன்னை எல்லோருமே விரோதியாகப் பாவிப்பார்கள் என்று அவன் எண்ணவே இல்லை.

(சரிதம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# அவசர செய்தி

பல்கலைக்கழக பெண்கள் விடுதி விடிந்தபின்னுங் கூட பரபரப்பின்றி அமைதியாகவே இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை- விரிவுரைகள் இல்லாததனால் மாணவிகள், விடிந்தும் நீண்டநேரம் தூங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் வேணி வழமை போலவே நேரத்துடன் எழுந்துவிட்டாள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டில் கற்றுக்கொண்டிருக்கும் வேணிக்கு பரீட்சையைச் சந்திப்பதற்கான நாள் நெருக்கமாகிக் கொண்டிருந்தது. அதனால் நேரத்துடன் எழுந்தவள் நூலகத்தில் எடுத்த புத்தகத்தைப் படிப்பதற்காக விரித்தாள். அப்போது அதற்குள்ளிருந்த கடிதம் எட்டிப் பார்த்தது.

கடந்த வாரம் அவளது தாயிடமிருந்து வந்த அந்தக் கடிதத்திற்கு அவளால் இன்னமும் பதிலெழுதப்படவில்லை. படிப்பதை ஒத்திப்போட்டுவிட்டு பதில் எழுத முற்பட்டாள். கடிதத்தை எப்படி ஆரம்பிப்பது, என்ற குழப்பம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

கடிதம் வந்ததிலிருந்து அதில் பதிக்கப்பட்டிருந்த சில வரிகள் அவள் நினைவில்



அடிக்கடி எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தன.

"உன்னைப் பெண்கேட்டு ஒரு சம்பந்தம் வந்தது. எங்கள் எல்லோருக்கும் அந்தச் சம்பந்தத்தைச் செய்வதில் பூரண சம்மதம். நீ சோதினை முடிச்சு இன்னும் இரண்டு மாதத்திலை இங்கு வந்து விடுவாய்தானே? அப்போது எல்லா விபரங்களையும் உனக்குக் கூறுகிறோம்!"

அம்மா, சகோதரங்கள் இந்தச் சம்பந்தத்தையே அவளுக்குப் பேசி முடிப்பதில் அக்கறையுடனும் சந்தோசத்துடனும் இருப்பதை கடிதம் அவளுக்குச் சொல்லியது. வேணிக்கு இதில் துளிகூட விருப்பமில்லை. ஆனால் குடும்பத்தினரின் ஆர்வத்தையும் விருப்பத்தையும் மீறி திருமணம் வேண்டாம் என்று எப்படி எழுதுவது, என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

வேணி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு ஆறு வயதிருக்கும்போது அவளது அப்பா சுகயீனம் காரணமாக இறந்துவிட்டார். அதனால் தாயினதும் சகோதரங்களினதும் அன்பிலும் அரவணைப்பிலும் அவள் செல்லமாக வளர்ந்தாள். ஆனால் பதினொரு வயதிலிருந்தே அந்த அன்பிலும் அரவணைப்பிலிருந்தும் அவள் தூரமாக்கப்பட்டாள்.

ஐந்தாம் வகுப்பில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று யாழ் நகர பிரபல பாடசாலை ஒன்றில் சேர்க்கப் பட்டதுடன் அப்பாடசாலை விடுதியிலேயே தங்கிப்படிக்க வேண்டிய நிலை வந்தது. வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையில் பல கிலோமீட்டர் தூரம் இருந்தமையினால் பாடசாலை விடுமுறைகளுக்கு மட்டுமே வீட்டுக்குச் செல்வாள்.

உயர்தரம் வரை பாடசாலை விடுதியிலேயே பெரும் பகுதி காலத்தைக் கழித்துவிட்ட வேணி, இடையில் சில காலம் வீட்டில் இருந்தாள். மீண்டும் பல்கலைக்கழக விடுதியிலே தனது காலத்தைக் கரைத்துக் கொண்டிருந்தாள்.

வேணி பல்கலைக்கழக அனுமதி பெற்று கண்டிக்கு வந்த இருவருடங்களின் பின் யாழ் குடாவில் இடம்பெற்ற இராணுவ முற்றுகையால் இடம் பெயர்ந்த அவளின் தாய், சகோதரங்களின் குடும்பங்கள் எல்லோரும் 'அகதிகள்' என்ற முத்திரையுடன் இப்போது வன்னிப் பிரதேசத்தில் வசித்து வருகின்றனர்.

பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது வீட்டுக்குச் சென்று வருவாள். ஆனால் பல்கலைக்கழகம் வந்ததிலிருந்து வீட்டுக்கு அடிக்கடி போய் வரக்கூடிய நிலையில் நாடு இருக்கவில்லை.

யாழ் ஒரு பிரதேசமாகவும் வன்னி ஒரு பிரதேசமாகவும் ஏனையவை வெவ்வேறு பிரதேசங்களாகவும் துண்டுபட்டுப் போயிருந்தமையால், ஓரிடத்திலிருந்து இன்னோர் இடம் செல்வது கல்லில் நாருரிப்பது போன்ற விடயமாகவே இருந்து வருகின்றது. அதனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அவள் குடும்பத்தினரைச் சந்திக்காமலேயே இருக்கின்றாள்.

வன்னியிலிருந்து பிற இடங்களுக்கோ அல்லது பிற இடங்களிலிருந்து வன்னிக்கோ தொடர்பு கொள்வதற்கு கடிதம் ஒன்றே வழியாக இருந்தது. அதுவும் அனுப்பப்பட்டு பல மாதங்களின் பின்பே உரியவர்களிடம் வந்து சேரும். அவசரச் செய்தி என்ற ஒன்றே வன்னி மக்களுக்குத் தெரியாது காரணம் அவசரச் செய்தி அனுப்புவதற்கு உரிய வழி எதுவும் அங்கில்லையே!

படித்து முடித்தவுடன் திருமணப் பந்தத்தினுள் புகுந்துகொண்டால், தாய் சகோதரங்களினது பாசத்தை திருப்தியாக அனுபவிக்காத பிறவியாக வாழவேண்டி வந்துவிடுமே! என்ற எண்ணந்தான் அவள் திருமணத்தில் விருப்பங்கொள்ளத் தடையாக இருந்தது.

தாய், சகோதரங்களின் பாசங்களை, நினைவு தெரிந்த நாளிலிருந்தே அருகிலிருந்து அனுபவிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவளைச் சுட்டுக் கொண்டிருந்தது.

படித்து முடிய ஒரு வேலையைத் தேடிக்கொண்டு இரண்டு வருடங்களாவது தாயுடன் சேர்ந்து வாழ்ந்த பின்பே திருமணம் புரிவது என்று ஏற்கனவே எடுத்துவைத்த முடிவையே தாய்க்குக் கடிதத்திலும் வடித்தாள்.

"அன்பின் அம்மாவுக்கு,

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து இன்றுவரை உங்களைப் பிரிந்திருந்த காலமே மிக மிக அதிகமானது. இதனால் உங்கள் அன்பு- பாசத்தை முழுமையாக அருகிலிருந்து அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கியசாலியாக இருந்துவிட்டேன்.

படித்து முடிந்த கையோடு திருமணம் முடித்துப் போய் விட்டால் அது இனி நிரந்தரப் பிரிவாகவே அமைந்துவிடும். எனக்கு உங்களுடன் கூடவே இரண்டு வருடங்களாவது சேர்ந்து இருக்க வேண்டும் என்ற அவா இருக்கின்றது. நான் உங்கள் விருப்பப்படியே நடப்பேன். ஆனால் இப்போ எனக்குத் திரு மணம் வேண்டாம். என்னைப் புரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடனேயே இதை எழுதுகிறேன்.

-மகள் வேணி.

எழுதி முடித்த கடிதத்தை மடித்து உறையினுள் போட்டுக் கொண்டிருந்தபோது அவளது நெருங்கிய நண்பி சுதா அங்கு வந்தாள்.

"என்ன வேணி செய்து கொண்டிருக்கிறாய்?"

"அம்மாவுக்குக் கடிதம் எழுதி இப்பதான் முடிஞ்சுது." வேணியின் பதிலைத் தொடர்ந்து சுதாவின் பிரகாசமான முகம் பிரகாசமற்றுப் போனதை, தாயின் முகவரியைக் கடித உறையில் எழுதிக்கொண்டிருந்த வேணி அவதானிக்கவில்லை.

வன்னியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் அகப்பட்டு இறந்துபோன வேணியின் அம்மாவின் சடலம் தகனம் செய்யப்பட்ட பின்னும் அதை அறியாத வேணி இல்லாத அம்மாவுக்குக் கடிதம் எழுதிவைத்துக்

**மு.கலை**

கொண்டிருப்பதைப் பார்க்க சுதாவால் தாங்க முடியவில்லை.

வேணியின் அக்கா தாய் இறந்த விடயத்தை நேரடியாக தங்கைக்குத் தெரிவிக்காமல் சுதாவுக்குத் தெரிவித்து, அவள் மூலம் பக்குவமாக விடயத்தை வேணிக்குத் தெரியப்படுத்துமாறு எழுதிய கடிதம் கிடைத்ததன் மூலமே சுதாவுக்குத் தெரியும்.

முகவரியை எழுதிவிட்டு "யாரும் வெளியே போனால் இந்தக் கடிதத்தைப் போடக்கொடுத்துவிடு!" என்றவாறு நிமிர்ந்த வேணி, சுதாவின் கண்களிலிருந்து வீழ்ந்த கண்ணீர்த் துளிகளுக்குரிய காரணத்தைப் புரியாமல் சுதாவை நோக்கி எழுந்து வந்தாள்.

சுதாவால் அழுகையை அடக்கமுடியவில்லை. வாய்விட்டே அழத்தொடங்கினாள். ■

# காதல் என்பது....

சுகன்யா ஏழை வீட்டுப் பெண். ஆனால், அழகானவள். அவளை மனதார விரும்பினான் பரந்தாமன். அவனுடைய மன ஆசையை வெளிப்படுத்தினான் தனது பெற்றோரிடம்.

"இத பாருடா... அழகு நிரந்தமில்லே... பணம்தான் அந்தஸ்து தரக்கூடியது... உனக்கு மிகப் பெரிய இடத்துல பெண் எடுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்!"

"என்னப்பா இது...?" என்றவன், அம்மாவிடம் ஓடினான்.

"இத பாருங்கம்மா.. நீங்கதான் அப்பா



சேகர்

கிட்டே சொல்லி என் சுகன்யாவை எனக்கு கல்யாணம் செய்து வைக்கணும்..." என்று தவிப்போடு சொன்னான்.

"என்னைக்காவது உங்க அப்பா வார்த்தைக்கு மீறி நாம நடந்திருக்கோமா...? நான்தான் அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசி இருக்கேனா...?"

"என்னம்மா இது... நீங்கதான் என் ஆசையை, அப்பா கிட்டே சொல்லி எனக்கு சுகன்யாவை கல்யாணம் செய்து வைப்பீங்கன்னு மலைபோல நம்பி இருந்தேன்..." ஏறக்குறைய அழுதே விட்டான்.

"என்னை என்னடா பண்ணச் சொல்றே...? உங்கப்பா சொல்ற மாதிரி வெறும் அழகை மட்டும்வச்சிக்கிட்டு என்ன பண்ண முடியும்..? இந்தக் காலத்துல நாலு காசு இருந்தாத்தான் ஊரு உலகத்துல மதிப்பாங்க...

யாரை கல்யாணம் செய்துக்கிட்டாலும் மனசுக்குப் பிடிச்சவளா ஆகிடும்... அப்போவெல்லாம் பொண்ணு மாப்பிள்ளையைப் பார்க்கிறதில்லே, மாப்பிள்ளை பொண்ணைப் பார்க்கிற தில்லே.... எல்லாம் பெரியவங்களா பார்த்து முடிவு பண்ணி வச்சதுதான்... எந்த தம்பதிகள் ஒத்துமையா இல்லாமப் போயிட்டாங்க...?"

"அம்மா உங்க காலமே வேற... இப்ப உள்ள சூழ்நிலையிலே... மனசுதாம்மா முக்கியம்...."

"எனக்கு எதுவும் தெரியாது... உங்கப்பா வாச்சு... நீயாச்சு... என்னை இதிலே தலையிடச் சொல்லாதே... நாளைக்கு ஏதாவதுன்னா என் தலையைத்தான் உருட்டுவீங்க...."

அப்பாவிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்து விட்டான். அவர் தன் நிலையில் பிடிவாதமாய் இருந்தார்.

கடைசியில் அப்பாவின் விருப்பப்படியே மிகவும் பணக்கார வீட்டுப் பெண்ணான சுசீலாவை அவனுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டார்கள்.

சுசிலாவும், தான் பணக்கார வீட்டுப் பெண் என்ற கர்வத்துடன் நடந்து கொள்ளவில்லை.

அம்மாகூட சொன்னாள், "பாத்தியாடா... காதல் கத்தரிக்காய்ன்னு சொன்னியே...? சுசீலாவை விட தங்கமான பொண்ணு எங்கேடா கிடைப்பா...?"

அவனுக்கும் அது ஆச்சரியமாகத்தான் இருந்தது. சுசீலா பணக்கார கொள்கைகளிலிருந்து, மாறி வீட்டுக் காரியங்கள் அனைத்தையும் அவளே செய்தாள். அதைக் கண்டுவிட்டு அவன் சொன்னான்,

"ஏன் சுசீலா, நீயே கஷ்டப்படறே... துணி துவைப்பதற்கு, பாத்திரம் கழுவுவதற்கு வேலைக்கு ஆள் வச்சிக்கிட்டா நல்லது..." என்றான்.

"அப்புறம் எங்களுக்கு என்ன வேலை...? சாப்பிட்டு, சாப்பிட்டு தூங்கறதா?"

"அதுக்கில்லே..."

"இத பாருங்க... இதெல்லாம் எங்க வேலை... நாங்க செய்து செய்து பழகிட்டோம்... நீங்க வீணா அலட்டிக் கொள்ள வேணாம்.... எனக்கு இதெல்லாம் சாதாரணம்... எனக்கு சிரமம்னு நீங்க கவலையே பட வேணாம்..." என்று சொல்லிவிட்டாள்.

சுகன்யா மனைவியாக வாய்த்திருந்தால் கூட தனக்கு இப்படிப் பணிவிடைகள் செய்வாளோ என்ற சந்தேகப்படும்படி சுசீலா நடந்து கொண்டாள்.

'சுகன்யாவை கல்யாணம் செய்து கொள்ளாததும் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் சுசீலா கிடைத்திருப்பாளா..?' என்று நினைத்துக் கொண்டான்.

சுகன்யாவுக்கும், திருமணம் செய்ய முடிவு செய்து விட்டார்கள், அவள் வீட்டில். இவனை மறக்க முடியாமலேயே வேறொருத்தனை புருஷனாக ஏற்றுக்கொள்ள சம்மதித்து விட்டாள்.

திருமணத்திற்கு பரந்தாமனும், சுசீலாவும்கூட சென்று வந்தார்கள்.

சுகன்யாவை கல்யாணம் செய்து கொண்டவன் அரசாங்க அலுவலகத்தில் உத்தியோகம் பார்ப்பவன். திருமணம் முடிந்த கையோடு சுகன்யாவை தன்கூட தான் வேலை பார்க்கும் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விட்டான். காதல் என்பது வெறும் வயதுக் கோளாறு என்று நினைத்துக்கொண்டான் பரந்தாமன்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு மார்க்கெட்டில் தற்செயலாக சுகன்யாவை சந்தித்தான். ஆள் மெலிந்து, கறுத்து, சோகமாய் தெரிந்தாள்.

"என்ன சுகன்யா, அம்மா வீட்டுக்கு எப்ப வந்தே?"

"ரெண்டு நாளைக்கு முன்தான்..."

"நல்லா இருக்கியா...? ஆமா, என்ன இப்படி இளைச்சுப் போயிட்டே? என்ன காரணம்...?" என்றான்.

"எல்லாம் நம்ம இரண்டு பேரோட பழக்கம்தான் காரணம்.!"

"என்னசொல்றே?" அதிர்ச்சியுடன் கேட்டான்.

"நாம ரெண்டு பேரும் பழகினதை யாரோ அவருக்குக் கடிதம் எழுதிப்போட்டுட்டாங்க. அதிலிருந்து அவருக்கு என்மீது சந்தேகம்தான்... அதிலிருந்து என்னை ரொம்ப கொடுமைப்படுத்துறாரு..."

'சொரேர்' என்று அதிர்ந்தான். 'ச்சே... நம் வாழ்க்கையை மட்டுமே எண்ணிக்கொண்டோமே... அவளுடைய எதிர்காலத்தை பத்தி நினைக்காம விட்டுட்டோமே... அவளுடைய எதிர்காலத்தை நினைத்தாவது நாமே அவளை கல்யாணம் செய்திருக்கணும்... தப்பு செய்து விட்டோமே....' என மனம் குமைந்து வருந்தினான்! ○

# பாதி

தனக்குக் கல்யாணம் என்று எவ்வளவுக்கெவ்வளவு தாரா சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தாளோ, அவ்வளவுக்கவ்வளவு அப்பா தனக்கு செய்திருக்கும் நகைகளைப் பார்த்ததும் வேதனைப்பட ஆரம்பித்தாள்.

அவள் அக்கா பானுவுக்கு பத்து வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. அப்பொழுது தாராவுக்கு பத்து வயதுதான். ஆனாலும் அக்காவுக்கு அப்பா என்ன



சுகந்தி

வெல்லாம் செய்கிறார் என்பதை அவள் கவனித்துக் கொண்டிருந்தாள்.

கழுத்துக்கு, கைக்கு, காதுக்கு, மூக்குக்கென்று பத்து பவுண் நகைகள். ஒரு கிலோ வெள்ளிப்பாத்திரம், எட்டு பட்டுப் புடவைகள், கட்டில், மெத்தை, எவர்சில்வர், பித்தளைப் பாத்திரங்கள் என்று ஐயாயிரம் ரூபாய். பெரிய திருமண மண்டபத்தில் கல்யாணம்.

இப்போது அப்பா தனக்கு அப்படியெல்லாம் செய்யவில்லை என்பது அவர் செய்து கொண்டிருப்பவைகளைப் பார்த்தாலே தெரிந்தது தாராவுக்கு

அவளுக்கு நகைகள் ஐந்து பவுண்தான். வெள்ளிப் பாத்திரங்கள் அரை கிலோவுக்கும் குறைவு. பட்டுப்புடவைகள் நான்குதான். மற்றவை எல்லாம்கூட அக்காவுக்குச் செய்ததில் குறைவுதான். மொத்தத்தில் பார்த்தால் அக்காவுக்குச் செய்ததில் அப்பா பாதிதான் செய்திருக்கிறார். ஏன் இந்த ஓரவஞ்சனை? எதனால் ஒரு கண்ணில் வெண்ணையும், இன்னொரு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கிறார்?

அப்பாவிடம் கேட்கத் தாரா சென்றபோது, உள்ளே அவள் அம்மா அப்பாவிடம் பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

"என்னங்க, நம்ம பெரிய பெண் பானுவுக்கு செஞ்சதுலே பாதிதான் இப்போ நம்ம சின்னப் பொண்ணு தாராவுக்கு செய்திருக்கீங்க, எதனாலே?"

"இல்லை சாரதா... பானுவுக்கு எவ்வளவு பணம் செலவழிச்சிருக்கேனோ அதே அளவு பணத்தைத்தான் இப்போ தாராவுக்கும் செலவு செய்யறேன். ஒவ்வொரு பொருளின் விலையும் ஒண்ணுக்கு ரெண்டாயிட்டதாலே பொருள்கள் எல்லாம் பாதிதான் வாங்கமுடியுது!- அவ்வளவுதான்!"

அதைக் கேட்டு தாராவின் மனம் சமாதானமடைந்தது. ▪

# வெள்ளைக் காகிதம்

நந்தினி ரவியிடம் மிகவும் நெருங்கிப் பழகுவதாகக் கேள்விப்பட்டவுடனேயே அருணாசலம் தன் கடமையைச் செய்யத் தயாராகிவிட்டார்.


"என்னம்மா நந்தினி, ரவியைக் கல்யாணம் பண்ணிக்க, நீ தயார் தானே?"

"ஆமாம் டாடி... நானும் அவரை விரும்புகிறேன். அவரும் என்னை விரும்புகிறார்."

"ஓகே... எனக்கு ஒண்ணும் ஆட்சேபம் கிடையாது. நாளைக்கே ரவியை வீட்டுக்கு அழைச்சிட்டு வா."

"ரொம்ப சந்தோஷம்பா."

அடுத்த நாள் மாலை நந்தினியும்



ஆர். நாதன்

ரவியும் ஜோடியாக வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

அறிமுகம் முடிந்தது.

"ரவி, உங்களுக்கு ஒரு சின்ன டெஸ்ட் வைக்கலாமா?" அருணாசலம் கேட்டார்.

"எந்தச் சோதனைக்கும் தயார்!" தைரியமாகப் பதில் சொன்னான் ரவி.

அருணாசலம் ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்தார். அதன் நடுவில் ஒரு கறுப்புப் புள்ளியை வைத்தார். காகிதத்தை ரவியிடம் நீட்டினார்.

"இப்போது நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?"

"ஒரு வெள்ளைக் காகிதம்!" என்று சட்டென்று பதில் சொன்னான் ரவி.

"வெரி...குட்... நீங்கதான் எனக்கு மாப்பிள்ளை!"

ரவியிடம் கை குலுக்கினார்.

நந்தினிக்கு ஒன்றுமே புரியவில்லை. ரவி விடைபெற்றுச் சென்றவுடன் டெஸ்ட் பற்றி விளக்கம் கேட்டாள். அருணாசலம் சொன்னார்:

"காதலியாக இருக்கும்போது எவ்வளவு தப்பு செய்தாலும், ஆண்கள் கண்டுகொள்ள மாட்டார்கள். ஆனால் மனைவி என்று ஆனபிறகு குறை கண்டுபிடிப்பதே வேலையாக இருப்பார்கள், சில ஆண்கள். ரவி எப்படிப்பட்டவன் என்று தெரிந்து கொள்வதற்குத்தான் இந்த டெஸ்ட். சின்னச் சின்னக் குறைகளையெல்லாம் பெரிதுபடுத்தும் வழக்கம் ரவிக்கு இருந்தால் அவனது பதில் 'வெள்ளைக் காகிதத்துக்கு நடுவில் கறுப்பு புள்ளி' என்று இருக்கும். ஆனால் அவன் அப்படிச் சொல்லவில்லை. காகிதத்தின் நடுவில் ஒரு சிறிய குறையாக இருந்த புள்ளியைப் பெரிதுபடுத்தாமல் 'வெள்ளைக் காகிதம்' என்று பதில் சொன்னான். அவனது குணம் எப்படிப்பட்டது என்று எனக்குப் புரிந்து விட்டது. உடனே ரவியை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டேன். ■


படிப்பகம்

www.padippakam.com



# தோணியும் பயணியும்

இலக்கியநயம்

தருவது ரசிகன்

"முத்தம்மா-நீ
மொத்தமாகவே
அழகம்மா!
பக்குவமாய் என்
பக்கம் வாம்மா!"
வரம்பில் நின்று
பொன்னன்
அழைக்கிறான்!

பூத்துக் குலுங்கும்
ரோஜாச் செடியாய்
வயல் பாத்திக்குள்
நின்றவளை
காதல் கூத்துக்கு
அழைக்கிறான்!

"மீசைக்காரரே-உமக்கு
ஆசை அதிகம்தான்!"
முத்தம்மா குறும்பினாள்

"மாசில்லா மாணிக்கமே
மண்ணில் முளைத்த
மருவில்லாத இரத்தினமே,
உன் கண்ணில்
தூசி விழுந்தாலும்
என் கண்ணில்
கண்ணீர் வருமடி!"

மனதைத் தொட
வார்த்தைகளை தீட்டினான்!

முத்தம்மா
அக்கம் பக்கம்
பார்த்தாள்!

"என்ன வேண்டும்
உமக்கு?"
சிணுங்கியபடி கேட்டாள்!

"உன்னை வேண்டும்
எனக்கு?"

"நான் என்ன பொருளா
நீர் பெறுவதற்கு?
மாங்காயா? மாதுளையா
நீர் பறிப்பதற்கு?"

"பொருள்தான் நீ
முத்தம்மா!
என் வாழ்க்கைக்கு
பொருள் நீதான்
முத்தம்மா!

மாம்பழமும்
மாதுளையும்
உன் கன்னத்திலே
இருக்கையிலே,
நினைத்தாலே இனிக்குதடி
சுவைத்தாலோ சொர்க்கமடி!"

பொன்னன் சொன்னதும்
முத்தம்மா
சிவந்து போனாள்!
மொத்தமும்
சிலிர்த்துப் போனாள்!

"வீரமிக்க
எங்கள் மண்ணில்
விளைந்த முத்தே
முத்தம்மா!
ஊரறிய கைபிடிப்பேன்
நானம்மா!"

பொன்னன்
உறுதியுரை வழங்கினான்!

"மானம் ஒன்றே
உயிரென எண்ணி
வீரக் கானம்பாடுவது
எங்கள் இனம்!
காதல் கானம் பாடும்
கள்வா நீர் எந்த ரகம்?"
முத்தம்மா வினாபோட்டாள்!

"வீரமும், காதலும்
மனதிலடி!
வாளும் கேடயமும்
கரத்திலடி!

நாட்டை காக்கும்
படையணியில்
நானும் ஒரு அங்கமடி!"

முத்தம்மாவின்
முத்து முகத்தில்
கொத்தாக திருப்தி.

'வெட்டி வேலைக்காரரல்ல
வீர வேலைக்காரர்தான்!
முட்டி மோத

வரும் பகையை
எட்டி உதைக்கும் வீரர்தான்!'
என்று மனதில் மகிழ்ந்தாள்.

"கண்ணே! முத்தம்மா
கன்னம் சிவந்தது
ஏனம்மா!
பொன்னே முத்தம்மா
உன் மன்னன்
நான்தானா?"

கிட்டக் கிட்ட
வந்துவிட்டான்
பொன்னன்!

எட்டத்தான்
போக நினைத்தாள்,
'நில்லடி முத்தம்மா
என்னாகும் பார்க்கலாம்'
என்று மனது சொன்னதை
தட்டத்தான் முடியவில்லை!

"முட்ட வரும்
காளையிடம்
அச்சம் இல்லையா?"
என்று கேட்டவன்
எட்டிப் பிடித்துவிட,
அழகி முத்தம்மா
நழுவுவது போல்
நடித்தாள்!

மெல்லிய இடையினில்
விரல்கள் ஊர,
தேகத்தில் தீ
பற்றி மூள,
தாகத்தில் இதழ்கள்
மெல்ல விரிய,
தணிப்பது போல
அவன் உதடுகள் தாவ,
மாயத்தில் அவள்
தன்னை மறந்தாள்!

இமைகளை விரலால்
நீவி விட்டான்.
இதழ்களை உதட்டால்
ஒற்றிவிட்டான்!

கன்னத்தில்
உதட்டால் முத்திரை
இட்டான்!
கழுத்தினை உதட்டால்
கவ்விடச் செய்தான்!

இனிக்கின்ற தீயில்
எரிந்தது தேகம்!
தணிக்கின்ற வரையும்
நீண்டது மோகம்!

தொடர்ந்தது காதல்!
படித்தனர் பாடம்!
அந்த சந்தோச
திருவிழாவில்
ஒரு திருப்பம்!

தாயகப் போருக்கு
அவசர அழைப்பு!

"தாயிலும் மேலாம்
தாயக பூமி!
பேயிலும் கேடாய்
பகைவர் புகுவதோ?
தடுத்திட புறப்பட
கொடுத்திடு அனுமதி!"

"போகத்தான் வேண்டுமா?"
வழக்கமான கேள்வி

'போய்த்தான் ஆகவேண்டும்
என்று கூறு!
காதலிக்க வீரனை
தேடினாய்!
காதலித்த பின்னர்
கோழையாக்காதே!
காத்திரு கண்ணே!
எதிரிகளை
கருவறுத்து வருகிறேன்!
பாத்திரு கண்ணே!
பகை முடித்து வருகிறேன்!"

முத்தம்மா அவனை
மார்பு அழுந்த
அணைத்தாள்!
இதழ்களால் அவனுக்கு
இன்ப அமுதம் ஊட்டினாள்!

பெண்கள் அப்போது
போருக்கு செல்வதில்லை!
ஆணாதிக்கம்
அதனை ஏற்கவில்லை!

இல்லையானால்
முத்தம்மாவும்
புறப்பட்டு போயிருப்பாள்!

பொன்னன்
போருக்கு சென்று
வாரம் ஒன்றானது!

பொழுதெல்லாம்
கண்பூத்திருந்தாள்!
மனதெல்லாம்
தீ வளர்த்திருந்தாள்!

"முத்தம்மா! என்று
மோகத்துடன்
அழைக்கும் குரலை
மறுபடி கேட்பது
எப்போது?

முத்தத்தால்
முகம் நனைத்து
சித்தத்தை
சிலிர்க்க வைப்பது
எப்போது?

'முத்தம்மா முத்தம்மா
உன்னாலே
பித்தானேன் நானம்மா'
என்று கெஞ்சிக்
கொஞ்சுவது எப்போது?

மீசை குத்தும்
குறுகுறுக்கும்
ஆசை முத்தம்
அவன் தரும்போது!"
எண்ணி எண்ணி
தீ வளர்த்தாள்.

சிறு துளிதானே
பெரு வெள்ளம்!

பொன்னன் வந்ததும்
என்னென்ன குறும்புகள்
செய்யலாம்?

சிறுகச் சிறுக
சேமித்த ஆசைகள்
கடல்போல பெருகின!

ஆசை கடல்போன்றது
நாமிருவரில்

பொன்னன் தோணி
நான்தான் பயணி!

கடல் விரிகிறது
தினம் விரிகிறது
பயணி இங்கே
தோணி எங்கே?

கடலை கடந்து
கரைசேர
தோணி விரைந்து
வரவேண்டும்!

தோணி வரும்
திசை நோக்கி
என் விழி
விரிந்து காத்திருக்கும்!"

முத்தம்மா
மனதோடு பேசினாள்.

ஆசையை கடல்
என்றும்-தன்
காதலனை
தோணி என்றும்
கூறும் பெண்,
கடலை கடக்க
காத்திருப்பதை
வள்ளுவரும் காட்டுகிறார்!

"காமக் கடல் மன்னும் உண்டே அது-நீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்"

அதிகாரம்:117 குறள்: 1164

---

ஸ்போர்ட்ஸ்

# முன்னாள் கேப்டன் நீக்கம்

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இந்தியாவில் நடைபெறவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை நடத்த விடாமல் சிவசேனை அமைப்பு பல்வேறு தடங்கல்களை ஏற்படுத்தி வருகிறது.

இருப்பினும் போட்டியை நடத்தியே தீருவது என்று இந்திய அரசும், இந்தியக் கிரிக்கெட் சபையும் கூறிவருகின்றன. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியும் இந்தியா செல்ல சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவிருக்கும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் கேப்டன் அமீர் சொஹைல் நீக்கப்பட்டுள்ளார். 3 புதுமுகங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமையகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிப்பதாவது: வாஸிம் அக்ரம் தலைமையில் 16 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. கராச்சியில் நடைபெற்ற பயிற்சி முகாமில் அமீர் சொஹைல் பங்கேற்காத காரணத்தால்தான் அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அணியில் வருகை தந்துள்ள புதுமுகங்களில் வஜகத்துல்லா வாஸ்தி, முகமது நவீத் ஆகிய இருவரும் துடுப்பாட்டக்காரர்கள்; நதீம் கான் சுழற்பந்து வீச்சாளர் ஆவார். அணி விபரம் வருமாறு:

வாஸிம் அக்ரம் (கேப்டன்), மொய்ன்கான் (துணைக் கேப்டன்), சயீட் அன்வர், வஜகத்துல்லா வாஸ்தி, முகமது நவீத், இஜாஸ் அகமட், சலீம் மாலிக், இன்ஸமாம்-உல்-ஹக், யூசுப் யோஹானா, ஷாஹிட் அஃப்ரிடி, வாக்கார் யூனுஸ், ஷோயிப் அக்டர், அஸார் மெஹ்மூத், சக்லைன் முஷ்டாக், முஷ்டாக் அஹமட், நதீம் கான்.

## மூன்று நாடுகள்

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்த பின்னர், இந்தியாவில் 3 நாடுகள் பங்குபற்றும் ஒருநாள் போட்டிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகள் பங்குபற்றவுள்ளன. இப்போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| மார்ச் | 19 | பாகிஸ்தான்- இலங்கை | (ஜம்ஷெட்பூர்) |
| மார்ச் | 21 | இந்தியா-இலங்கை | (நாக்பூர்) |
| மார்ச் | 24 | இந்தியா-பாகிஸ்தான் | (ஜெய்ப்பூர்) |
| மார்ச் | 26 | இலங்கை-பாகிஸ்தான் | (விசாகப்பட்டினம்) |
| மார்ச் | 29 | இந்தியா-இலங்கை | (புனே) |
| மார்ச் | 31 | இந்தியா-பாகிஸ்தான் | (மொஹாலி) |
| ஏப்ரல் | 03 | இறுதிப்போட்டி | (பெங்களூர்) |

## 30 பேர் கொண்ட அணி

ஏழாவது உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி வருகிற மே மாதம் 17ம் திகதி தொடக்கம் ஜூன் 20ம் திகதிவரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்காக 30 பேர் கொண்ட இந்திய அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதில் எஸ். ரமேஷ் என்ற தமிழகவீரர் இடம் பெற்றுள்ளார். இந்த 30 பேரில் இருந்து 20 பேர் கொண்ட அணி பெப்ரவரி மாதம் 15ம் திகதியும், பின்னர் 20ல் இருந்து 15பேர் கொண்ட அணி மார்ச் மாத இறுதியில் தெரிவு செய்யப்படுவார்கள்.

இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் 15 பேர் கொண்ட அணியே உலகக் கோப்பைப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்திற்கு அனுப்பப்படும்.

## குற்றச்சாட்டு

தென்னாபிரிக்க தேசிய கிரிக்கெட் அணியைச் சேர்ந்த வீரர் ஒருவர்மீது பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவிலுள்ள கிழக்கு இலண்டனைச் சேர்ந்த அட்டர்னி ஜெனரல் றொபேர்ட் ஒரு அறிக்கை மூலம் இதனைத் தெரிவித்தார்.

அந்தக் கிரிக்கெட் வீரரின் பெயரைக் கூற மறுத்த றொபேர்ட், விரைவில் அந்த வீரர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார் என்று கூறியுள்ளார்.

கடந்த வருடம் கிழக்கு இலண்டன் மைதானத்தில் 21 வயது கல்லூரி மாணவியை அந்தக் கிரிக்கெட் வீரர் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார் என்றும் றொபேர்ட் தெரிவித்துள்ளார்.

---

# சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! வடமேல் மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெறப்போவது யார்?

எஸ். ப்ரீத்தி,
குருநாகல்.

தேர்தல் ஒழுங்காக நடந்து முடிந்தால் பொ.ஐ.முன்னணிக்கு அதிர்ச்சி காத்திருக்கும்! எப்படியிருப்பினும் இம்முறை ஐ.தே.கட்சிக்கு செல்வாக்கு முன்பைவிட உயர்ந்துள்ளதை தேர்தல் முடிவுகள் காண்பிக்கும் என்பது என் கணிப்பு!

★ 'சக்தி ரி.வி.'யில் 'பாட்டுப் பாடவா' பார்த்தீர்களா? எப்படியிருந்தது?

கே. பாலா,
கொழும்பு-09.

சப்தஸ்வரங்களை 97 சதவீதம் அப்படியே கொப்பியடிக்கிறார்கள். ஏ.வி. ரமணனின் சாதுரியம் நம் அறிவிப்பாளினிக்குக் கைவரவில்லை!

★ சிந்தியா! காதல் கைகூட வழி என்ன?

என். சித்திக்,
மருதானை.

நீங்கள் யாரையாவது காதலிக்க வேண்டும்; உங்களை யாராவது காதலிக்க வேண்டும். இது இரண்டுமே ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்!

★ ஹலோ சிந்தியா! தமிழ்ப்பட நடிகைகள் ஹொலிவூட்டுக்குப் போனால் என்னாகும்?

ஆர். கணேஷ், பண்டாரவளை.

ஹொலிவூட் அப்படியேதான் இருக்கும்! இவர்கள்தான் எப்படியோ ஆகிவிடுவார்கள்!

★ பொங்கல் படங்களில் அசத்தல் எது?

கா. திலகராஜ், வெலிமட.

பார்த்துபின் சொல்கிறேன்!

★ சிந்தியா! பிரேமதாசாவின் ஆவி நடமாடுவதாகக் கூறுகிறார்களே?

எஸ். கிஷோர், கண்டி.

அவர்கள் பாவிகள்! (ஏமாற்றுவதும் பாவத்தில் அடக்கம்தானே!)

★ இலங்கை கிரிக்கெட் அணி அடுத்தடுத்து தோல்வி காண்பது ஏன்?

பி. மிதுளா, கல்கிசை.

தொடர்ந்து வெற்றி பெற்றால், தோல்வியே வெற்றிக்கான படிக்கட்டு என்று கூற முடியாதல்லவா? அதனால்தான்.

★ கமலின் 'மருதநாயகம்' எப்போது திரைக்கு வருகிறது? இடை நிறுத்தப்பட்டதாக சினிவிசிட்டில் இருந்ததே?

பா. பரந்தாமன், வவுனியா.

ஃபிரான்ஸ் அரசு நிதியுதவி செய்ய முன்வந்துள்ளதாம். அதற்கான பேச்சுக்குப் பின்னர் படம் தொடருமாம். "அடுத்த நூற்றாண்டின் பெரிய படம் இதுவாகத்தான் இருக்கும்!" என்று கமல் கூறியுள்ளதைப் பார்த்தால், இந்த ஆண்டில் எதிர்பார்க்க வேண்டாம்?

★ "செம்மணியைத் தோண்ட அனுமதி!" என்று பரபரப்பாகச் செய்திகள் வந்தன. வீடியோ படமும் பிடித்தார்களாமே? அதனால் என்ன பயன்?

பூ. ஆனந்தராசா, யாழ்ப்பாணம்.

எத்தனை கன அளவு வெள்ளம் என்று ஆராய்ச்சிதான் செய்யலாம்.

★ ஈராக்மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துகிறதே அமெரிக்கா?

பி. ஜெமீமா, கல்முனை.

ஐக்கியநாடுகள் சொல்வதைக் கேட்கவில்லை என்று ஈராக்கை தாக்கியது அமெரிக்கா. உலகநாடுகள் பல ஒரே குரலில் ஈராக்மீதான தாக்குதலைக் கண்டித்தும் அமெரிக்கா கேட்கவில்லை! 'ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி' என்பது அமெரிக்கத் தத்துவம்.

★ தாம்பத்தியத்தில் ஈடுபட சலிப்புக் கொள்பவர்கள் பற்றி என்ன கூறுகிறீர்? (என் மனைவியும் அந்த ரகம்தான்)

எம். குகரூபன், மாத்தளை.

தாம்பத்திய நுணுக்கம் பற்றிய ஆய்வு ஒன்றில் கூறப்பட்ட விளக்கம் இது:

"உடலுறவைப் பற்றி சரியான கண்ணோட்டம் இல்லாததால் நிறையத் திருமண உறவுகள் கசந்துவிடுகின்றன."

ஆண், பெண் இருவருமே தாங்கள் அரைகுறையாகக் கேள்விப்பட்டிருந்ததும், புத்தகங்களில் படித்ததுமான அறிவுடன்தான் திருமணத்தில் நுழைகிறார்கள்.

நமது முன்னைய கலாசாரப்படி உடலுறவு பற்றிப் பேசுவது தகாத செயல் என்ற எண்ணத்தோடுதான் பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள். அதனால் ஒருவித கூச்சத்துடனேயே இருப்பர்.

உடலுறவு பற்றி கணவனும், மனைவியும் மனம் திறந்து பேசவேண்டும். தமக்கிருக்கும் அச்சங்கள், சங்கடங்கள், ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். தாம்பத்திய சலிப்பை நீக்க இதெல்லாம் உதவும். பயன்படுத்திப் பயன்பெறுக!

★ சமீபத்திய படங்களில் 'பார்க்கலாம்' என்று நீர் உத்தரவாதம் தரும் படம் எது?

மா. பிரதாபன், ஹட்டன்.

அருமையான மர்மநாவல் படிக்கும் உணர்வோடு படம் பார்க்க வேண்டும் என்றால், பாருங்கள்- 'உண்மை'- மம்முட்டி நடித்த அட்டகாசமான படம்.

★ சுயநலம் இல்லாத மனிதர்களே கிடையாதா?

எம். பாரூக், புத்தளம்.

கிடையாது! அளவோடு சுயநலம் இருந்தால் தப்பில்லை. மோசமான சுயநலத்துக்கு உதாரணமான கதை ஒன்று:

ஃபிரான்ஸ் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பெரும் செல்வந்தர்களையும், அரச பரம்பரையைச் சேர்ந்தவர்களையும் 'கில்லட்டின்' என்னும் இயந்திரத்தைப் பயன்படுத்தி தலைகளை வெட்டிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஃபிரான்ஸில் இருந்து தப்பியோடிக் கொண்டிருந்தார் ஒருவர். அச்சமயம் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த நண்பர் ஒருவர் அவரை மறித்து, "எங்கே ஓடுகிறீர்?" என்று கேட்டார்.

"கில்லட்டின் மூலம் தலைகளைச் சீவுகிறார்கள்!" என்றார் தப்பியோடிக் கொண்டிருந்தவர்.

உடனே அந்த நண்பர் "அய்யய்யோ, என் தொழில் போச்சே!" என்று அழுதார்.

"என்ன தொழில்?" என்று கேட்டார் மற்றவர். நண்பர் கூறினார்.

"நான் ஒரு தொப்பி வியாபாரி. கில்லட்டின் மூலம் இங்குள்ளவர்களது தலைகளை வெட்டிவிட்டால், நான் எப்படி வியாபாரம் செய்வது?"

★ சிந்தியா! நாட்டை அரசியல்வாதிகள் காப்பாற்றுவார்களா? அல்லது அரசியல்வாதிகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதா?

வி. பிரேம், ஆரையம்பதி.

தமாஷ் கதை ஒன்று:

பில் கிளின்ரன் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றபோது ஒரு மதகுருவும் வந்திருந்தார்.

அவரிடம் சென்ற பில் கிளின்ரன், "நீங்கள் எங்களுக்காகப் பிரார்த்தனை செய்யப் போகிறீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு மதகுரு சொன்னார்:

"ஆமாம், அதற்காகத்தான் வந்தேன். இப்போது உங்களைப் பார்த்த பின்னர் கடவுளிடம் இந்த நாட்டுக்காகப் பிரார்த்தனை செய்கிறேன்!"



'கணேஷ்' படத்தில் ரம்பா

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 45

**ஆ**ண்டவர் எலியாவை விண்ணுக்கு அழைத்து விட்டார். இதனால் அவரால்- அவருடைய கடமைகளைத் தொடர்வதற்காக நியமிக்கப்பட்ட எலிசா மிகவும் வருந்தினார். தனது சொந்தத் தந்தையைப் பறி கொடுத்திருந்தாலும் இத்த கைய பெருங்கவலை எலிசாவை வாட்டி இருக்காது.

எலிசாவுடன் எரிகோவிலிருந்த இறைவாக்கினர், தனது தலைவனைப் பிரிந்து துயருடனிருந்த எலிசாவை மகிழ்வூட்ட எடுத்த காரியங்கள் எதுவும் பலிக்கவில்லை. அவர்களில் ஒருவர் எலிசாவிடம் வந்து, "எம்மிடமுள்ள ஐம்பது பேரை அனுப்பி எலியா எங்கிருந்தாலும் கண்டுபிடிக்கலாம்!" என்று கூறினார்கள். எலியாவை அவ்விடமிருந்து ஆண்டவர் அழைத்துச் சென்று வேறோரிடத்தில் விட்டிருக்கலாம் என்று அவர்கள் கருதியிருந்தனர். எலிசா அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இருப்பினும் அவர்களுடைய தொல்லை தாங்காமல் சம்மதித்தார். அவர்கள் பல திக்குகளிலும் சென்று தேடியும் எலியாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இஸ்ரயேலின் மன்னர் யோராம் மீது எலிசாவுக்குக் கடும் கோபம் இருந்தது. அவர் தனது தாய் ஈசபேலின் விருப்பப்படி, இஸ்ரயேலரின் ஆண்டவருக்கு விருப்பமில்லாத நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டவர். இருப்பினும் யூதாவின் மன்னரான யோசபாத்தின் மீது எலிசாவுக்குள்ள நல்லெண்ணத்தினால், "ஆண்டவரின் அருளால் மோவாபியரைத் தோற்கடிப்பீர்கள்!" என்றுரைத்தார்.

மோவாபியர், தங்களைத் தாக்குவதற்கு இஸ்ரயேலியர், யூதாவினர் மற்றும் ஏதோம் நாட்டுமன்னர் ஆகியோர் பெரும்படையுடன் வருவதை அறிந்தனர். தமது படைகளையும் துரிதமாக ஆயத்தம் செய்தனர். அடுத்த நாள் காலை பொழுது புலர்ந்ததும் அவ்விடத்தில் பேரதிசயம் ஒன்றைக் கண்டனர். மோவாபியர் படை அணிகள் விடுதி விட்டிருந்த மலையடிவாரத்துக் கெதிரே இரத்த ஆறு பெருக்கெடுத்தோடியதைக் கண்டனர். தங்களைத் தாக்குவதற்காகப் படைதிரட்டிவந்த மூன்று அரசர்களின் படைகள், தமது படைகளை இரவோடு இரவாகக் கொன்று குவித்து விட்டனர்; அவர்களின் இரத்தம்தான் இவ்வாறு ஆறாகப் பெருக்கெடுத்துப் பாய்கிறது என்று எண்ணலானார்கள். அங்கு மேலும் தாமதித்தால், தம்மையும் அழித்து விடுவார்கள் என்று கருதிய மோவாபியப் படைகள் அச்சங்கொண்டு நாலாதிக்குகளிலும் சிதறி ஓடின.

## இரத்த ஆறு

நீரற்ற பள்ளத்தாக்கில் செங்குருதி ஆறு ஓடியது எங்ஙனம்? ஆண்டவரின் அருளை வேண்டி, எலிசா செய்த பிரார்த்தனையின் பயனாக, பள்ளத்தாக்கில் நீரூற்று ஒன்று தோன்றி வெள்ளம் பரவ வழி செய்தது. காலை இளவெயில் சிவப்புக் கதிர்களை நீரில் பதிக்க, அது செந்நிறமாகப் பிரதிபலித்தது. இந்த உண்மை மோவாபியருக்கும் தெரியவில்லை; அவர்களுடன் வந்த மூன்று அரசர்களுக்கும் தெரியவில்லை. இறைவாக்கினரான எலிசாவின் அற்புதச் செயலால் மோவாபியர் ஓடி விட்டனர் என்று கருதினர்.

**எ**லிசாவிடம் ஓர் ஏழைக் கைம்பெண் வந்தாள். கணவன் இறந்த பின் தானும் தன் இருபிள்ளைகளும் வறுமையில் வாடுவதாகக் கூறி அழுதாள். கணவர்பட்ட கடனுக்காகத் தன் இரு பிள்ளைகளை, கடன் கொடுத்தவர்கள் அடிமைகளாகப் பிடித்துச்செல்ல வந்திருப்பதாகவும் கூறினாள்.

எலிசா அம்மாதிடம், ஒரு சிறு கலசத்திலுள்ள எண்ணையை மட்டும் எடுத்து, வேறு பல காலியான கலசங்களைத் தேடி, அவற்றில் ஊற்றுமாறு கூறினார். அயலிலுள்ளவர்களிடமிருந்து அப்பெண் பெற்றுக் கொண்டு வந்த காலியான பாத்திரங்களில் எண்ணையை ஊற்றினாள். சிறிதளவு மட்டுமே இருந்த எண்ணை பல பாத்திரங்களில் ஊற்றப்பட்டும் தீர்ந்து போகவில்லை. முன்பிருந்த அளவிலேயே காணப்பட்டது. அந்த எண்ணையை விற்றுக் கடனைத் தீர்த்துவிட்டு, எஞ்சிய பணத்தை வைத்து, பிள்ளைகளுடன் காலம் கழிக்குமாறும் எலிசா கூறினார். அவ்வாறே அம்மாதின் வறுமையை இறைவன் கிருபையால் நீக்கினார் எலிசா.

**எ**லிசா சூனேம் நகருக்குச் சென்றார். அங்கிருந்த பணக்காரப் பெண்ணொருத்தி எலிசாவை அழைத்து உணவருந்திச் செல்லுமாறு கேட்டுக்கொண்டாள். தன் கணவனிடம் கூறி, தங்கள் வீட்டு மாடியில் எலிசா தங்கி ஓய்வெடுப்பதற்கான அறை ஒன்றையும் ஏற்பாடு செய்து கொடுத்தாள். எலிசா, அக்குடும்பத்தில் குழந்தைகள் இல்லை என்பதை உணர்ந்தார். ஆண்டவரிடம் பிரார்த்தித்தபின் அத்தம்பதியினருக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று எலிசா வாக்களித்தார்.

## மாண்டவர் மீண்டார்

எலிசாவின் வாக்குப்படி உரிய காலத்தில் அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். பாராட்டிச் சீராட்டி வளர்த்தனர். ஒருநாள் தன் தந்தை வயலில் அறுவடையிலீடுபட்டிருந்தார். அங்கு சென்றிருந்த பையன் தலைவலிப்ப தாக தந்தையிடம் கூறினான். சிறிதுநேரத்தில் அவன் இறந்து போனான். அவனுடைய தாய் மிகவும் துயரடைந்தாள்.

கர்மேல் மலையின்மீது எலிசா அப்போதிருந்தார். சூனேமியப் பெண் தன்னை நோக்கி வருவதைக் கண்டார். எலிசாவுக்காக அப்பெண் கட்டிவைத்த அறையில் கட்டிலின்மீது, இறந்து போன தன் மகனின் சடலத்தைக் கிடத்திவிட்டு வந்த தாகக்கூறி அழுது புலம்பினாள். எப்படியாவது தனது மகனை உயிர்ப்பித்துத் தருமாறு வேண்டினாள்.

எலிசா தனது ஓய்வுக்குரிய அறைக்குச் சென்று, அப்பையனின் மேல் படுத்தபடி இறைவனை வேண்டினார். சிறிது நேரத்தில் சிறுவன் உயிர்த்தெழுந்தான். சூனேமியப் பெண் எலிசாவைத் தாள் பணிந்து வீழ்ந்து வணங்கி தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டாள்.

சிரியா மன்னரின் படைத்தளபதி நாகமான் பல போர்களில் சிரியாவுக்கு வெற்றி ஈட்டிக் கொடுத்தவர். மன்னரிடம் நன் மதிப்புப் பெற்றவர். இவருக்குத் தொழு நோய் கண்டு பெரிதும் துன்பப்பட்டார். எத்தனையோ வைத்தியங்கள் செய்தும் சுகம் காணவில்லை.

நாகமானுடைய வீட்டில் ஒரு இஸ்ரயேலியச் சிறுமி பணிப்பெண்ணாக இருந்தாள். அவள் சமாரியாவில் அப்போது வசித்துவந்த இறைவாக்கினர் எலிசாவைப் பற்றிக்கூறினாள். அவரிடம் சென்றால் அவர் எத்தகைய நோயையும் குணப்படுத்துவார் என்றும் சொன்னாள்.

இஸ்ரயேல் மன்னருக்கு சிரியாவின் மன்னர் ஓர் ஓலை எழுதி நாகமானை அனுப்பி வைத்தார். நாகமானின் தொழுநோய் நீங்க உதவுமாறுதான் இஸ்ரயேல் மன்னருக்கான கடிதத்தில் காணப்பட்டது. அக்கடிதத்தைக் கண்ட இஸ்ரயேல் மன்னருக்குக் கடுங்கோபம் மூண்டது. தொழுநோயாளியைக் குணப்படுத்தத் தன்னால் முடியுமா என்று வேதனை அடைந்தவராகத் தனது ஆடைகளைக் கிழித்தெறிந்தார்.


மன்னர் இவ்வாறு நடந்துகொண்டதை அறிந்த எலிசா, நாகமானைத் தன்னிடம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

நாகமான் தன்னிடம்வந்ததும், யோர்தான் நதியில் ஏழுமுறை மூழ்கி எழுமாறு சொன்னார். ஆனால், நாகமானுக்குஅதில் நம்பிக்கை ஏற்படவில்லை. தனது உடலைத் தடவியே நோயைக் குணப்படுத்துவார் இறைவாக்கினர் என்று நம்பியிருந்தவருக்கு எலிசாவின் கூற்று ஏமாற்றத்தைத் தந்தது. சினம் கொண்டவராக நாடு திரும்ப ஆயத்தமானார்.

நாகமானுடன் வந்த அவர் பணியாளர்களின் தூண்டுதலினால், அவர் யோர்தான் சென்று ஏழு முறை நதியில் மூழ்கி எழுந்தார். உடலனைத்தும் நோய்த் தழும்பினால் நிறைந்திருந்த அவருக்கு உடனடியாகவே குணம் கண்டது. உடலில் எந்த வடுவுமில்லாமல் பூரணப்பொலிவுடன் காணப்பட்டார்.

(தொடர்ந்து வரும்)

# எலிசாவின் அற்புதங்கள்



# இராஜகுமாரன்

இவர்கள் தங்கியிருந்த ஊரிலுள்ள மக்கள், குடிக்கவோ விவசாயம் செய்யவோ நன்னீரின்றி வருந்தினர். எலிசா ஓர் இறைவாக்கினர் என்பதை அறிந்து அவரிடம் வந்து முறையிட்டனர். சிறிதளவு உப்பை ஒரு புதுக் கிண்ணத்திலிட்டு தன்னிடம் கொண்டு வருமாறு எலிசா சொன்னார். அவ்வாறே அவர்கள் கொண்டு வந்த உப்பைத் தூர்ந்துபோன ஒரு நீரூற்றின் மீது எலிசா ஊற்றினார். அங்கு சுத்தமான தண்ணீர் பெருக்கெடுத்து அந்த ஊர் மக்களின் வாட்டத்தைப் போக்கி வளத்தை வழங்கியது.

## மூன்று மன்னர்கள்

இஸ்ரயேலின் மன்னரான ஆகாபு இறந்த பின் அவருடைய மகன் யோராம் அரசரானார். இவருடைய காலத்தில் மோவாபிய மன்னன் இஸ்ரயேலுக்கு எதிரான சூழ்ச்சிகளைச் செய்ய முற்பட்டான். இஸ்ரயேலின் மன்னர் மோவாபியரை எதிர்த்துப் போரிட, அப்போது யூதாவின் மன்னராகவிருந்த யோசபாத்தையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். இவர்கள் ஏதோமின் மன்னனையும் தம்முடன் இணைத்துக் கொண்டனர். இம் மூன்று மன்னர்களும் தமது படைகளையும் திரட்டிக்கொண்டு சுற்று வழியாக ஏழு நாட்கள் பயணம் செய்தனர். இவர்களுக்குப் பல இன்னல்கள் நேர்ந்தன. தாம் மேற்கொண்டுள்ள பணியில் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை இருக்கவில்லை.

இறைவாக்கினர் எலிசா அந்தச் சுற்றாடலில்தான் இருக்கிறார் என்பதை அறிந்து, மூன்று மன்னர்களும் அவரை நாடிச் சென்று தங்கள் பணி வெற்றி பெறுமா, என்று அறிந்து சொல்லுமாறு எலிசாவிடம் கேட்டனர்.

**திருமறை 43 விடை:** பாகால்

**பரிசு பெறுவோர்:**

1. இ. தொபியாஸ், டச்சுறோட், சாவகச்சேரி (யாழ்.)
2. எம். றம்சானி, மீராகேணி வீதி, மிச் நகர், ஏறாவூர்.
3. செல்வன் ஏ. அருண் பிரசன்னா, பிறெம்லி எஸ்டேட், கந்தபொல, நுவரெலியா.
4. வி. சுபாசினி, இல. 187, கொழும்பு வீதி, உக்வத்த, அவிசாவளை.
5. ஏ.எம். முபா. 557 8/1, எல்லைவீதி, மருதமுனை-02, கல்முனை.

**திருமறை 45 வினா:-** மோவாபியப் படைகள் எதைக் கண்டு பயந்து ஓடின?


ஜன. 30க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 45– தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : பிரிட்டன் |
| தொழில் | : அமெரிக்காவுக்காக சண்டை போடுதல்! |
| சாதனை | : உலகின் பலபாகங்களை ஆண்டு சுரண்டியது! |
| சோதனை | : காலனியாதிக்கம் தகர்ந்தது. |
| மறக்கமுடியாத வாசகம் | : சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்! |
| சமீபகால சாதனை | : போக்லண்ட் தீவை ஆக்கிரமித்தது! |
| நம்புவது | : விமானப்படையையும் கப்பற்படையையும்! |
| உடனடி எதிரி | : சதாம் |
| நிரந்தர எதிரி | : சோசலிச நாடுகள் |
| பிரிக்க முடியாதது | : மக்களாட்சியும் அரச குடும்பமும்! |
| ஒரே இலட்சியம் | : வல்லரசாகவே நீடிப்பது! |

# பொங்கல் படையல்




கடந்த 15.01.99 அன்று தைப்பொங்கல் திருநாளை தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுக் கொண்டாடின. பொங்கல் படையல் காட்சியை இங்கே ஜோராகக் காணலாம்.

# புதிர் பொன்ராசா



**தி**ருவிழா, திருவிழா, தெருத் தெருவாய் விழா. ஆண்டவன் உலா கிடையாது. முன்னாள் ஆண்டவர்களும், இந்நாள் அதிபதிகளும் உலா வருவார்கள். பஜனை கிடையாது. வாய் அர்ச்சனைகள் இருக்கும். விபூதி கிடையாது, ஆனால் வாயால் ஊதிவிடுவர் பற்பல கதைகள். இந்த திருவிழாவில் முன்னாள் ஆண்டவர்களுக்கு அதிரடி கொடுக்கும் திட்டங்களை அதிகார உபயத்தில் செய்ய கடல் வள்ளக்காரர்கள் கடும் திட்டம் போட்டிருப்பதால் கலகம் பிறக்கும், அமைதி குலையும் என்று திருவாளர் பொதுஜனம் திரு திருவென்று முழிக்கிறார். கதை புரியுதோ? இந்தக் கதை புரியுதோ?




காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


## அலாவுதீன்



→ மிகப் புராதன காலத்திலிருந்தே வெண் சலவைக் கல்லைச் செதுக்கி பல உருவங்களை உற்பத்தி செய்யும் முறையினை எகிப்தியர்கள் அறிந்திருந்தனர்.

கிறிஸ்துவுக்கு முன் 1300ம் ஆண்டில் வெண் சலவைக் கல்லில் செதுக்கப்பட்ட எகிப்திய மன்னன் துட்டான்காமன் என்பவரின் மார்பளவு சிலை இன்றும் அதன் சிறப்புக் கெடாமல் காட்சி தருகிறது. இச் சிலையை அலாவுதீன் தன் அற்புத விளக்கின் உபயத்தால் உருவாக்கியதாகவும், அதனால்தான் சிறப்புக் கெடாமல் அப்படியே உள்ளதாகவும் ஒரு கதை இருந்தது. அதில் உண்மையில்லை என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

எகிப்து நாட்டில் தெபெஸ் என்ற இடத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வெண்சலவைக் கல் வெட்டி எடுக்கப்பட்டு வந்துள்ளன. மனித உருவங்களைச் செதுக்குவதற்கு மட்டுமல்லாமல், வீட்டுப்பாவனைக்கான பலபொருட்களையும் உருவாக்க இக்கல் பயன்படுத்தப்பட்டது.

வெண்சலவைக் கல்லானது சுண்ணத்துடன் கந்தக அமிலம் சேர்ந்த கூட்டினால் உருவானது. இதில் குறிப்பிட்ட அளவு நீர்ப்பொசிவும் இருப்பதனால், களியைப் போன்று கையாளலாம். எந்தவிதமான உபகரணமுமில்லாமல் கையினாலேயே வேண்டிய உருவத்தை உருவாக்கலாம். காய்ந்ததும் நன்றாக இறுகிக் கொள்ளும் தன்மை உடையது.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## இலை மீது



↑ வண்டுகளுக்கும் சுவாரசியமான வாழ்க்கைக் குறிப்புக்கள் உண்டு. படித்துப் பாருங்கள்.

வண்டினங்களில் பல்லாயிரக்கணக்கான ரகங்கள் உள்ளன. பூமத்திய ரேகைக்கு வடபாலுள்ள வண்டு வகைகளில் சில குளிரைத் தாங்கிக்கொள்ளும் சக்தியற்றவை. இதனால் இலையுதிர் காலத்திலேயே-பறவைகளைப்போல் தெற்கு நோக்கிப் பெருங்கூட்டமாகப் பறந்து சென்று, சற்று வெதுவெதுப்பான பிரதேசங்களை அடைந்து விடுகின்றன.

இத்தகை நெடுந்தூரப் பயணத்தின்போது இவற்றில் சரி அரைவாசியாவது இறந்து போவதுண்டு. இவர்களின் தெற்கு நோக்கிய பயணத்துக்கு முன்பாகவே பெண் வண்டுகள் ஆண் வண்டுகளுடன் சேர்ந்து சினைப்பட்டுவிடும்.

சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வதற்கு முன்னரே, இடையில் ஏதாவது ஓரிடத்தில் முட்டைகளை இட்டுவிடும். பெரும்பாலும் காடுகளிலுள்ள மர இலைகளின் அடிப்புறத்தில் நூற்றுக்கணக்கான முட்டைகளை ஒட்டிவைத்து விடுகின்றன.

முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரிக்கும்வரை இவை காத்திருப்பதில்லை. தாய் வண்டுகள் வாரிசுகளை உருவாக்கிய திருப்தியுடன் பறந்துவிடும். அல்லது இறந்துவிடும்.

குளிர்காலம் முடிந்து தெற்கிலிருந்து வண்டுகள் திரும்பும் காலத்தில், இடையில் பொரித்த வண்டுகளும் அவற்றுடன் சேர்ந்து வடக்கே பறந்து செல்லும். தெற்கிலிருந்து பறந்து வரும் வண்டுகளும் பெரும்பாலும்- தெற்கே சென்ற வண்டுகளின் வாரிசுகளாகவே இருக்கும். பழைய வண்டுகள் அதிகமானவை அங்கேயே இறந்து விடுகின்றன.

குடும்பவாழ்க்கை அற்றபோதிலும் பெண் வண்டுகள் எப்போதும் ஒன்று சேர்ந்தே வாழ்கின்றன. ஒரே இலையில் பல வண்டுகள் ஒன்றாக இணைந்திருப்பதைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள்.

↓சோவியத் ஒன்றியம் பிரிக்கப்படுவதற்கு முன்னர் அந்நாட்டின் முக்கியமான போர் விமானங்களாக விளங்கியவற்றுள் சிறப்பானது 'ஃபிளாங்கேர்ஸ்' என்ற விமானங்களாகும். இவற்றை 'SU-27' என்றும் கூறுவார்கள். (படத்தில் உள்ளது)

வட சோவியத்தின் நாலாவது விமானப்படை அணிக்கு ஒதுக்கப்பட்ட இவ்விமானங்கள், மேற்கு போலந்திலுள்ள 'சொஜ்னா' விமானத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 1992ல் ஐரோப்பாவிலுள்ள இராணுவத் தளங்களிலிருந்து படைகளைப் பின்வாங்குவதென ஏற்படுத்தப்பட்ட பின்வாங்கல் திட்டத்தின் அடிப்படையில் இவ்விமானங்கள் ரஷ்யாவுக்குள் கொண்டுவரப்பட்டன.

போலந்தில் இருக்கும்போது 'ஃபிளாங்கேர்ஸ்' விமானத்தின் முன் முனைப்பகுதி கடும்பச்சை நிறத்தில் காணப்பட்டது. ரஷ்யாவுக்குள் கொண்டுவரப்பட்டதும் பெரும்பாலும் கூடுதலாக வெள்ளை வர்ணம் கொண்டவையாக மாற்றப்பட்டன.

ரஷ்யாவைத் தவிர, சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து கொண்ட உக்ரேன் நாட்டு விமானத்தளங்கள் சிலவற்றிலும் 'ஃபிளாங்கேர்ஸ்' காணப்படுகின்றன.

சீனா, வியட்நாம், இந்தியா போன்ற நாடுகளின் விமானப் படைகளுக்கு இந்தரக விமானங்கள் விற்கப்பட்டுள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் சின்னங்களுள் ஒன்றான செந்நிறத்திலான நட்சத்திரங்கள் இவ்விமானங்களில் இன்றும் காணப்படுகின்றன.

ஃபிளாங்கேர்ஸ் கடல் மட்டத்தில் 743 கிலோமீட்டர் (850 மைல்) வேகத்தில் பறந்து மேலே ஆயிரத்தி இருநூற்றி முப்பத்தாறு கிலோமீட்டர் உயரத்தில் 2 ஆயிரத்தி 280 கிலோமீட்டர் வேகத்தில் பறந்து செல்லக்கூடியது. மேலெழுவதற்கு 500 மீட்டர் நீள ஓடுபாதை போதுமானது. இறங்கும்போது 600 மீட்டர் (1968 அடி) நீளமான ஓடுபாதை தேவைப்படும்.

4000 கிலோகிராம் (8 ஆயிரத்தி 818 இறாத்தல்) எடை கொண்ட நாசகாரக் குண்டுகளையும் ஏவுகணைகளையும் இவ்விமானங்களில் எடுத்துச் செல்லலாம். அதேவேளை, எதிரி விமானங்களை ஆகாயத்தில் தாக்கி அழிக்கக்கூடிய சக்தியும் இவ்விமானம் கொண்டுள்ளது. குண்டு வீச்சு விமானமாகவும் சண்டை விமானமாகவும் இயங்கவல்லது.

## வான் பாய்ச்சல்



↑ சமீபத்தில் புதிய ரக போர் விமானம் ஒன்றையும் ரசியா தயாரித்துள்ளது. ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலை அடுத்து வான்படையை உஷார் செய்து வருகிறது ரஷ்யா.

## தீ



→ சில வதந்திகள் கனவேகமாகப் பரவுவதை 'காட்டுத் தீபோல் கதை பரவியது' என்பார்கள்.

காடுகளில் தீப்பற்றிக் கொண்டால் கனவேகமாக அத்தீ பரவி பேரழிவை ஏற்படுத்திவிடும். இத்தீயைக் கட்டுப்படுத்துவதென்பது மிகவும் கடினம்.

மரங்கள் அருகருகே இருப்பதனாலும் காய்ந்த சருகுகள், சிறுசுள்ளிகள் பரவலாகச் செறிந்து கிடப்பதனாலும் சாதாரண சிகரெட் துண்டை அணைக்காமல் போட்டுவிட்டாலும், அல்லது தீக்குச்சியை தீ முனை அணையாமல் வீசி எறிவதனாலும் மிக எளிதாகத் தீ பிடித்துக் கொள்ளும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்தோனேஷியாவிலுள்ள சுமத்ரா காடுகள் பற்றிக் கொண்ட தீயினால் பலபேர் மாண்டனர்.

← அப்போது வான்முட்ட எழுந்த புகை, சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் பரவி, சுவாசிப்பதற்கான காற்று மண்டலத்தையே மாசடைய வைத்துவிட்டது.

காட்டுத்தீயின் கோரத்தாண்டவத்தையே படத்தில் பார்க்கிறீர்கள்.

## மறுபடியும



← விளையாட்டரங்கில் இந்த ஆண்டு கிரிக்கெட் ஆண்டு. உலகக் கோப்பை போட்டிகள் நடைபெற உள்ளதால் கிரிக்கெட் ரசிக ரசிகைகள் குஷியில் இருக்கின்றனர்.

இந்த தடவை வெற்றி பெறப்போகும் கெட்டிக்கார அணி எது? என்பது தான் மகா பெறுமதியான கேள்வி.

'இம்முறை நாம்தான் கதாநாயகர்கள்' என்கிறார் இந்திய அணி கப்டன் அசாருதீன்.

சென்ற உலகக் கோப்பைப் போட்டியில் இவரது விக்கெட்டுக்கு மட்டுமே குறிவைத்து எதிர் அணிகள் பந்துவீசின. இந்திய கிரிக்கெட் விமர்சகர்கள் இவர்மீதே குறிவைத்து சொல் எறிந்தார்கள். கல்லடியைவிட மோசமான சொல் வீச்சுக்கள்.

'அசார் கப்டனாக இருக்கும்வரை அணி ஜெயிக்கப் போவதில்லை. ஆளை மாற்றுங்கள்' என்று கூச்சல்கள்.

இம்முறை அதிஷ்டமான கப்டனாகவும், இவரைவிட்டால் வேறு ஆள் யாரும் கப்டனாக தேறுவது கடினம் என்றும் கூறத்தக்கதாகவும் சோபிக்கிறார் அசார்.

இம்முறை அசாரின் தலைமையில் உலகக் கோப்பைப் போட்டிகளில் ஒருகை பார்க்க தயாராகிறது இந்திய அணி. டெண்டுல்கர், கங்குலி போன்றோர் பிரகாசித்துக் கொண்டிருப்பதால் அணி புதிய நம்பிக்கை பெற்றிருக்கிறது.

ஆனாலும் அடிக்கடி சோர்ந்து விடும் பலவீனத்தை களையவேண்டும்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஷானுஜா 08.12.1998

ஜெனேசீலன்–ஜெயசுதா தம்பதியினரின் செல்வப் புதல்வி ஷானுஜா தனது முதலாவது பிறந்தநாளை 08.12.1998 அன்று FLORA (NORWAY) இல் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, உடுவில் அப்பப்பா, நோர்வேயில் அம்மப்பா, அம்மம்மா, பாட்டி, அகல்யா அன்ரி, றெபி அன்ரி, தீபா அன்ரி மற்றும் நவுண்டில் பாட்டா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்புடன் பல்கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். தகவல்: திருமதி மகேந்திராராஜா (கொழும்பு)